விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபத்து நான்கு — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 பங்குனி 06 திங்கட்கிழமை (19.03.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 091

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## தமிழக கொந்தளிப்பால் மனம் மாறும் புதுடில்லி!

### அமெரிக்க தீர்மானத்தை ஆதரிக்க யோசனை



தமிழக அரசியல் கட்சிகளின் தீவிரமான அழுத்தங்களை அடுத்து ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 19-வது கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா முன்வைத்துள்ள பிரேரணையை ஆதரிக்க இந்தியா முடிவு செய்துள்ளதாக சென்னையிலிருந்தும், புதுடில்லியிலிருந்தும் கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவின் தீர்மானம் தொடர்பில் இந்திய மத்திய அரசு தனது நிலையை நாடாளுமன்றில் அடுத்த வாரம் தெளிவுபடுத்தும் என அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தப் பிரச்சினையில் தெளிவான நிலை எடுக்காமல் காலம் (24ஆம் பக்கம் பார்க்க)

## ஜெனிவாவில் கடும் வாக்குவாதம்

(ஜெனிவா)

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரின் பக்க நிகழ்வாக நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டத்தில் இலங்கைக் குழுவிற்கும் அனைத்துலக மன்னிப்புச் சபையின் ஐ.நா.வுக்கான பிரதிநிதி பீற்றர் ஸ்பிளினருக்கும் இடையில் கடும் வாக்குவாதம் இடம்பெற்றுள்ளது.

இலங்கை தரப்பு பக்க நிகழ்வை வழங்கிய ஜாவிட் யூசுப், ராஜீவ விஜேசிங்க, ஜீவன் தியாகராஜா ஆகியோரை, நாயும் குதிரைக்குட்டியும் விளையாட்டு விளையாடுவதாக அனைத்துலக மன்னிப்புச் சபையின் பிரதிநிதி ஸ்பிளினர் குறிப்பிட்டார்.

இதற்கு இலங்கைத் தரப்பு கோபத்துடன் பதிலளித்தது. ஸ்பிளினரின் கருத்தை விலக்கிக் கொள்ளுமாறு கேட்டுக்கொண்ட ஜீவன் தியாகராஜா பக்க நிகழ்வு யாரையும் இகழ்வதற்கானது அல்ல என்றும் ஸ்பிளினர் தவறான முகவருக்கு பணியாற்றியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். இதனால் இருதரப்புக்குமிடையில் கடுமையான வாக்குவாதம் இடம்பெற்றது.

அதேவேளை ஊடக சுதந்திரம் மனித உரிமைகள் நிலை தொடர்பாக இலங்கைத் தரப்பு வெளியிட்ட (23ஆம் பக்கம் பார்க்க)

## பாக். தளபதி இலங்கை விஜயம்

பாகிஸ்தானின் கூட்டுப் படைகளின் தளபதி ஜெனரல் காலித் சமீம் வைன் 4 நாள் விஜயத்தை மேற்கொண்டு இலங்கைக்கு வந்துள்ளார்.

எதிர்வரும் 22-ம் திகதிவரை இலங்கையில் தங்கியிருக்கவுள்ள இவர், ஜனாதிபதி, பாதுகாப்பு செயலர் மற்றும் முப்படைகளின் தளபதிகளையும் சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளார். அத்துடன் கிளிநொச்சி, திருகோணமலை உள்ளிட்ட வடக்குகிழக்குப் பகுதிக்கும் அவர் வரவுள்ளதாக எதிர்பார்க்கப்படுகிறது. (எ-8)

## அமெரிக்காவும் இலங்கையும் வாக்கு வேட்டையில் தீவிரம்

(ஜெனிவா)

உறுப்புநாடுகளின் வாக்குகளைத் திரட்டுவதில் அமெரிக்காவும் இலங்கையும் தீவிர முனைப்புக்களில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு அறிக்கைப் பரிந்துரைகள் முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என வலியுறுத்தி அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றத் திட்டமிட்டுள்ளன. இத்தீர்மானத்தை தோற்கடிக்கும் முனைப்புக்களில் இலங்கைப் பிரதிநிதிகள் ஈடுபட்டுள்ளனர்.

47 உறுப்பு நாடுகளில் குறைந்த பட்சம் 24 நாடுகளின் ஆதரவினைப் பெற்றுக் கொள்ள அமெரிக்கா பல்வேறு முயற்சிகளை எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சீனா, ரஷ்யா, கியூபா, பாகிஸ்தான் உள்ளிட்ட பத்து நாடுகள் ஏற்கெனவே இலங்கைக்கு (23ஆம் பக்கம் பார்க்க)

## பொதுமக்கள் மீது கடற்படை தாக்குதல்

முல்லைத்தீவு மாவட்டம் கருநாட்டுக்கேணிக்கும் கொக்கிளாய்க்கும் இடையில் இடையில் அமைந்துள்ள சிறுவில்வெட்டை எனும் இடத்தில் நேற்று மாலை 5.30 மணியளவில் மாடு மேய்த்துக் கொண்டிருந்த பொது மக்கள் மீது கடற்படையினர் கண்மூடித்தனமாகத் தாக்கியுள்ளனர். இதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வன்மையாகக் கண்டிப்பதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியா ஆதரிக்கத் தவறினால் அது தமிழர்களை புண்படுத்தும்


### சம்பந்தன் தெரிவிப்பு

ஜெனிவாவில் நடைபெறும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் அமெரிக்கா கொண்டுவந்திருக்கும் பிரேரணையை இந்தியா ஆதரிக்கத் தவறினால், அது இலங்கைத் தமிழர்களைப் புண்படுத்துவதாக அமையும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்திருக்கின்றார்.

அமெரிக்கா கொண்டு வந்திருககும் பிரேரணைக்கு எதிரான நிலைப்பாட்டையே இந்தியா கொண்டிருப்பதாகத் தெரிகின்றது. ஆனால் இந்தியாவின் இவ்வாறான நிலைப்பாடு இலங்கைத் தமிழர்களைப் புண்படுத்துவதாக அமையும் எனவும் கொழும்பு ஆங்கில வாரப் பத்திரிகை ஒன்றுக்கு சம்பந்தன் தெரிவித்திருக்கின்றார்.

இந்தியா ஒரு அண்டை நாடு. அவர்கள் கவனமாக ஆராய்ந்தே தமது முடிவை எடுப்பார்கள் என நான் நினைக்கின்றேன். முக்கியமான பாத்திரம் ஒன்றை வகிக்கக்கூடிய வகையிலான தீர்மானம் ஒன்றையே அவர்கள் எடுப்பார்கள் என நான் (23ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பின் தலைமையை இல்லாதொழிக்கத் திட்டம்!



### மாவை எம்.பி பாய்ச்சல்

ஜெனிவா விவகாரத்தினை கையிலெடுத்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைமையினை இல்லாமல் செய்யும் நடவடிக்கையில் இணையத்தளங்களும் உள்ளூர் ஊடகங்களும் செயற்பட்டு வருவதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற, கூட்டமைப்பு ஏன் ஜெனிவா செல்லவில்லை என்ற தொனிப்பொருளிலான கருத்தூட்டல் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் தனதுரையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜெனிவா செல்லாமை தொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. வெளிநாடுகளில் 100 இணையத் (23ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் ஆதரவாளர்கள்தான் மனிதவுரிமை பற்றி பேசுகின்றனர்

### அமைச்சர் பசில் சாடல்



தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி முக்கியஸ்தர்களை கொலை செய்த புலிகள் இயக்க ஆதரவாளர்கள்தான் இன்று-மனித உரிமை பற்றி பேசுகின்றனர் என அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்று நடைபெற்ற தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் முதலாவது தேசிய மாநாட்டில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் பசில் ராஜபக்ஷ தனதுரையில் மறைமுகமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும், விடுதலைப் புலிகளையும் சாடி உரையாற்றியுள்ளார்.

உணர்ச்சிமயமான வசனங்களைப் பேசி தேர்தல் காலங்களில் வாக்கு கேட்டு வீடுகளுக்கு வருபவர்களைப் புறக்கணிக்குமாறு பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தனதுரையில் (23ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு-கிழக்கு இணைப்புக்கு எதிராக கிழக்கில் தீர்மானம்

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி இனப்பிரச்சினைக்கு தீர்வாக ஏனைய தமிழ்க் கட்சிகளினால் முன்வைக்கப்பட்டுள்ள வடக்கு கிழக்கு மாகாணங்களின் இணைப்பை முற்றாக நிராகரிப்பதாக அறிவித்துள்ளது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு கல்லடியில் நடைபெற்ற அக்கட்சியின் முதலாவது தேசிய மாநாட்டில் இது தொடர்பான தீர்மான மொன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு இணைப்பு என்பது கிழக்கு மக்களின் சுயவிருப்பத்திற்கும் அரசியல் அபிலாஷை மற்றும் இறைமைக்கும் எதிரானது என்றும் இந்த தீர்மானத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் ஏற்கெனவே பேச்சு வார்த்தைகள் (23ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# நாமலுக்கு இந்திய விருது கொந்தளிப்பில் தமிழ்நாடு!



(சென்னை)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகனும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷவுக்கு சிறந்த சர்வதேச இளைஞன் என்ற விருதினைவழங்க இந்திய மத்திய அரசு அனுமதியளித்தது தொடர்பில் தமிழகத்தில் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது.

டில்லியில் அடுத்தவாரம் இடம்பெறவுள்ள நிகழ்வில் இவ்விருதினை பெறச்செல்லும் நாமல் ராஜபக்ஷவிற்கு இஸட் பாதுகாப்பு அளிப்பதாகவும் மத்தியரசு அறிவித்துள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற தமிழினப்படுகொலையை கண்டித்தும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை போர்க்குற்றவாளியாக அறிவிக்க வேண்டும் எனவும் தமிழக மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

அத்துடன் ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் கொண்டுவரப்பட்டுள்ள இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும் என கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால் தமிழக அரசியல் கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன.

இலங்கை விவகாரம் தொடர்பிலான மத்தியரசின் அணுகு முறையை தமிழகத்தின் அனைத்துக் கட்சிகளும் கடுமையாக கண்டித்துவருகின்றன.

இந் நிலையில் நாமல் ராஜபக்ஷவுக்கு சிறந்த சர்வதேச இளைஞன் என்ற விருதினை வழங்கும் வைபவத்தை நடத்த அனுமதித்ததோடு அவருக்கு இஸட் பாதுகாப்பு வழங்கவும் மத்தியரசு முன்வந்துள்ளமை தொடர்பில் தமிழகம் கடும்கோபம் அடைந்துள்ளதாக அங்கிருந்து கிடைக்கின்ற செய்திகள் தெரிவிக்கின்றன. (எ-8)

# பல்கலைக்கழக தகைமை பெற்ற 46 பேர் சிறைச்சாலைகளில்!

(கொழும்பு)

உயர்தரம்மற்றும்பல்கலைக்கழககல்வித்தகைமையுடைய ஆயிரத்து 300 பேர்சிறைத்தண்டனை அனுபவித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாடுமுழுவதிலும் உள்ளசிறைச்சாலைகளில் தண்டனை அனுபவித்துவரும் ஆயிரத்து 353 கைதிகள் உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் எனவும் 5ஆயிரத்து 536 கைதிகள் சாதாரண தரப்பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் எனவும் குறிப்பிடப்படுகிறது.

பல்கலைக்கழக பரீட்சைகளில் சித்தியடைந்த 46 கைதிகளும் இதில் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது. நாட்டில் மொத்தமாக 32 ஆயிரத்து 128 கைதிகள்தண்டனைஅனுபவித்துவருவதாகவும் இதில் 2ஆயிரத்து 848 கைதிகள் எதுவித கல்வித்தகைமையும் அற்றவர்கள் எனவும் குறிப்பிடப்படுகிறது.

சிறைக் கைதிகளின் கல்வித் தகைமையை அதிகரிக்கும் நோக்கில் சிறைச்சாலைகள் அமைச்சு ஹோமாகம வட்டரக்க சிறைச்சாலையில் பாடசாலை ஒன்றை ஆரம்பித்துள்ளது. (எ-8)

# ஈபிடிபி உறுப்பினர் வெட்டிக் கொலை!

(திருகோணமலை)

திருகோணமலை, குச்சவெளியின் பெரிய குளம் பகுதியில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் கழுத்து நெரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். அவரது சடலத்திற்கு அருகில் இருந்து எல்.ரீ.ரீ.ஈ. என எழுதப்பட்ட காகிதத்தையும் பொலிஸார் கண்டெடுத்துள்ளனர்.

மூதுரைச் சேர்ந்த ரகு நடன் அல்லது முத்து என மேற்படி நபர் அடையாளம் காணப்பட்டுள்ளார். அவரது சடலம் முச்சக்கரவண்டியின் உள்ளே காணப்பட்டது. காலைவேளையில் மேற்படி நபர் இனந்தெரியாத இரு நபர்களுடன் சென்றதாக ஆரம்பக்கட்ட விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது.

மேற்படி நபர் கடந்த 15 வருடங்களாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயற்பாட்டு உறுப்பினராக இருந்தவர் எனவும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல் காரணமாக இவர் மறைந்திருந்துள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

யுத்தம் முடிபடைந்த பின்னர் மேற்படி நபர் முச்சக்கரவண்டி சாரதியதாக தனது தொழிலை மேற்கொண்டு வந்தார் என கூறப்பட்டது. (எ-8)

# அமெரிக்காவின் தீர்மானத்தை தோற்கடிக்க பெரும் முயற்சி

## இலங்கை சார்பில் பலர் களத்தில்

(கொழும்பு)

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்கா கொண்டு வந்துள்ள தீர்மானத்தைத் தோற்கடிக்கும் இராஜதந்திர நடவடிக்கைகளை ஜெனிவாவில் இலங்கை தீவிரப்படுத்தியுள்ளதாக கொழும்பு ஆங்கில வாரஇதழ் ஒன்று நேற்று தகவல் வெளியிட்டுள்ளது.

இந்த நடவடிக்கைக்காக அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், இராஜதந்திரிகள், ஆளும் கட்சி அரசியல்வாதிகள், சட்டநிபுணர்கள் என்று பெரும் எண்ணிக்கையானோர்களை அரசாங்கம் களமிறக்கி விட்டுள்ளது.

இவர்கள் 24 மணி நேரமும் தொடர்ச்சியாக பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்த இராஜதந்திர நடவடிக்கைகளின் ஒரு கட்டமாக, மனித உரிமைகள் தொடர்பான இலங்கை ஜனாதிபதியின் சிறப்புத்தூதுவரான அமைச்சர் மகிந்த சமரசிங்க, அமெரிக்காவின் பின்னணியுடன் கொண்டுவரப்படும் தீர்மானத்தைத் தோற்கடிப்பதற்கான பொதுவான மூலோபாயம் குறித்து கடந்த வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் சாதகமான மனநிலையில் உள்ள நாடுகளின் தூதுவர்களுடன் கலந்துரையாடியுள்ளார்.

சீனா, அல்ஜீரியா, கியூபா, பாகிஸ்தான், செனகல், ரஷ்யா, பிறேசில், ஈக்வடோர் உள்ளிட்ட 15 இத்தகைய நாடுகளின் தூதுவர்களை அவர் சந்தித்துள்ளார்.

பெர்லினுக்கான இலங்கை தூதுவராக உள்ள சரத் கொங்ககேயும் பல தூதுவர்களைச் சந்தித்துள்ளார்.

பாகிஸ்தான், கியூபா இலங்கை ஆகிய நாடுகள் இணைந்து, தயாரித்த அறிக்கை ஒன்றை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளின் தூதுவர்களின் கையொப்பத்துக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மகிந்த சமரசிங்க கூறினார்.

அதேவேளை, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியனவும் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கான தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவை உறுப்பு நாடுகளின் தலைநகரங்களுக்கு அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய இராஜதந்திரிகள் பயணம் மேற்கொண்டுள்ளனர்.

இவற்றில் இலங்கைக்கு ஆதரவு வெளியிட்டுள்ள நாடுகள் சிலவும் அடங்கியுள்ளன. இவற்றிடம் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களிக்குமாறும் இராஜதந்திரிகள் கோரியுள்ளனர்.

அணிசேரா நாடுகள், இஸ்லாமிய நாடுகளின் அமைப்பு மற்றும் பல ஆபிரிக்க நாடுகள் என்பன இலங்கைக்கு ஆதரவு வெளியிட்டுள்ளன.

ஆனால் பல ஆபிரிக்க நாடுகள் தற் போது எந்த முடிபையும் எடுக்க முடியாத சபல நிலையில் உள்ளதாக இராஜதந்திர வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

எனினும் தீர்மானத்தைத் தோற்கடிக்கத் தேவையானளவு நாடுகளின் ஆதரவைப் பெறும் தீவிர இராஜதந்திர முயற்சியில் இலங்கை ஈடுபட்டுள்ளது.

அதேவேளை அச்சுறுத்தலுக்குள்ளான அனைத்துலக மக்கள் சமூகம் மற்றும் சிறுபான்மை உரிமைக் குழுவினால் இலங்கையில் மனித உரிமைகள் என்ற தலைப்பிலான பக்க நிகழ்வு ஒன்று இன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இந் நிகழ்வில் இலங்கையின் கொலைக்களங்கள் - தண்டிக்கப்படாத போர்க்குற்றங்கள் என்ற ஆவணப்படம் திரையிடப்படவுள்ளதுடன் காணாமல் போனவரின் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரும் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார்.

கடத்தப்பட்டு காணாமல் போன ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி பிரதீபா எக்னெலிகொட இந்த நிகழ்வில் உரையாற்றலாம் என்று இலங்கை பிரதிநிதிகள் நம்புகின்றனர்.

அதேவேளை சனல் 4 வெளியிட்டுள்ள புதிய வீடியோ தொடர்பாக விளக்கமளிக்கவும் அதன் பரப்புரையை முறியடிக்கும்வகையிலும் நாளை செவ்வாய்கிழமை அரசும் பக்க நிகழ்வொன்றை ஒழுங்கு செய்துள்ளது.

இந் நிலையில் அனைத்து வகையிலுமான பாகுபாடுகள் மற்றும் இனவாதத்திற்கு எதிரான அனைத்துலக அமைப்பினால் ஒழுங்கு செய்யப்பட்ட பக்க நிகழ்வில் இராணுவ மயப்படுத்தப்பட்டுள்ள வடக்கில் வாழும்சிறு பான்மையினப் பெண்கள் பாலியல் துண்புறுத்தல்களை எதிர்நோக்கியுள்ளதாக அதன் தலைவர் நிமல்கா பெர்ணான்டோ கூறியிருந்தார்.

தான் இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை மீறல்களை ஜெனிவாவில் வெளிப்படுத்தியதற்காக இலங்கை திரும்பும்போது தனது உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என்றும் அவர் கூறியுள்ளார். (எ-8)

# மோதலில் காயம்

(கனகபுரம்)

கிளிநொச்சியில் உள்ள மதுபானசாலையில் ஏற்பட்ட மோதலில் ஒருவர் தலையில் படுகாயமடைந்தார்.

இச்சம்பவம் நேற்று கிளிநொச்சி கோவிந்தன் கடைச் சந்திப்பகுதியில் இடம்பெற்றுள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த செல்லையா ரமேஷ் (25) என்பவரே தலையில் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மது போதையில் ஏற்பட்ட தகராறே இதற்கு காரணம் என தெரிவிக்கப்பட்டது. (எ-8,259)

# பொதுநூலக திறப்புவிழா

(கிளிநொச்சி)

கிளி. கரைச்சி பிரதேச சபையின் வட்டக்கச்சி பொதுநூலக திறப்பு விழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபைச் செயலாளர் கு.தவசோதி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் கிளிநொச்சி கரைச்சி பிரதேசத் சபைத் தலைவர் நா.வை.குகராஜா பிரதம விருந்தினராக கலந்து நூலகத்தினை திறந்து வைப்பார்.

சிறப்பு விருந்தினர்களாக கிளி.கரைச்சி பிரதேச சபையின் துணைத்தலைவர் வ.நகுலேஸ்வரன், கிராம சேவையாளர்களான நீ.யோன் ஜெகநாதன், வ.சிவபாலன், கௌரவ விருந்தினர்களாக கிளி.கரைச்சி பிரதேச சபை உறுப்பினர்கள் வே.செல்லத்துரை, சி.சிவச்செல்வன், வி.சுவிஸ்கரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (எ)

# குடும்ப பெண்ணை தாக்கி 10 பவுண் நகை கொள்ளை

(கரவெட்டி)

குடும்பத்தலைவர் கடற் தொழிலுக்கு சென்ற சமயம் வீட்டினுள் நுழைந்த திருடர்கள் குடும்பப்பெண்ணை கூறிய ஆயுதங்களால் தாக்கிவிட்டு 10 பவுண் பெறுமதியான நகைகளை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். இச் சம்பவம் நேற்று முன்தினம் அதிகாலையில் வடமராட்சி இன்பர்சிட்டி பகுதியில் இடம்பெற்றுள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த ஆனந்தராசா செல்வசோதி (வயது 35) என்ற குடும்பப் பெண்ணே தலையில் கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டு படுகாய மடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதேவேளை ஒரு மாதத்திற்கு முன்னர் இதே இடத்தில் உள்ள வேறொரு வீட்டில் 48 பவுண் பெறுமதியான நகைகள் கொள்ளையடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-8,24)

EASY ENGLISH
ஆசிரியர்: சண்முகம் முத்துலிங்கம்
YAALH ENGLISH ACADEMY
யாழ். நகரில் வகுப்பிட அனுசரணை:
புதிய உயர் கல்லூரி
விபரங்களுக்கு :0773212711
(7379)

காணி விற்பனைக்கு
சாவகச்சேரியில் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தரகர் தேவையில்லை.
தொடர்பு:0777572905
(7754)

பாடசாலை மாணவர்களுக்கு மாபெரும் விலைக் கழிவு
கடந்த 30 ஆண்டுகளாக யாழ். நகர் மக்களின் தரச்சிறப்புமிக்க காலுறைகள்(SOCKS)
SILVER SHIELD SOCKS
பாடசாலை மாணவர்களுக்கும், அலுவலக ஊழியர்களுக்கும், சிறியோர் முதல் பெரியோர் வரை, சகல தரத்திலும், சகல அளவுகளிலும் பெற்றுக்கொள்ள
குறிப்பு:- பாடசாலைகளுக்கும், மொத்த வியாபாரிகளுக்கும் மேலதிக கழிவு வழங்கப்படும்.
ஸ்ரீ முருகன்
303, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 5392
(அ-611)

# இன்று ஒரு தகவல்

## விலங்குகள் வாழ்ந்து காட்டும்

ஒரு காட்டிலே வரிக்குதிரைகள் கூட்டம் மேய்ந்து கொண்டிருந்தது. அச்சமயம் பசியுடன் ஒரு சிங்கம் அந்தப்பக்கமாக வந்தது. அவ்வளவுதான்.

அக்கூட்டத்தை விரட்ட ஆரம்பித்தது. கூட்டம் சிதறி ஓட ஆரம்பித்தது. அவ்வேளையில் சிங்கம் ஒரு வரிக்குதிரையைப் பிடித்தது.

அதன்பின் ஏனைய குதிரைகள் எல்லாம் சிறிது கூட பயப்படாமல் வழக்கம் போல மேய ஆரம்பித்தது. பாய்ந்து கொண்டு அவ்விடத்தை விட்டு ஓடவில்லை.

மனிதனுக்கு ஆறு அறிவு. விலங்குகளுக்கு ஐந்து அறிவு. இருந்தாலும் மிருகங்களிடமிருந்து மனிதன் கற்றுக்கொள் ளவேண்டிய பாடம் அதிகம் இருக்கிறது. முக்கியமாக ஐந்து பாடங்கள் அவைகளிடமிருந்து கற்றுக் கொள்ளவேண்டும்.

மனிதன்தான் எதற்கு எடுத்தாலும் பயப்படுகிறான். நடந்த தவற்றை நினைத்து பயப்படுகிறான். நடக்கப்பபோவதை எண்ணி பயப்படுகிறான். இல்லாத ஒன்றை நினைத்துப் பயப்படுகிறான். மற்றவர்களைப் பார்த்துப் பயப்படுகிறான். மரணத்தை எண்ணிப் பயப்படுகிறான்.

ஆனால், விலங்குகள் அப்படியில்லை. தங்கள் உயிருக்கு ஆபத்து வருமோ... அப்படியென்ற நிலையிலேதான் விலங்குகள் பயப்படும். ஆபத்து நீங்கினால், அதன்பின் கவலைப் படாமலே எப்போதும் போல வாழ ஆரம்பித்து விடும். இது நாம் அனைவரும் கற்றுக் கொள்ளவேண்டிய ஒரு பாடம்.

விலங்குகள் தோல்வியைக் கண்டு கவலைப்படுவதில்லை. மனிதர்கள் த்வறவிட்ட பேருந்துக்காக கவலைப் படுவார்கள். பரீட்சையிலே தோல்வியா? கவலை... தேர்தலிலே தோல்வியா? கவலை... ஒரு அரிய சந்தர்ப்பம் நழுவிப் போய்விட்டதா உடனே கவலை...

ஒரு பூனை ஒரு எலியைத் துரத்திக் கொண்டு ஓடுகிறது. எலி சாமர்த்தியமாக வளைக்குள்ளே நுழைந்து கொள்கிறது. உடனே அந்தப் பூனை... நாம் தோற்றுப் போய் விட்டோமே என்று ஒரு மூலையிலே உட்கார்ந்து அழாது. எல்லோரிடமும் சொல்லி புலம்பாது. மறுபடியும் வேட்டையாடி தனக் குத்தோவையான எலியைப் பிடிக்கிறது.

மூன்றாவதாக விலங்குகள், குழந்தைகளை முறையாக வளர்க்கிறது. விலங்குகள் ஆரம்ப காலத்திலே அதனது குட்டிகளுக்கு உணவு கொண்டு வந்து கொடுக்கிறது.

குட்டி சிறிது வளர ஆரம்பித்ததும் எப்படி வேட்டையாடுவது... எவ்வாறு நீந்துவது... ஓடுவது என்ற விபரங்களையெல்லாம் சொல்லிக் கொடுத்துவிடும்.

அதன்பின்னர் குட்டிகள் தானாகவே பிழைத்துக் கொள்ளும் என்ற முடிவில் தனியாக விட்டுவிடும். பின்பு குட்டிகளைத் திரும்பிக்கூட பார்க்காது. குட்டிகளும் தனித்துப் போராடி வாழ்ந்து காட்டும்.

மனிதன் அப்படியில்லை. மகனையும் விடுவதில்லை. பேரனையும் விடுவதில்லை. கடைசிவரைக்கும் கூடவே இருந்து கொண்டு அப்படி செய்; இப்படி செய் என்று சொல்லுவான். உனக்கு அனுபவம் போதாது. அறிவு வளரவில்லை. பெரியவர்கள் சொல்வதைக் கேள் என்பார்கள்.

இப்படியாக ஏதாவது சொல்லிக் கொண்டு சுயமாக அடுத்த தலைமுறையினரின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போடுவது மனிதனுடைய இயல்பு. விலங்குகள் இப்படியில்லை.

நான்காவது... விலங்குகள் எதிர்காலத்தை நினைத்து அஞ்சுவதில்லை. நாளைய தினம் நல்லபடியாக விடிய வேண்டும் என்ற கவலை நமக்கு ஏற்படும். எதிர்காலம்... அடுத்ததலை முறை... இப்படியாகக் கற்பனை செய்து பயந்து அதற்காக சேமிக்க வேண்டும் என்றெல்லாம் படாத பாடுபடுவான்.

சிங்கம் பசியெடுத்த பின்புதான் இரைதேட ஆரம்பிக்கும். அவ்வளவு தன்னம்பிக்கை.

எப்போதோ வரப்போகும் தேவையைக் கண்டு இப்போதே நடுங்குவது கிடையாது. நிகழ்காலத்தில் வாழக்கற்றுக் கொள்ளுங்கள் என்று பெரிய ஞானிகள் எல்லாம் நமக்குப் புத்திமதி சொல்வார்கள்.

இப்படி இவை அனைத்தையும் நாம் விலங்குகளிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# வன்னி மாவட்ட பாடசாலைகளுக்கு களஞ்சிய அறைகள் அமைக்க கோரிக்கை

(மல்லாவி)

வன்னி மாவட்டத்தில் உள்ள முல்லை., துணுக்காய், கிளிநொச்சி, மடு, மன்னார், வவுனியாவடக்கு, வவுனியா தெற்கு ஆகிய கல்வி வலயங்களுக்குட்பட்ட பாடசாலைகளில் உலக உணவுத்திட்டத்தால் வழங்கப்படும் உணவுப் பொருட்கள் மற்றும் அரசாங்கத்தினால் வழங்கப்படும் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களினை பாதுகாப்பதற்கான களஞ்சிய அறைகள் இல்லாது உணவுப் பொருட்கள் பாதிப்படைவதாக பாடசாலை அதிபர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவது, வன்னியில் இடம்பெற்ற போர் நடவடிக்கையின் போது அநேக பாடசாலைகள் சேதமடைந்த நிலையில் வகுப்பறைக் கட்டடங்கள், ஆசிரியர்களின் ஓய்வகம், தொழில்நுட்பப் பாடசெயற்பாட்டு அறைகள் என்பன முக்கியமாக சேதமடைந்துள்ளன.

பாடசாலைக்கு அரசாங்கத்தாலும் பொது அமைப்புக்களாலும் மாணவர்களுக்காக வழங்கப்படுகின்ற கற்றல் உபகரணங்கள், செயற்பாட்டு உபகரணங்களை பாதுகாப்பாக களஞ்சியப்படுத்த முடியாத சூழ்நிலை காணப்படுகின்றது.

திறந்த வெளி வகுப்பறைகளுக்குள் சில பாடசாலைகளில் பொருட்கள் களஞ்சியப் படுத்தப்படுவதால் அவை களவாடப்படுகிறது.

இதேபோன்றே உலக உணவுத்திட்டத்தின் மூலம் மாணவர்களின் மதிய உணவுக்காக வழங்கப்படும் அரிசி, பருப்பு உட்பட ஏனைய உணவுப் பொருட்களையும் பாதுகாக்க முடியாதுள்ளது.

எலி, அணில் போன்றன இவற்றை சேதப்படுத்தி வருகின்றன.

எனவே, இது தொடர்பாக சம்பந்தப்பட்ட கல்வி அதிகாரிகள் யாழ். மாவட்டம் உட்பட ஏனைய மாவட்டங்களில் அமைக்கப்பட்டு வரும் களஞ்சிய அறைகள் போன்று போரினால் பாதிக்கப்பட்டுள்ள வன்னிப் பாடசாலைகளுக்கும் காலம் தாழ்த்தாது உடன் அமைத்துத்தர ஆவன செய்ய வேண்டுமென பாடசாலை சமூகம் கோரிக்கையொன்றை முன்வைத்துள்ளது. (2-3-15)

# காஸ் சிலிண்டர் வாகனத்துடன் சொகுசு பேருந்து மோதி விபத்து

ஏ-9 வீதியூடாக கொழும்பிலிருந்து யாழ்.நோக்கி காஸ் சிலிண்டர்களை ஏற்றிக் கொண்டு வந்த வாகனத்துடன் அதனைத் தொடர்ந்து வந்து கொண்டிருந்த பயணிகள் சொகுசு பேருந்து மோதிக் கொண்டதில் பேருந்து சாரதி உட்பட நால்வர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் காலை ஓமந்தை மத்திய கல்லூரிக்கு முன்பாக இடம்பெற்றுள்ளது. கொழும்பிலிருந்து யாழ்.நோக்கி வந்துகொண்டிருந்த காஸ் சிலிண்டர் வாகனத்துடன் தொடர்ந்து பின்னால் பயணித்த பயணிகள் சொகுசு பேருந்து மோதியதில் அதிலிருந்த பேருந்து சாரதியின் காலில் முறிவு ஏற்பட்டதுடன் அதில் பயணித்த பயணிகள் மூவருக்கும் படுகாயம் ஏற்பட்டது. இதனை அடுத்து காயமடைந்த அனைவரும் வவுனியா ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (2-7)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 60 | 50 |
| உருளைக்கிழங்கு | 65 | 70 | 65 |
| பச்சைமிளகாய் | 35 | 30 | 30 |
| தக்காளி | 15 | 20 | 20 |
| மரவள்ளிக் கிழங்கு | 30 | 30 | 30 |
| கோவா | 20 | 20 | 15 |
| கரட் | 40 | 40 | 40 |
| பூசணி | 30 | 30 | 25 |
| புடோல் | 25 | 40 | 20 |
| வாழைக்காய் | 30-35 | 20 | 25 |
| சின்ன வெங்காயம் | 60 | 60 | 50 |
| பெரிய வெங்காயம் | 65 | 70 | 60 |
| பாகற்காய் | 80 | 80 | 80 |
| வெண்டிக்காய் | 50 | 40 | 40 |
| கருணைக் கிழங்கு | - | 70 | 50 |
| பயற்றங்காய் | 70-90 | 80 | 60 |
| லீக்ஸ் | - | 70 | 70 |
| பீற்றூட் | 25 | 20 | 15 |
| கறிமிளகாய் | - | 60 | 70 |
| முருங்கைக்காய் | 200-250 | 300 | 200 |
| போஞ்சி | 40 | 60 | 40 |
| கத்தரிதம்புள்ள | - | 40 | 30 |
| கீரை - 1 பிடி | 08-10 | 20 | 10 |
| தேசிக்காய் | 35-40 | 60 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 15-30 | 30 | 25 |
| வெங்காயப்பூ | - | 90 | 45 |

# இராசி பலன்

19.03.2012
(பங்குனி 06, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6.18 மணிக்கு
துவாதசி முன்னிரவு 6.43 மணிவரை
திருவோணம் முற்பகல் 7.39 மணிவரை
இராகுகாலம் 7.48-9.18 மணிவரை
சுபநேரம் 12.18-1.48 மணிவரை
அமிர்த சித்தம்

**மேடம்** — உத்தியோகத்தில் நன்மதிப்பு ஏற்படலாம், குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும், செய் தொழிலில் உயர்வு ஏற்படும், தூரதேசச் செய்திகள் மகிழ்ச்சி தரும், போசன சுகமுண்டு.

**இடபம்** — முன்னோர் சொத்துக்களால் நன்மையுண்டு, மனக் குழப்பம் அகன்று மனதில் இனம்புரியாத மகிழ்ச்சி குடிகொள்ளும், புதிய திருப்பங்கள் ஏற்படலாம், பயணங்களால் பலனுண்டு.

**மிதுனம்** — பேச்சில் நிதானம் தேவை, பயணங்களில் விழிப்புணர்ச்சி அவசியம், உடல் நலனில் அக்கறை காட்ட வேண்டிய நாள், பிறருக்கு உதவுவீர்கள், போசன சுகமுண்டு, வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள்.

**கடகம்** — உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழும் நாள், உங்களின் கருத்துக்களை பலரும் கேட்டு நடக்க முன்வருவர், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், கௌரவமான நாள், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும்.

**சிங்கம்** — கடிதங்கள் மூலம் கனிவான செய்திகள் வந்து சேரலாம், ஆரோக்கியமான நாள், அரசியல் வாதிகளின் செல்வாக்கு வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும்.

**கன்னி** — சுறுசுறுப்பாக செயற்படுவீர்கள், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், புத்திரலால் பெருமைகள் வந்துசேரலாம், புண்ணிய கருமங்களில் நாட்டம் காட்டுவீர்கள்.

**துலாம்** — நீண்ட நாளாக வாங்க நினைத்த பொருளை வாங்கி மகிழ்வீர்கள், தாய்வழி ஆதரவு பெருகும், பணத்தேவைகள் பூர்தியாகும்நாள், பேச்சில் கனிவு பிறக்கும், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்** — பெரிய மனதர்கள் வீடுதேடி வரலாம், பணத்தேவைகள் பூர்த்தியாகும், நண்பர்கள் மூலம் நல்ல தகவல்கள் வந்து சேரலாம், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள்.


**தனுசு** — எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், இல்லத்தில் சுபநிகழ்வுகள் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும், வாக்கு மேன்மையுண்டு, அரசு வழி அனுகூலமுண்டு.

**மகரம்** — பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டும் எண்ணம் மேலோங்கும், தேவையற்ற கற்பனைகள் மனதில் குடிகொள்ளும், போசன சுகமுண்டு, உடல் நலம் சீராகும்.

**கும்பம்** — வீடு மாற்றம், இடமாற்றம் பற்றிய சிந்தனை மேலோங்கும், புண்ணிய கருமங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும், சுப செலவுகள் அதிகரிக்கும்.

**மீனம்** — அதிர்ஷ்டவசமான நாள், கூட்டு முயற்சி வெற்றிதரும், நண்பர்கள் மூலம் நல்ல செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்திதரும், போசன சுகமுண்டு.

வளவன்



தேசிய சேமிப்பு வங்கி தனது 40ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடி வருகிறது. இதற்கமைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வுக்கு தேசிய சேமிப்பு வங்கியின் தலைவர் பிரதீப் காரியவசம் நினைவுச் சின்னமொன்றை கையளித்தார்.

இந்நிகழ்வில் பிரதி நிதியமைச்சர் கீதாஞ்சன குணவர்த்தன, மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் மற்றும் தேசிய சேமிப்பு வங்கி உயரதிகாரிகளும் கலந்து கொண்டனர்.




## றெட் புல் ஸ்தாபகர் காலமானார்



தாய்லாந்து நாட்டைச் சேர்ந்த பிரபல கோடிஸ்வரரும் 'ரெட்புல்' சக்திப் பானத்தின் உரிமையாளருமான சாலியோ யோவித்யா தனது 89 ஆவது வயதில் இயற்கை எய்தியுள்ளார்.

1970 இல் ,ஹரத்திங் டாங் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட குறித்த சக்திப் பானமே காலப்போக்கில் ரெட்புல் என்ற ஆங்கிலப் பெயரோடு சந்தையில் பிரபல்யமடைந்தது.

1984இல் சாலியோவோடு இணைந்து அவரது அவுஸ்திரேலிய பங்காளியும் ரெட்புல்லின் சர்வதேச பரவலுக்கு பெரிதும் உதவியிருந்தார்.

போர்பஸ் சஞ்சிகையின் கருத்துக் கணிப்பின் படி உலக செல்வந்தர்கள் பட்டியலுக்குள் உள்ளடக்கப்பட்டிருந்த சாலியோவின் குறித்த கம்பனியானது அவரது மூத்த மகன் பொறுப்பின் கீழ் வந்துள்ளது.

## இணையத்திலும் இனி தொலைக்காட்சி பார்க்கலாம் - இன்டல் வசதி

இன்ரர்நெட் ரிவி சேவையை வழங்க திட்டமிட்டுள்ளது இன்டல் நிறுவனம். தகவல்களையும், வீடியோக்களையும் பார்க்க பயன்படுத்தப்பட்டு வந்த இன்ரர்நெட் சேவையில், இனி தொலைக்காட்சியையும் பார்க்கலாம். இந்த இன்ரர்நெட் ரிவி திட்டம், கேபிள் வழங்குநர்களுக்கெல்லாம் ஒரு நெருக்கடியை தோற்றுவிக்கும் என்ற கருத்தும் நிலவிவருகின்றது.

இது சம்பந்தமாக இன்டல் நிறுவனம் மற்ற ஊடகங்களிடம், வெர்ச்சுவல் கேபிள் ஆப்ரேட்டர் பற்றி பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக தகவல்கள் கூறுகின்றது.

நவீன வாழ்க்கைக்கு பழகிய அனைவரும் எந்த நேரமும் இணையம் முன்புதான் இருக்கின்றனர். இனி இன்டல் நிறுவனம் முயற்சி செய்து வரும் இந்த இன்ரர்நெட் ரிவி வந்துவிட்டால் அனைவரும் எப்பொழுதும் இன்ரர்நெட் முன்பு தான் இருப்பார்கள் என்றுதான் தோன்றுகின்றது.

2012 ஆம் ஆண்டு இந்த இன்ரர்நெட் ரிவி சேவையை இன்டல் நிறுவனம் வெளியிடும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 5456.27 | 5449.05 ⇩ |
| மிலங்கா விலைச்சுட்டி | 4821.64 | 4864.25 ⇧ |

விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) 18,217.05

*உயர்வடைந்த பங்குகள்(ரூ)* ஆஸிரி சென்ரல் (181.00), ஈபி கிரேஸி(1200.00), ஈகுட்டி ரூ பிஎல்சி (27.90), சிஎப்ஐ(194.80), ரிவரினா ஹோட்டல்(90.00).

*வீழ்ச்சியடைந்த பங்குகள்(ரூ)* பேருவளை வோல்க்இன்(130.00), சிடிபி(X) (45.70), அக்ஸ்ரார் பேர்டிலைசர்(15.00), எஸ்.எம்.பி.லீசிங்(X)(0.40), மேர்ஷன்ட் சிப்பிங்(244.00).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## மக்வூட் எனர்ஜி நிறுவனத்தின் ஐ.பி.ஓ ஆரம்பம்

மக்வூட் கூட்டுக் கம்பனிகளின் ஒரு அங்கத்தவரான வரையறுக்கப்பட்ட மக்வூட் எனர்ஜி கம்பனிகளின் பங்கு முதலீட்டுக்காக பொது மக்களுக்கு அழைப்பு விடுத்தவாறு ரூ.350 மில்லியன் ஆரம்ப மக்கள் பங்கு விநியோகித்தல் ஆரம்பிக்கப் பட்டுவிட்டது.

இந்த ஆரம்ப மக்கள் பங்கு விநியோகத்தின் மூலம் வரையறுக்கப் பட்ட மக்வூட் எனர்ஜி கம்பனி ரூ. 250 மில்லியன் வாக்குரிமை கொண்ட சாதாரண பங்குகளின் ஒரு பங்கு ரூபா 14வீதம் கொள்வனவு செய்ய மக்களிடம் முன் வைப்பதோடு ஆரம்ப மக்கள் பங்கு விநியோகத்தின் பின் அது கம்பனியின் முழு பங்குகளின் பெறுமதியில் 25 வீதப் பெறுமானமாகி விடுகின்றது.

பங்கு விநிகயோம் எதிர்வரும் 22ஆம் திகதி ஆரம்பிப்பதோடு ஆகக் குறைந்த கேள்வியளவு ரூபாய் 7000 அல்லது 500 பங்குகள் ஆகும்.

இந்த பங்கு விநியோகத்தின் நிதி அறிவுரையாளர்கள் மற்றும் பொது முகாமையாளர்கள் NDB முதலீட்டு வங்கியினர் என்பதோடு வரையறுக்கப்பட்ட கோப்பரேட்டர் சர்விஸஸ் (SSP) நிறுவனம் அதன் பதிவாளர்கள் ஆவார்கள்

வலுசக்தி துறையில் நாட்டின் சமூக பொருளாதார அபிவிருத்தியின் முன்னோடியான அறிமுகப் படுத்திக் கொண்டுள்ள மக்வூட் கூட்டு நிறுவனம், 170 வருடங்கள் பாரம்பரியம் உடையது.


## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

$ (வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 122.94 | 126.41 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 192.55 | 199.31 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 159.93 | 166.22 |
| சுவிஸ் பிராங் | 132.19 | 138.08 |
| கனேடிய டொலர் | 123.07 | 128.27 |
| அவுஸ்திரேலிய டொலர் | 128.60 | 134.31 |
| சிங்கப்பூர் டொலர் | 96.92 | 100.85 |
| ஜப்பான் யென் | 1.46 | 1.52 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.48 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 33.99 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

## முன்மாதிரியான தலைமைத்துவம்; ஜனசக்தியின் சந்திரா ஷாப்டர்



இலங்கையின் காப்புறுதி துறையில் பிரபல்யம் பெற்ற நபராக திகழும் சந்திரா ஷாப்டர் அவரது பல்துறை செயற்பாடுகள், திறமைகள் காரணமாக காப்புறுதித் துறையின் சிரேஷ்ட பிரஜையாகவும் கருதப்படுகிறார்.

சுமார் 60 ஆண்டுகால இவரின் தொழில்சார் அனுபவத்தின் மூலம், இந்நாட்டின் காப்புறுதி துறையில் வரைவிலக்கணத்தை ஏற்படுத்தியுள்ளதுடன்,சவால்கள் நிறைந்த தீர்மானங்களை முன்னெடுப்பதிலும் இவர் தலைசிறந்தவராகக் காணப்படுகின்றார்.

இவர் தன்னை ஒரு சவால் களை முன்னெடுப்பவர் என வர்ணிப்பதுடன்;

இவரது அனுபவத்தை கருதும் போது, இவர் காப்புறுதித் துறையை கட்டியெழுப்பிய சிறந்த மனிதராகத் திகழ்கின்றார்.

ஜனசக்தி மற்றும் ஈகிள் போன்ற பிரபல காப்புறுதி நிறுவனங்கள் ஆரம்பிப்பதில் முன்னோடியாக அர்ப்பணிப்புடன் செயலாற்றியவர்.

ஜனசக்தி நிறுவனம் கடந்த ஆண்டில் சுமார் 7 பில்லியன் ரூபாயை நிகர பதிவு செய்யப்பட்ட கொடுப்பனவுகளாக பெற்றிருந்தது.

ஷாப்ட்டர் காப்புறுதித் துறையில் மேற்கொண்டுள்ள சாதனைகளுக்காகவும், நேர்மையான உழைப்பிற்காகவும் சிறப்பு பெற்றுள்ளனர்.

ஷாப்ட்டர் தனது முதலாவது தொழில் வாய்ப்பை சாதாரண கிளார்க் ஆக காப்புறுதித் துறையில் ஆரம்பித்து 40 ஆண்டுகளுக்கு பின்னர் ஜனசக்தி காப்புறுதி நிறுவனத்தை நிறுவியிருந்தார்.

பாடசாலைக் கல்வியைப் பூர்த்தி செய்திருந்த ஷாப்ட்டர்; பல்கலைக் கழகத்திற்கு தெரிவானார். மருத்துவ பீடத்திற்காக இவர் தெரிவாகியிருந்த போதிலும், இவருக்கு காப்புறுதி துறையில் அதிகளவு ஈடுபாடு இருந்ததன் காரணமாக, 1952ஆம் ஆண்டு, சிலோன் இன்சூரன்ஸ் நிறுவனத்தில் இவர் இணைந்து கொண் டார்.

கனேடிய நிறுவனமான மெனியுபக்சராஸ் லைவ் எனும் நிறுவனத்திலும் பணியாற்றிய பின் கார்சன் கம்பர்பெட்ச் நிறுவனத்தில் சுமார் 14 ஆண்டுகள் இவர் பணியாற்றியிருந்தார்.

இக்காலப் பகுதியிலேயே வாழ்க்கையில் சவால்களை முன்னெடுக்கும் இவரது பயணம் ஆரம்பமானது.இவர் தான் வகித்த நிலையான பதவியைத் துறந்து காப்புறுதி பிரதிநிதியாக தனது வாழ்க்கை பயணத்தை தொடர்ந்தார்.

திருமணம் செய்து 4 பிள்ளைகளின் தந்தையாக இக்காலப் பகுதியில் திகழ்ந்த இவர், குடும்ப சுமையை சுமப்பது தொடர்பான பெரும் சவாலை எதிர்நோக்கியிருந்தார்.

காப்புறுதி பிரதிநிதியாக தொழிலை முன்னெடுத்திருப்பதன் மூலம், எனது வாழ்க்கையில் நான் பின்நோக்கி நகர்ந்திருக்கிறேன் என்றார்.

ஒரு வருடத்திற்குப் பின்னர் தனது பிள்ளைகளுக்கு கல்வி கற்பிக்க சென்னை சென்ற ஷாப்ட்டர், ஒரு தசாப்த காலம் அவரது குடும்ப வாழ்க்கை இந்தியாவிலும், தொழில்சார் வாழ்க்கை காப்புறுதி ஆலோசகராக இலங்கையிலும் தொடர்ந்தது.

அடுத்த கட்டமாக அவருக்கு , தேசிய காப்புறுதி கூட்டுத்தா பனத்தில், பிரதான முகவராக பணியாற்றக் கூடிய வாய்ப்பு கிட்டியது.

இந்தப் பதவியை பொறுப்பேற்ற ஷாப்ட்டர், திறம்பட தமது பொறுப்பை முன்னெடுத்திருந்தார்.

இந்த நிறுவனம் 1987ஆம் ஆண்டு தனியார் மயப்படுத்தப்பட்டது.

பின்னர் சிடிசி ஈகிள் நிறுவனத்தின் பணிகளில் முக்கிய பங்கை ஆற்றியிருந்ததுடன், பின்னர் தனது சொந்த நிறுவனமான ஜனசக்தி காப்புறுதி நிறுவனத்தையும், 1994 ஆம் ஆண்டு ஆரம்பித்திருந்தார்.

ஆச்சரியப்படும் வகையில் ஜனசக்தி நிறுவனத்தின் மூலம் 2001ஆம் ஆண்டு தேசிய காப்புறுதி கூட்டுத்தாபனம் பொறுப்பேற்கப்பட்டிருந்தது.

நான் எனது வாழ்க்கையில் முன்னெடுத்த மற்றொரு சவாலாக இது அமைந்துள்ளது.

நாம் ஒரு கம்பனியை எந்தவித முதலீடுகளுமின்றி ஆரம்பித்தி ருந்தோம்.ஆயினும் இது இறுதி யில் வெற்றிகரமாக அமைந்திருந் தது என்கிறார்.

தொழில் முயற்சியாளர் ஒருவர், தமது திறமையில் அதிகளவு நம்பிக்கை கொள்ள வேண்டும். தாம் முன்னெடுக்கும் தொழிலை நேர்மையான முறையிலும், சிறந்த முறையிலும் முன்னெடுக்க வேண்டும்.வர்த்தகத்தில் நம்பிக்கையுடன் செயற்படுவது மிக முக்கியம். அத்துடன் சமூகத்துக்கு சிறந்த சேவைகளை வழங்கக் கூடிய நோக்கமும் கொண்டிருத்தல் வேண்டும் என்றார்.

சமூக பொறுப்புணர்வு,சிறந்த மேற்பார்வை,வெளிப்படை... போன்றன என்னைப் பொறுத்த வரை சாதாரண சொற்பதங்கள் மட்டுமே. ஒரு சிறந்த முறையில், நேர்மை கடைப்பிடிக்கப்படுமாயின் இந்த அனைத்து விடயங்களும் தானாக எய்தப்படும் எனத் தெரிவிக்கும் ஷாப்ட்டர்,எல்லோருக்கும் வாழ்க்கையில் முன்னுதாரணமாக திகழ்கிறார்.

# இலங்கைக்கெதிரான தீர்மானத்தை ஆதரிக்கக்கோரி தமிழகத்தில் அடையாள வேலை நிறுத்தம்

## பழ.நெடுமாறன் அறிக்கை



(சென்னை)

**இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை அனைத்து நாடுகளும் ஆதரிக்க வலியுறுத்தி தமிழகத்தில் எதிர்வரும் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வேலை நிறுத்தம் நடைபெறும் என்று இலங்கை தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் பழ.நெடுமாறன் கூறியுள்ளார்.**

இது தொடர்பாக இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்க ஒருங்கிணைப்பாளர் பழ.நெடுமாறன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

இலங்கையில் நடைபெற்ற யுத்தத்தில் 5 இலட்சம் தமிழர்கள் வாழ்க்கையை இழந்து நிற்கின்றனர். 11/2 இலட்சத்திற்கும் அதிகமான பேர் கொல்லப்பட்டனர். இறுதிக் கட்ட போரில் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டார்கள் என்பதை ஐ.நா. சபை ய[illegible] முதற்கட்ட அறிக்கை ஆதாரங்களுடன் வெளியிட்டுள்ளது.

மனித குலத்திற்கு எதிராக நடந்துள்ள இந்த கொடுமையை எதிர்த்து தமிழக மக்கள் அனைவரும் அரசியில் வேறுபாடுகளை் கடந்து ஒன்று சேர்வது அவசியமாகிவிட்டது. தமிழ் மக்களின் இந்த கொலைக்கு எதிராக போராடி நீதியை நிலைநாட்டும் கடமையோடு செயற்பட வேண்டும்.

ஐ.நா. சபையின் மனித உரிமை குழுவில் இன அழிப்பு போர் குற்றத்திற்காக ராஜபக்ஷ அரசாங்கத்தின் மீது விசாரணை நடத்தப்பட வேண்டும். இந்த விசாரணை சர்வதேச விசாரணை குழுவின் நேரடி விசாரணையாக அமைய வேண்டும் என்ற திருத்தத்துடன் இந்தியா இந்த தீர்மானத்தை ஆதரிக்க வேண்டும்.

ராஜபக்ஷ ஆட்சிக்கு எதிராக தீர்மானத்தை மனதி உரிமை குழுவில் அங்கம் வகிக்கும் அனைத்து நாடுகளும் ஆதரிக்க வேண்டும். இந்த தீர்மானங்களை முன்வைத்து ஜெனீவாவில் தீர்மானம் முன்மொழியப்பட வுள்ள எதிர்வரும் 23 ஆம் திகதி அன்று காலை முதல் மாலை 6 மணிவரை தமிழக மக்கள் அனைவரும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடு மாறு கேட்டுக் கொள்கிறேன். வீடுகளில் கறுப்புக் கொடி ஏற்றி மத்திய அரசுக்கு எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும். வணிக நிறுவனங்கள் திறக்காமல் தங்கள் கண்டனத்தை வெளிப்படுத்த வேண்டும் என கேட்டுக்கொள்கின்றேன் என அவர் கூறியுள்ளார். (2-7)

## இந்திய அரசை வலியுறுத்தி போராடுவோம்

ஐ.நா.மனித உரிமைக்குழு கூட்டத்தில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா தீர்மானம் கொண்டு வந்திருக்கிறது.

இந்தியா இலங்கைக்கு வாக்களிக்குமா என்று எதிர்பார்த்தால் சாக்கு போக்கு சொல்லி வருகிறது. இந்திய அரசு இலங்கைக்கு எதிராக வாக்களிக்க வேண்டுமென்று இலட்சிய தி.மு.க. சார்பில் வலியுறுத்தி போராடுவோம் என் டி.ராஜேந்தர் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசுக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றிய தமிழக முதல் அமைச்சர் தமிழகத்தின் சார்பில் இதனை வலியுறுத்தி ஒரு அழுத்தமான குரலை எழுப்பி மத்திய அரசுக்கு ஒரு அதிர்வை ஏற்படுத்த வேண்டும். மத்திய மந்திரிகளும் எம்.பிக்களும் இணைந்து மத்திய அரசை வலியுறுத்தி தங்களது பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் அல்லது மத்திய அரசு ஆதரிக்கா விட்டால் இராஜினாமா செய்ய வேண்டும் என்று கூறியுள்ளார். (2-7)

# இராணுவத்தினருக்கான வீடுகள் கையளிப்பு

(கொழும்பு)

இராணுவத்தினருக்கு உதவியளிக்கும் வகையில் ஆரம்பிக்கப்பட்ட நமக்காக நாம் என்ற வீடமைப்பு திட்டத்தின் எட்டாவது அத்தியாயம் நேற்றைய தினம் ஆரம்பமானது.


இந்த வீடமைப்பு திட்டத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றைய தினம் திறந்து வைத்துள்ளார்.

கேகாலை ரம்புக்கன, நுகவெல ஆகிய பிரதேசங்களில் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளே இவ்வாறு ஜனாதிபதியினால் இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

இந்த வீடமைப்பு திட்டத்தின் கீழ் மேலும் பல வீடுகள் கண்டி, பதுளை, மாத்தறை , அம்பாந்தோட்டை மற்றும் மொனறாகலை போன்ற மாவட்டங்களில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமையவே நமக்காக நாம் என்ற வீடமைப்பு திட்டம் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, 100 ஆவது சதத்தை பெற்ற இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கருக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமது வாழ்த்தினை தெரிவித்துள்ளார். (2-7)



பங்களாதேஷ் தேசப்பிதா பங்கபந்து ஷேக் முஜிபுர் ரஹ்மானின் 92 ஆவது ஜனன தின வைபவம் கொழும்பிலுள்ள பங்களாதேஷ் உயர்தானிகராலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. சிறுவர்களுக்கான வர்ணம் தீட்டும் போட்டி நடைபெறுவதைப் படத்தில் காணலாம்.

# கருணாநிதியின் பாசாங்கு நாடகம் அம்பலம்; பா.ம.க.தலைவர் ராமதாஸ் தெரிவிப்பு

இலங்கையில் இறுதியுத்தம் நடைபெற்ற போது 3 மணிநேரம் உண்ணாவிரதம் இருந்து நாடாகமாடியவர் கருணாநிதி என்று பா.ம.க. தலைவர் ராமதாஸ் கூறியுள்ளார்.

சென்னை தேவநேயப் பாவாணர் நூலக அரங்கில் பா.ம.க. சார்பில் திராவிட மாயை தொடர்பான கருத்தரங்கு நேற்று முன்தினம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பா.ம.க. தலைவர் ராமதாஸ் பேசியதாவது,

இலங்கையில் இறுதி யுத்தம் நடைபெற்ற போது கருணாநிதி 3 மணி நேரம் உண்ணாவிரம் இருந்து நாடகமாடினார்.

பின்னர் யுத்தம் இன்னும் முடியவில்லை என்றும் போரில் பலர் படுகொலை செய்யப் படுவதாகவும் கூறியபோது மழை விட்டும் தூவானம் விடவில்லை என்றார்.

யுத்தம் நடைபெற்றபோது பலமுறை கருணாநிதியைச் சந்தித்து யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர வலியுறுத்தினேன். ஆனால் பிரதமருக்கு கடிதம் எழுதியே மக்களை ஏமாற்றினார்.

இப்போது அண்ணா நூற்றாண்டு நூலகத்துக்காக தீக்குளிக்கப் போவதாக கருணாநிதி கூறியுள்ளார். உண்மையான போராளிகள் யாரும் இப்படிச் சொல்லிக் கொண்டிருக்க மாட்டார்கள் என்று பேசினார். (2-7)

# ஒலிம்பிக் போட்டி ஒளிபரப்பு உரிமைக்கு ஜனாதிபதியின் குடும்ப தொலைக்காட்சி முயற்சி

லண்டனில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளை ஒளிபரப்புச் செய்யும் உரிமையை பெற்றுக் கொள்வதற்கு ஜனாதிபதியின் குடும்ப உறுப்பினர்களுக்கு சொந்தமான தொலைக்காட்சி அலைவரிசை முயற்சித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதியின் குடும்ப உறுப்பினர்களுக்கு சொந்தமான கார்ல்டன் ஸ்போர்ட்ஸ் நெட்வர்க் தொலைக்காட்சி அலைவரிசையே இவ்வாறு ஒளிபரப்பு உரிமையை பெற்றுக் கொள்ள முயன்று வருவதாகக் குறிப்பிடப் படுகிறது.

ஒலிம்பிக் போட்டிகளை ஒளிபரப்புச் செய்யும் உரிமையை இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் ஏற்கனவே பெற்றுக் கொண்டுள்ளது. ஆசிய ஒளிபரப்பு ஒன்றியத்தின் அங்கம் வகிக்கும் ரூபவாஹினிக்கூட்டுத்தாபனம் கடந்த 2008 ஆம் ஆண்டிலேயே இந்த உரிமையை பெற்றுக் கொண்டுள்ளது.

எனினும் ஒளிபரப்பு உரிமையை ரூபவாஹினிக்கூட்டுத்தாபனத்திடமிருந்து பெற்றுக் கொள்ள கார்ல்டன் ஸ்போர்ட்ஸ் நெட்வர்க் பல வழிகளில் முயற்சித்து வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

கார்ல்டன் ஸ்போர்ட்ஸ் நெட்வர்க் ஊடக நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி நிசாந்த ரணதுங்க இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபன அதிகாரிகளுடன் ஒளிபரப்பு உரிமை பற்றிய ஏற்கனவே பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே கிடைக்கப்பெற்ற ஒளிபரப்பு உரிமையை வேறு ஓர் அலைவரிசைக்கு விட்டுக்கொடுப்பதனால் கூட்டுத்தானத்தின் நிதி நெருக்கடி மேலும் அதிகரிக்கக்கூடும் என தொழிற்சங்கங்கள் குறிப்பிட்டுள்ளன.(2-7)

# சுதந்திர நாட்டில் எவரும் ஆட்சிபீடம் ஏறமுடியும்

## பிரதமர் தெரிவிப்பு



(கொழும்பு)



அரசாங்கங்கள் நிரந்தரமானவை அல்ல. சுதந்திர நாட்டில் எந்தவொரு தரப்பினரும் ஆட்சிபீடம் ஏற முடியும். அதில் எவ்வித தடையும் கிடையாது. என பிரதமர் டி.எம்.ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

எனது நாடு எனது மக்கள் என்ற நிலைப்பாடு அனைவரினதும் மனதிலும் இருக்கவேண்டும்.

எந்தவொரு கட்சியும் ஆட்சியை கைப்பற்ற முடியும்,மக்களின் விருப்பத்திற்கு ஏற்ற வகையில் ஆட்சியில் மாற்றம் ஏற்படும் . எனினும்,நாட்டில் சுதந்திரம் நிலையானது.

மிகவும் சொற்ப அளவிலான நபர்கள் வெளிநாடுகளுக்கு ஆதரவளித்து நாட்டை காட்டிக்கொடுக்க முயற்சிக்கின்றனர்.

இந்த துரோகச் செயலுக்கு நாம் இடமளிக்கக் கூடாது என பிரதமர் தெரிவித்துள்ளார். கொழும்பில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். (2-7)

வடமாகாண சபையினரால் புனரமைக்கப்பட்ட கைதடியில் அமைந்துள்ள சிறுவர் பொறுப்பேற்கும் இல்லம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி இல்லத்தை திறந்து வைப்பதையும் அருகில் பிரதம செயலாளர் ஆர் வியஜலட்சுமி, ஆளுநரின் செயலாளர் எல்.இளங்கோவன், வடமாகாண நன்னடத்தை ஆணையாளர் பி. விஸ்வரூபன் ஆகியோர் நிற்பதையும் அங்கு பராமரிக்கப்படும் சிறார்களை ஆளுநர் பார்வையிடுவதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

# வடமராட்சி கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் அத்துமீறல்

(கரவெட்டி)

வடமராட்சி கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்வதாக வடமராட்சி மீனவர்கள் வடமராட்சி கடற்றொழிலாளர் சங்க சமாசத்திடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

வடமராட்சி கடற்பரப்பில் நேற்று முன்தினம் அதிகாலை அத்துமீறிய நூற்றுக்கும் மேற்பட்ட ரோலர் படகுகள் இன்பர்சிட்டி, சக்கோட்டை, பருத்தித்துறை முனைக் கடற்பரப்புக்களில் மீன்பிடித் தொழில் செய்து கொண்டிருந்த மீனவர்களின் வலைகளை அறுத்து சேதமாக்கியுள்ளனர்.

இதனால் நேற்றுமுன்தினம் மட்டும் 5 இலட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

வடமராட்சி கடற்படையினர் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த வேளையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால் ஏற்பட்ட அச்சம் காரணமாகவும் நஷ்டம் காரணமாகவும் கடலுக்கு செல்வதில் வடமராட்சி மீனவர்கள் தயக்கம் காட்டி வருகின்றனர்.

இது தொடர்பாக பலரிடம் முறைப்பாடு செய்தும் உரிய தீர்வு தமக்கு இதுவரை கிடைக்கவில்லை எனவும் இதனால் தமது வாழ்வாதாரம் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (2-3-24-10)

# மாகாண, தேசியமட்ட கைப்பணி கண்காட்சிக்கான செயலமர்வு

(தனங்கிளப்பு)

தேசிய அருங்கலைகள் பேரவையினால் வருடாந்தம் நடத்தப்படும் மாகாண மட்டம் மற்றும் தேசியமட்ட கைப்பணி கண்காட்சியினை முன்னிட்டு கைப்பணி கலைஞர்களுக்கான விசேட செயலமர்வு நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கச்சேரி கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இதில் யாழ். மாவட்டத்தில் உள்ள பனை ஓலை சிற்பங்கள் வடிவமைத்தல், தோற்பொருள் தயாரித்தல், அலங்கார உற்பத்தி பொருட்கள் வடிவமைத்தல், உலோக வாத்துச் சிற்பங்கள், மரச்செதுக்கு சிற்பங்கள் போன்ற துறைகளில் ஆர்வமுள்ளோர் இச் செயலமர்வில் கலந்து கொண்டு பதிவுகளை மேற்கொள்ள முடியும் என தேசிய அருங்கலைப் பேரவையின் யாழ். மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் க. நவதர்சன் தெரிவித்துள்ளார். (2-3-37)

# மாணவியைக்கடத்திய முச்சக்கரவண்டி சாரதிக்கு விளக்கமறியல்

(சாவகச்சேரி)

கச்சாய் பாலாவி பகுதியில் கடந்த பெப்ரவரி மாதம் பாடசாலை மாணவியை முச்சக்கர வண்டியில் கடத்திய வழக்குடன் தொடர்புடைய முதலாவது சந்தேக நபரை எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் ஏனைய நான்கு சந்தேக நபர்களையும் பிணையில் செல்ல அனுமதித்தும் சாவகச்சேரி நீதவான் நீதிமன்றத்தில் உத்தரவிடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக பரலாவி தெற்கு, கச்சாய் தெற்கு, மந்துவில் கிழக்கு ஆகிய இடங்களைச் சேர்ந்த ஐந்து பேர் கொடிகாமம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இவ்வழக்கு கடந்த15 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற நீதவானால் மேற் குறித்தவாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

(7-2-3-29)

# ஆண்டுப்பொதுக்கூட்டம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்க ஆண்டுப் பொதுக்கூட்டம் நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் க. அருந்தவபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு இப்பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் சகல பெற்றோர்களையும் உரிய நேரத்திற்கு தவறாது சமுகமளிக்குமாறு சங்கச் செயலாளர் க. விஜயவாசன் அறிவித்துள்ளார். (7-3-29)

# மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதால் நாளை செவ்வாய்க்கிழமை காலை. 8.30 மணி முதல் மாலை 6 மணிவரை மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய இணுவில், மருதனார்மடம், உடுவில், சங்குவேலி, மானிப்பாய், கட்டுடை, தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, தட்டாதெரு, ஓட்டுமடம், ஆனைக்கோட்டை, நவாலி, கோண்டாவில், கோம்பயன் மணல் பிரதேசம், புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர்.ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சி பிரதேசம் ஆகிய பகுதிகளில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அவர் தெரிவித்துள்ளார். (2)





# இல்லமெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யா/ கலட்டி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் பாடசாலை அதிபர் கா. இரவீந்திரராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலய ஆசிரியர்வள நிலைய முகாமையாளர் ஞானமணி இரட்ணசிங்கம், சிறப்பு விருந்தினராக ஜே/ 100 கிராம அலுவலர் க. பஞ்சலிங்கம், கௌரவ விருந்தினராக பழைய மாணன் து.சுதாகர் ஆகியோர் கலந்து கொள்வர். (7)

# யாழ்ப்பாண மாவட்டத்தில் சிறந்த கராத்தே வீரர்களுக்கான போட்டிகள்



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட செயலக விளையாட்டுத் துறை பிரிவு மற்றும் யாழ். மாவட்ட கராத்தே சங்கம் என்பன இணைந்து யாழ். மாவட்டத்தில் சிறந்த கராத்தே வீரர்களுக்கான போட்டியை நேற்றைய தினம் நடத்தின.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள ஓ.எல்.ஆர்.கிறிஸ்தவ தேவாலய வளாகத்தில் உள்ள மண்டபத்தில் இந்தப் போட்டி நடைபெற்றது.

இதில் வெற்றி பெற்றவர்கள் வட மாகாணத்தை சேர்ந்த கராத்தே வீர, வீராங்கனைகளுக்கு இடையில் நடைபெறவுள்ள போட்டியில் யாழ். மாவட்டம் சார்பாக பங்குபற்றுவார்கள்.

நேற்று நடைபெற்ற போட்டியில் சுமார் 65 இற்கும் மேற்பட்ட கராத்தே வீர, வீராங்கனைகள் பங்கு பற்றியிருந்தனர்.

இந்தப் போட்டிக்கு பிரதம நடுவராக இலங்கை கராத்தே சங்க நடுவர் டி. ரஞ்சித் நீல் கடமையாற்றினார்.


மேற்பார்வையாளர்களாக யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி திருமதி ரூபசிங்கம், யாழ். மாவட்ட கராத்தே சங்கத்தலைவரும் வடமாகாண கராத்தே சங்கத்தலைவருமான வி.ஆர்.கெபிரியல் ஆகியோர் பங்கு கொண்டனர். (2-6)

# பங்குனித்திங்கள் விழா

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் பங்குனித்திங்கள் பொங்கலை முன்னிட்டு காலை 8 மணி முதல் அம்பாளுக்கு அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து விஷேட பூசைகளும் இடம்பெறும் என பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (7)


# உணர்ச்சிகளைக் கையாளுதல்



ஆன்மீகம் 10

எல்லா உணர்ச்சிகளுக்கும் உடலில் ஒரு அறுதியான குறிப்பிட்ட உணர்வுண்டு. நீ, இதைக் கவனித்திருக்கிறாயா? குறிப்பிட்ட உணர்ச்சிகள் உடலில் குறிப்பிட்ட உணர்வுகளைத்தூண்டும். ஆனால், என்ன நடக்கிறதென்றால், நாம் மன உணர்வுகளாலும், எண்ணங்களாலும் இழுத்துச்செல்லப்படுகின்றோம். உள்ளே உணர்வுகளைக் கவனிப்பதில்லை. நாம் நம்முள் உணர்வுகளில் கவனத்தைத் திருப்பினால், அதே எண்ணங்களும் உணர்ச்சிகளும் உடல் உணர்வுகளாக மாறுவதையும்- அவ்வுணர்வுகளே மாற்றம் அடைந்து- பின் மறைந்து போவதையும்- உணரலாம் ஆகவே, உன் மனதில் சில எண்ணங்கள் தொடர்ந்து வந்துகொண்டே இருந்தால், அவைகளுடன் சண்டை போடாதே, அவற்றைத் தடுக்காதே, சற்றுக்கூர்ந்து கவனிப்பதாலும், அவற்றுடன் இருப்பதாலும் அவை மாறி மறைந்து வெளியேறுவதைக் காணலாம்.பிறகு திரும்பத் திரும்ப மூச்சுக்கு வா. நீ அதைக் கவனிக்கும் அத்தருணத்தில் நீ முழுமையாக மூச்சுடன் இருக்கிறாய். ஆனால், மெதுவாக- மனம் ஒரு எண்ணத்தில் நழுவிச்செல்கிறது. நீ, சில கணங்கள் அந்த எண்ணத்தில் இருக்கிறாய். உடனே விழிப்புணர்வு வருகிறது.

"ஓ... நான் எதைப்பற்றியோ நினைத்துக் கொண்டிருக்கிறேன்" என்று சில பிராணாயாமப் பயிற்சிகள், சில சுவாசப் பயிற்சிகள், சில உத்திகள், சுதர்சனக்கிரியா மிகுந்த நன்மை பயப்பன. குறுகிய காலத்திலேயே, அவை உனக்குள் மாற்றம் ஏற்படுத்தியிருப்பதை நீ காண்பாய்.



நான் இப்போது பேசிக் கொண்டிருக்கிறேன். உன் மனதுக்குள் என்ன நடக்கிறதென்று உனக்குத் தெரியுமா? ஒன்று நீ ஆம், ஆம்... என்கிறாய் அல்லது இல்லை இல்லை என்கிறாய். அதற்கு நான் என்ன பேசுகிறேன் என்பது ஒரு பொருட்டே அல்ல. எது முக்கியமெனின், நீ உனக்கு என்ன செய்கிறாய் என்பதுதான். இந்த நொடியில், இப்போது உன் மனம் என்ன சொல்கிறது? ஆமாம் என்றா? இல்லை என்றா? அதுதான் மனதில் விழிப்பு நிலை. உன் சொந்த எண்ணங்கள், உனது உணர்வுகள், அந்த அமைப்புத் தன்மைகள்- உன் மனதில் நிகழ்ந்து கொண்டிருக்கும் எல்லாவற்றையும் பற்றிய விழிப்புணர்வு- இந்த இசைவை ஏற்படுத்துகின்றன.

நீ உனக்குள் மிகவும் அமைதி அடைந்தால், உன்னைச்சுற்றிலும் அந்த அதிர்வலைகள் வீச ஆரம்பிக்கும். அப்போது குணமடைதல் தானாகவே நடைபெறும். சுற்றுலுமுள்ளவர்கள் நன்மை பெறுவர்.

ஏதாவதொரு இடத்திற்குச் செல்கிறாய். அங்கு நுழைந்ததுமே எந்தக் காரணமுமில்லாமல் துக்கமாகவோ- வருத்தமாகவோ- கோபமாகவோ உணர்வாய். ஒருவேளை, ஓர் அறையில் சிறிது நேரம் சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள் ஆனால், அந்த அறைக்குள் கால் வைத்தவுடனேயே, நீ எந்தக் காரணமும் இல்லாமல் உனக்குள் ஓர் இறுக்கத்தை உணர்வாய். இதைநீ கவனித்திருக்கிறாயா?

ஒவ்வொரு தனிப்பட்ட மனிதரும், தங்களைச்சுற்றி (ஆணோ, பெண்ணோ) பல உணர்ச்சிகள் கலந்த சூழலை உருவாக்குகிறார்கள். எதை அவர்கள் பயிற்சி செய்திருக்கிறார்களோ, அதன் அதிர்வலைகள் மேலும்மேலும் அங்கே வீசிக் கொண்டிருக்கும். உதாரணமாக நீ எப்பொழுதும் மிகுந்த அன்புடன் இருந்தால், அது உன்னைச் சுற்றிலும் விருப்பத்தக்க சூழலை உருவாக்கும்- பிறகு அவை மேன்மேலும் அதிகரிக்கும். நீ வெறுப்புற்றிருந்தால், அங்கே அந்த அதிர்வு கள் உருவாகும். நீ தொடந்து வெறுப்புடனே இருந்தால் இந்த அதிர்வுகள் மேலும் மேலும் அதிகரிக்கும். ஒவ்வொரு நாளும் உன்னுடைய இறுக்கம் அதிகரிப்பதை உணர்வாய். நீ உன்னைச்சுற்றிலும் அதே சூழலையே ஈர்ப்பாய்.

நீ செல்வாய், ஆம், நான் மிக இறுக்கமாய் இருப்பதை அறிவேன். மனம் மிகவும் இறுக்கமாய் இருக்கிறது. எனக்குள் நிறையக் கரடுமுரடான மனநிலை உள்ளது. இப்போது நான் எப்படி அதிலிருந்து விடுபடலாம்?

(தொடரும்)

பூஜ்ய ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்

# உங்கள் கைரேகை பலன்கள்

10

## ரேகைகளும் கிரகங்களும்

*குரு மேடு உச்ச நிலை*

ஒருவருக்கு குரு உச்சமாய் நன்கு அமைந்திருந்தால், அவரது கண்கள் நீளமாயிருக்கும். கருவிழி தூய்மையாய் விளங்கும். பார்வை பயங்கரமாய் இராது. அவர் கண், சாத்விகமும் கருணையும் ததும்பியதாய்ப் புலப்படும். அவருடைய வாக்கு அவருடைய யோக்கியத் தன்மையையும் அன்பையும் காட்டும். கணிகளில் மேலிமைகள் தடித்திருக்கும். புருவம் நீண்டு வில்லைப் போல் வளைந்து ஒடுக்கிய உரோமங்களையுடையன வாயி

சக்தி


ருக்கும். உதடு பெருதாயிருக்கும். மேல் வரிசையில் மத்தியில் இரண்டு பற்கள் அகன்றும் நீண்டும் அமைந்திருக்கும். கன்னங்கள் எலும்புகள் தெரியாதபடி வட்டவடிவில் இருக்கும். முதுகில் புஜமும் சதுர வடிவமாய் சதைபற்றி இருக்கும். கால் உறுதியாயும் பலமாயிருக்கும். நடை கம்பீரமாய் இருக்கும். நிமிர்ந்தே நடப்பர்.

உரோமங்கள் வளைந்து சுருண்டிருக்கும். பெண்மகளாயிருந்தால், கூந்தல் அடந்து, நீண்டு, வளைந்து, சுருண்டு, இருக்கும். அவரது குரல் மணியோசை போன்று கணீர் எனக்கேட்கும். ஆனால்; அவர் சண்டைக்காரரல்லர்.

இன்னோரன்ன காரணங்களால் மக்களின் குரு ஆதிக்கமுள்ளவர்களே மேன்மையானவர்ளாகக் காணப்படலாம். ஆனாலும், குரு ஆதிக்கமுள்ளவர்களிலும் சிலர் தங்கள் அரும்பொருளைத் துர்வினியோகம் செய்யும் தூர்த்தராயுமிருக்கின்றனர். எனவே, குரு ஆதிக்கமுள்ளவர்கள் எல்லோரும் நல்லவர்கள் என்றும் வாசகர்கள் கருதக்கூடாது என்று இங்கு குறிப்பிடுகின்றோம்.

குரு ஆதிக்கம் உள்ளவர்கள் தன்னம்பிக்கையுடைவர்களாயிருந்தால், தங்களுக்கு இருக்கும் தேகபலம், மனோபலம், தங்கள் இயல்பு, நிலைமை முதலியவைகளை நன்குணர்வார்கள். தங்களின் முன்னேற்றத்திற்குத் தாங்களே வழி தேடுபவர்களாவார்கள். பிறரிடம் கிஞ்சித்தும் யோசனை கேட்க மாட்டார்கள்.

பேசும் வார்த்தைகள் கம்பீரமாயும் தீரமாயும் இருக்கும். ஆனால், குதர்க்கம் பேசிச் சச்சரவுக்கு இடம் கொடுக்கமாட்டார்கள். தங்களின் சக்தியில் நம்பிக்கை வைத்து நடப்பவர்கள் செல்வாக்கை விருத்செய்வார்கள். அதனால், பெருமையுடையவர்கள். அவர்களுடைய நோக்கம் உயர்ந்ததாகவே இருக்கும். ஆதலால் அவர்களுக்கு அற்பப் புத்தியுண்டாக ஏதுவே இல்லை. எப்பொழுதும் சிந்தனை உடையவர்களாகவே இருப்பார்கள்.



கைரேகைப் படம்


குரு ஆதிக்கம் உள்ளவர்கள் தேகம் மிக உஷ்ணமுள்ளதாகவே இருக்கும். அவர் தம் இனத்தாரிடம் இரக்கமுள்ள வராய் இருப்பார். கஷ்டப்படுபவர்கள் யாராயிருந்தாலும், அவர்களுடைய கஷ்டத்தைப்பார்க்கவோ, கேட்கவோ சகியார். அவர்களுக்கு வேண்டுவன செய்ய முன்னிற்பார். கஷ்படுவோருக்கு ஒரு இன்சொல் (நல்ல வார்த்தை) அமிர்தம் போன்று நன்மை அளிக்குமன்றோ! குரு ஆதிக்கம் உடையவரது அன்பு இன்சொல்லாய் மாறும். அவர் தர்மநோக்கமும் தாராள சிந்தையுமுடையராதலால், அவர் உள்ளம் கசிந்து கொடுக்கின்றார் என்பது உணரற்பாலது. இத்தகையோரை மற்றவர் கவனியாதிருக்கவே முடியாது. இவர்கள் வியாபாரத் துறையிலாவது அல்லது தொழிற்துறையிலாவது மிகுந்த செல்வாக்கும் நாணயமும் உள்ளவர்களாய் விளங்குவார்கள்.

••••••••••••••••••

(தொடரும்)

# நேர்முகத்தேர்விற்கு செல்வோர் எதிர்கொள்ளும் கேள்விகள் சில...

ஒரு நேர்முகத் தேர்வு செயற்பாட்டைப் பொறுத்தவரை கேள்வி-பதில் பகுதிதான் அனைத்திற்கும் தலையாய அம்சமாக விளங்கி அந்த செயற்பாட்டிற்கே அர்த்தத்தைக் கொடுக்கிறது. பொதுவாக எந்த மாதிரியான கேள்விகள் நேர்முகத்தேர்வில் கேட்கப்படும் என்பதை நீங்கள் தெரிந்து கொண்டால் நேர்முகத் தேர்வின்போது அவற்றை எளிதாகப் புரிந்து தெளிவாக பதிலளித்து வெற்றிபெற ஏதுவாக இருக்கும். பொதுவாக 7 வகையான கேள்விகள் உங்களிடம் கேட்கப்படும்.



**வெளிப்படையான கேள்விகள்**

உங்களை இலகுவாக உணரவைத்து, ஊக்கப்படுத்தி பேச வைப்பதற்கே இத்தகைய கேள்விகள் கேட்கப்படுகின்றன. மேலும் உங்களை தீவிர சிந்தனைக்குள் தள்ளும் வாய்ப்பை அதிகப்படுத்தவும் இந்தவகை கேள்விகள் கேட்கப்படுகின்றன.

1. உங்களைப் பற்றி சொல்லுங்கள்
2. உங்களின் விருப்ப விடயங்கள் மற்றும் செயற்பாடுகள் என்ன?
3. உங்களுக்கு சமீபத்தில் ஏற்பட்ட நெருக்கடி சூழல் என்ன?
4. கலப்பு பொருளாதாரத்தின் நன்மைகள் என்ன?
5.பொருளாதாரத்தில்பன்னாட்டுகம்பனிகளின்தாக்கம்எப்படி?

**கேள்விகள்**

இந்தப் பகுதியில் கேட்கப்படும் கேள்விகள் முந்தைய பகுதி கேள்விகளிலிருந்து மாறுபட்டது.

உதாரணமாக,

1. உங்கள் படிப்பை எப்போது முடித்தீர்கள்?
2. பட்டப்படிப்பில் உங்களது பாடப்பிரிவு என்ன?
3.உங்களின் முதல் தொழில்முறைப் பயிற்சியை எங்கே பெற்றீர்கள்?
4. உங்களுக்கு டேட்டா ப்ராசஸிங் தெரியுமா?

**விசாரணை கேள்விகள்**

இந்த வகை கேள்விகள், ஒரு தலைப்பு அல்லது விடயம் பற்றி விரிவாகப் பேசும் பொருட்டு,உங்களை உற்சாகப் படுத்த கேட்கப்படுகின்றன.

**Reflective கேள்விகள்**

ஒரு நேர்முகத்தேர்வில், நீங்கள் சொன்ன விடயங்களை,நேர்முகத்தேர்வுகளை நடத்துபவர் புரிந்து கொண்டதை உறுதிசெய்ய இத்தகைய கேள்விகள் கேட்கப்படுகின்றன.




1. நீங்கள் சொல்வதைப் பார்த்தால், பொதுத்துறை நிறுவனங்கள் அனைத் தையும் தனியார் மயமாக்கி விட வேண்டும் என்று நினைக்கிறீர்களா?
2. பொருளாதார சுதந்திரத்தை நீங்கள் எதிர்க்கிறீர்கள் என்று நான் நினைக்கிறேன் சரியா?
3. திரைப்படங்களில் வரும் வன்முறை காட்சிகளை முற்றிலும் தடைசெய்ய வேண்டும் என்று தானே நீங்கள் கூறுகிறீர்கள்?

**Loaded கேள்விகள்**

ஒரு கடினமான அல்லது சிக்கலான சூழலை சமாளிக்கும் திறன் உங்களுக்கு இருக்கிறதா? என்று சோதித்து அறியும் பொருட்டு, இவ்வகை கேள்விகள் உங்களிடம் கேட்கப்படுகின்றன. உதாரணமாக,

நீங்கள் மிகவும் குள்ளமாக இருக்கிறீர்கள், இதை ஒரு ஊனமாக நீங்கள் கருதவில்லையா?

**Hypothetical கேள்விகள்**

இத்தகைய கேள்விகளும் Loaded கேள்விகளைப் போலத்தான். ஒரு செயற்கையான சூழ்நிலை உங்களுக்குத் தரப்பட்டு, அதற் கேற்ப நீங்கள் எவ்வாறு முடிவெடுக்கிறீர்கள் என்ற வகையில் உங்களது திறனை சோதிக்க இதுபோன்ற கேள்விகள் கேட்கப்படுகின்றன. உதாரணமாக,

1. நிறுவனத்தின் லொறி மோதியதால் ஒரு தொழிலாளி காயமடைந்துள்ளார். இதனால் கொதிப்படைந்த இதர தொழிலாளர்கள், நிறுவனத்தின் இதர வாகனங்களை அடித்து நொறுக்க எத்தனிக்கிறார்கள். அத்தகைய சூழ்நிலையை ஒரு மேலதிகாரி என்ற முறையில் எவ்வாறு கையாள்வீர்கள்?
2. உங்கள் சக ஊழியர்களில் ஒருவர் நிறுவனத்திற்கு ஒவ்வாத ஒரு காரியத்தைப் பணத்திற்காக செய்வதை நீங்கள் கண்டு பிடிக்கிறீர்கள். சிகிச்சை பெறும் தனது நோயாளி தாயாருக்காக அவர் இந்தத் தவறை செய்கிறார் என்பதும் உங்களுக்குத் தெரிய வருகிறது. அப்போது நீங்கள் என்ன செய்வீர்கள்?


**Leading கேள்விகள்**

உங்களிடமிருந்து சாதகமான பதில் வருகிறதா? என்பதை சோதிக்க இத்தகைய கேள்விகள் கேட்கப்படுகின்றன.

1. எலக்ரோனிக் பொருட்கள் தயாரிப்பு மற்றும் விற்பனையில் நமது நிறுவனம் சந்தையில் முன்னணியில் இருக்கிறது என்பதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா?
2. பன்னாட்டு நிறுவனங்கள் பொருளாதாரத்தை மேம்படுத்துகின்றன என்ற கருத்தில் உங்களுக்கு உடன்பாடு உண்டா?
3. நமது நாட்டின் பொருளாதார அமைப்பில் அந்நிய முதலீட்டை அதிகரிக்க வேண்டும் என்று கருதுகிறீர்களா?

மேற்கூறிய கேள்வி வகைகளை கையாளும் முறைகள்

ஒரு கேள்விக்கு நீங்கள் எவ்வாறு பதிலளிக்கீர்கள் என்ற முறை நீங்கள் அளிக்கும் பதிலைவிட முக்கியமானது. இதன் மூலம் உங்களது தகவல்தொடர்புத்திறன் வெளிப்படுகிறது. கேள்விகளை கையாளும் முறை குறித்து சில விரிவான



ஆலோசனைகள் கீழே வழங்கப்பட்டுள்ளன.

**கவனித்தல்**

ஒரு நேர்முகத்தேர்வில் கேட்கப்படும் கேள்விகளை சரியாக கவனிக்காத பட்சத்தில் சரியான பதில்களை வழங்க முடியாது. எனவே, கவனம் என்பது மிக முக்கியம்.நேர்முகத் தேர்வு எடுப்பவர் பேசும்போதே நீங்கள் குறுக்கே பேசக்கூடாது. எதிலும் அவசரப்படக்கூடாது. அவர் முழுவதுமாக பேசி முடிக்கும் வரை பொறுமையாக இருக்க வேண்டும். இல்லையெனில் நீங்கள் ஆரம்ப கட்டத்திலேயே வெளியேற்றப்படுவீர்கள்.

**நுட்பம் முக்கியம்**

நீங்கள் அளிக்கும் பதிலானது நுட்பமாகவும் தெளிவாகவும் இருக்க வேண்டும். திகதி, நேரம், நபர், இடம் போன்ற விடயங்களைத் தெளிவாக தெரிந்து கொண்டு தவறின்றி பதிலளிக்க வேண்டும். உங்களுக்கு திகதி, நபர் போன்ற நுட்பமான விடயங்கள் சரியாக தெரியவில்லை எனில்,அவற்றை குறிப்பிட வேண்டாம். ஏனெனில்,முழுமையற்ற மற்றும் தவறான பதில்கள் உங்களது வாய்ப்பினை குறைக்கலாம். நேர்முகத் தேர்வு நடத்துபவரை ஏமாற்ற நினைக்க வேண்டாம். அது உங்களுக்கே ஆபத்தாக முடியலாம். தவறான பதிலை தருவதை விட பதில் தெரியாது என்று ஒப்புக்கொள்வது நல்லது. அது உங்கள் மேல் ஒரு மரியாதையை ஏற்படுத்தும். ஏனெனில் அனைவருக்கும் அனைத்தும் தெரிந்திருக்காது. உங்கள் குறையை ஒப்புக்கொள்வதில் தவறில்லை.

**சுருக்கமாக பதிலளித்தல்**

என்ன கேள்வி கேட்கப்படுகிறதோ அதற்கு ஏற்றவாறு சுருக்கமான,தெளிவான பதிலை கூறுங்கள். கேள்வியை நன்கு கவனித்தல் முக்கியம் . நீளமான பதில், சிறப்பான பதில் என்று அர்த்தமல்ல. ஒரு கேள்விக்கு பதிலளிக்க ஒரு நிமிடத்திற்கு மேல் எடுக்க வேண்டாம், அது மிகவும் சிக்கலான கேள்வியாக இருந்தால் தவிர.

**குறிப்பான பதில்**

பலர், நேர்முகத்தேர்வில் பதிலளிக்கும் போது, கேள்விகளுக்கு தொடர்பில்லாது விடயங்களையும் சேர்த்துப் பேசுகின்றனர். இதன்மூலம் கேள்வி கேட்பவரை கவர முயல்கின்றனர். ஆனால், இது தவறு. கேள்விக்கான சரியான பதிலை அளிப்பதே குறிப்பிட்ட வேலைக்கு நீங்கள் பொருத்தமானவர் என்ற எண்ணத்தை கேள்ளி கேட்பவரிடம் விதைக்கும். சரியான, முறையான மற்றும் சிறப்பான வார்த்தைகளை பயன்படுத்துவது நல்லது. கேள்வி கேட்பவரை குழப்பும் விதத்தில் பதிலளிக்க வேண்டாம்.

**தெளிவான பதில்**

நேர்முகத் தேர்வில் நீங்கள் கூறும் பதிலானது, தெளிவானதாகவும், நேரடியானதாகவும் இருக்கவேண்டும். நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள்? இன்னொரு முறை சொல்ல முடியுமா? போன்ற கேள்விகளை நேர்முகத்தேர்வு நடத்துபவர்கள் கேட்காத வண்ணம் உங்களின் பதில் இருக்க வேண்டும். உங்களுடைய மொழித்திறன், உங்களின் தொழில் திறனை பிரதிபலிக்கிறது. எனவே,தெளிவாக பேசத் தெரிந்தவரே தேர்வு நடத்துபவர்களை கவர முடியும்.

**நேர்மறையாக பதிலளித்தல்**

உங்களுக்குள் இருக்கும் எதிர்மறை எண்ணங்களை வெளிக்கொணர வேண்மென்றே உங்களிடம் எதிர்மறை கேள்விகள் கேட்க்கப்படலாம். எனவே, நீங்கள் எதிர்மறை கேள்விகள் கேட்க்கப்பட்டாலும் கூட, நேர்மறையாகவே பதிலளிக்க வேண்டும். அப்போது, உங்களின் வாய்ப்புக்களை நீங்கள் அதிகப்படுத்திக்கொள்ள முடியும்.

**தர்க்க ரீதியான பதில்கள்**


உங்களின் தர்க்க ரீதியிலான சிந்திக்கும் திறனை அளவிட அது தொடர்பான கேள்விகள் கேட்கப்படும். தர்க்கம் மற்றும் பகுத்தறிவற்ற பதில்கள் உங்களின் ஒருங்கிணைகப்படாத மற்றும் அமைப்பற்ற ஆளுமைத்திறனை வெளிப்படுத்தும். எனவே, பதிலளிக்கையில் இதுபோன்ற அம்சங்களில் மிகவும் கவனமாக இருக்கவும்.

**வழக்கமான கேள்விகள்**

ஏறக்குறைய அனைத்து நேர்முகத் தேர்வுகளிலும், சில வழக்கமான கேள்விகள் எப்போதுமே கேட்கப்படும். எனவே , அதுபோன்ற கேள்விகளை அடையாளம் கண்டு, அதற்கேற்ப உங்களைத் தயார்ப்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும் உங்களின் நண்பர்களை வைத்து,ஒரு மாதிரி நிகழ்ச்சியையும் நடத்திப்பார்க்கலாம். இதன் மூலம் ஒரு நடைமுறைப்பயிற்சியை நீங்கள் பெறலாம்.

பொதுவாக அனைத்து நேர்முகத் தேர்வுகளிலும் கேட்கப்படும் சில கேள்விகள்.

1. உங்களைப்பற்றி சொல்லுங்கள்,
2. உங்களின் விருப்பங்கள் மற்றும் அது சார்ந்த நடவடிக்கைகள் என்னென்ன?
3. பணி தொடர்பாக உங்களின் திட்டங்கள் என்னென்ன?
4. நாங்கள் ஏன் உங்களை இந்தப்பணிக்கு அமர்த்துகிறோம்? அல்லது இந்தப்பணிக்கு நீங்கள் எவ்வாறு பொருத்தமானவர்?
5. எங்கள் நிறுவனத்தில் சேர நீங்கள் ஏன் விரும்புகிறீர்கள்?
6. உங்கள் பணி அனுபவம் குறித்து சொல்லுங்கள்.
7. உங்களைப் பொறுத்தவரை, ஒரு சிறந்த நிறுவனத்தில் பணிக்கு சேர்வது என்றால் என்ன?
8. படிப்பில் நீங்கள் செய்த சில சாதனைகளைப்பற்றி கூறுங்கள்.
9. இந்தப்பணியை நீங்கள் விரும்புவதற்கான காரணங்



கள் என்ன?

10. தற்போது நீங்கள் செய்து வரும் வேலையில் உங்களின் பொறுப்புக்கள் என்ன?
11. உங்களின் சாதக அம்சங்கள் என்னென்ன?
12.. நீங்கள் பணியில் சந்தித்த ஒரு சவாலான பிரச்சினை மற்றும் அதைத்தீர்க்க நீங்கள் கையாண்ட வழிமுறை ஆகியவற்றைப்பற்றி கூறுங்கள்.
13. உங்கள் பலவீனம் என்று நீங்கள் எதைக்கருதுகிறீர்கள்?
14. உங்களை நீங்கள் எவ்வாறு மதிப்பிட்டுக்கொள்கிறீர்கள்?
15.நீங்கள் ஒரு வழிகாட்டியா? அல்லது வழிநடப்பவரா?
16. எங்கள் நிறுவனத்தில் நீங்கள் எவ்வளவு நாட்கள் பணிபுரிய உத்தேசித்துள்ளீர்கள்?
17.நீங்கள் விரும்புவது முழுநேரப்பணியா? அல்லது பகுதி நேரப் பணியா?
18. சற்று கீழ்நிலைப்பணியாக இருந்தாலும்,சிறிது காலத்திற்கு அதை ஒப்புக்கொள்வீர்களா?
19. எங்களின்,நிறுவனத்தில் எப்போது சேர விரும்புகிறீர்கள்?

இதுபோன்ற கேள்விகளுக்கு நேர்மறையான, நம்பிக்கையான, சாதுர்யமான, தெளிவான,சுருக்கமான எளிமையான முறையில் பதிலளிக்க பயிற்சி எடுக்கவேண்டும். பின்னர், வெற்றி தானாக உங்களைத் தேடிவரும்.

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 74

சோவியத் விமானப்படை இறுதியாக வானில் போர்த்தந்திர ஆதிக்கத்தை வென்றது. இது யுத்தம் முடியும்வரை அப்படியே இருந்தது. ஜேர்மனியின் கவச டாங்கி துருப்புகளின் ஜெனரல் இன்ஸ்பெக்டராக இருந்த கேர்னல் ஜெனரல் குடோரியான் கீழ்க்காணுமாறு ஒப்புக்கொள்ளும்படி நிர்ப்பந்திக்கப்பட்டான். "த்ஸித்தாதேல் தாக்குதல் நடவடிக்கை முறியடிக்கப்பட்டதன் பயனாய் நாங்கள் பெரும் தோல்

கலையைவிட சோவியத் போர்க் கலை மேன்மையானது என்று மெய்ப்பித்தது. போர்த்தந்திர முன்முயற்சியை சோவியத் இராணுவ அரசியல் தலைமையிடமிருந்து பறிக்க பாசிச ஜேர்மனிய படைத் தலைமை செய்த முயற்சி படுதோல்வியடைந்தது. கூர்ஸ்க் அருகே படுதோல்வியடைந்தபின் ஹிட்லரின் உயர்மட்ட படைத் தலைமை தாக்குதல் போர்த் தந்திரத்தை என்றென்றைக்குமாக கைவிட்டு சோவியத் ஜேர்மனியப்


கூர்ஸ்க் சமரின்போது, சோவியத் போர்த்தந்திரத்தின் பருவநிலை தன்மை பற்றி- ஏனெனில் மாஸ்கோ சமரும் ஸ்டாலின்கிராட் சமரும் பனிக்காலத்தில் நடைபெற்றன - ஹிட்லர் பிரச்சாரத்தில் தோற்றுவிக்கப்பட்ட மாயை தகர்த்தெறியப் பட்டது. சோவியத் இராணுவம் இப்போது தன்னால் எதிரியை எந்த

நடைமுறை மண்டலத்தின் இரு கோடுகளில் நின்றன. இரண்டாம் படைவரிசைகளும் மூன்றாவது, நான்காவது கோடுகளில் நின்றன. டாங்கிப்படைகள் பதிலடிகளுக்கு மட்டுமன்றி ஜேர்மனியர்களின் பிரதான தாக்குதல் திசையில் முக்கிய எல்லைகளை உறுதியாகக் கைவசம் வைத்திருப்பதற்கும் பயன்படுத்தப்பட்டன. எதிரி டாங்கிகள் முன்னேறிவரும் பாதையில் தடைகளைத் தோற்றுவித்த மொபையில் தடையணிகள் முதன் முதலாக பரவலான அளவில் பயன்படுத்தப்பட்டன.

ஆதார நிலையங்களின் முறை சோவியத்துருப்புகளின் தற்காப்பின் அடிப்படையாக விளங்கியது. டாங்கி எதிர்ப்பு தடைகள் மற்றும் தடையரண்களால் மூடிமறைக்கப்பட்டிருந்த இந்நிலையங்களில் டாங்கி எதிர்ப்புப்பீரங்கிகளும் தானியங்கிப் பீரங்கிகளும் இருந்தன.

தற்காப்பு கட்டுமானங்கள் மூடி மறைக்கப்பட்டிருந்ததானது தற்காப்பு மண்டலங்களின் பாதுகாப்பில் பெரும் பங்காற்றியது. பாசிச ஜேர்மனிய படைத்தலைமையால், தற்காப்பு முறையைக் கண்டுபிடித்து கூர்ஸ்க் அரை வட்டத்தில் சோவியத் துருப்புகள் திரட்டப்படுவதை கண்டுபிடிக்க இயலவில்லை. இவ்வாறு மூடி மறைக்கப்பட்டிருந்தது. தற்காப்பு படைப்பிரிவுகள் மற்றும் யூனிட்டுக்களின் இழப்புகளைப் பெரிதும் குறைத்தது. ஏனெனில் எதிரியின் தரைப்படையும் விமானங்களும் துருப்புகள் இல்லாத பிரதேசங்கள் மீதுதான் பலத்த

இருதரப்பினதுமாக அண்ணளவாக 3 ஆயிரம் டாங்கிகள் கூர்ஸ்க் சமரில்



வியடைந்தோம். பெரும் கஷ்டப்பட்டு இட்டுநிரப்பப்பட்ட கவச டாங்கித் துருப்புகளுக்கு ஏற்பட்ட பெரும் ஆட்சேதம், பொருட்சேதத்தின் பயனாய் நீண்ட காலத்திற்கு இவை இயங்காத நிலைக்கு மேற்கொள்ளவும் அடுத்த வசந்தத்தில் நேசநாடுகள் இறக்குப்படைகளைக் கீழிறக்குவதாக அச்சுறுத்தி வந்தபடி நடக்கும் பட்சத்தில் மேற்கே தற்காப்பை ஏற்பாடு செய்யவும் இத் துருப்புகளை உரிய நேரத்தில் புனரமைப்பது என்பது கேள்விக்குறியாக இருந்தது. கிழக்குப் போர்முறையில் மேற்கொண்டு அமைதியான நாட்களே இருக்கவில்லை. முன்முயற்சி முழுவது

போர்முனை முழுவதிலும் தற்காப்பிற்கு மாறிச் செல்லும் கட்டாயத்திற்குள்ளானது. போர்த்தந்திர முன் முயற்சி இறுதியாக சோவியத் இராணுவத்திடம் வந்தது. மேற்கு ஜேர்மனிய வரலாற்றாசிரியர் ஹூபச் பின்வருமாறு எழுதினார். "முன் முயற்சியைக் கைப்பற்றுவதற்கு கிழக்குப்போர்முனையில்

ஒரு பருவகாலத்திலும் முறியடிக்க முடியும் என்றும் தம் வெற்றி, முந்தைய நடவடிக்கையோடு ஒப்பிடும் போது அதிக உயர்வான தொழில்நுட்ப அடிப்படையையும் படைத் தலைமையின் கணிசமாக அதிகரித்துள்ள ஸ்தாபனத் திறமைகளையும் ஆதாரமாகக் கொண்டது என்றும் நம்பத்தக்க அளவில் காட்டியது.

## யுத்தத்தின் போக்கில் ஏற்பட்ட திருப்புமுனை

கூர்ஸ்க் டாங்கிப்படைச் சமர்




மாக எதிரியின் கரங்களுக்கு மாறியது..."

கூர்ஸ்க் அருகே அடையப்பட்ட வெற்றியானது, சோவியத் அரசு மற்றும் இதன் இராணுவத்தின் அதிகரித்துள்ள வல்லமையை உலகம் முழுவதற்கும் எடுத்துக் காட்டியது. பூர்ஷ்வா போர்க்

ஜேர்மனியர்கள் செய்த கடைசி முயற்சி வெற்றி பெறவில்லை. வெற்றிபெறாத த்ஸித்தாதேல் நடவடிக்கை ஜேர்மனிய இராணுவ வீழ்ச்சியின் தொடக்கமாக அமைந்தது. இதற் குப்பின் கிழக்கே ஜேர்மனியப் போர்முனை மேற்கொண்டு ஸ்திரமடையவே இல்லை.

சோவியத் இராணுவ விஞ்ஞானமும் நடைமுறையும் போர்க்கலை வளர்ச்சியின் முன்னோக்கிய பாதையில் ஒரு புதிய ஏட்டை ஏடுத்து வைத்தன.

எதிரி எந்தத்திசைகளிலிருந்து தாக்குதல் தொடப்பான் என்பதை சோவியத் படைத்தலைமை முன் கூட்டியே நிர்ணயித்து, தனது சக்திகள் மற்றும் சாதனங்களில் பெரும்பான்மையை அங்கே கொண்டுவந்து குவித்ததானது, கூர்ஸ்க் சமரின்போக்கு முழுவதன் மீதும்பெரும் தாக்கம் செலுத்தியது. அதோடுகூட தற்காப்பு கட்டாயமானதாக இல்லாமல் முன்கூட்டியே திட்டமிடப்பட்டதாக இருந்தது. சோவியத்துருப்புகள் முன்கூட்டியே தற்காப்பு நிலையை மேற்கொண்டன. படைகளின் முதல் படைவரிசைகள் தற்காப்பின் நேரடி



யுத்தத்தினால் வீடை. குடும்பத்தை இழந்த சோவியத் சிறார்கள்

தாக்குதல்களைத் தொடுத்ததால் தம் நோக்கத்தை இவற்றால் நிறைவேற்ற இயலவில்லை. (தொடரும்)

# இலங்கைக்கு துருக்கி ஆதரவு அஸ்வர் எம்.பி.தெரிவிப்பு

நேட்டோ நாடுகளின் உறுப்பு நாடான துருக்கி என்றும் இலங்கைக்கு ஆதரவு தெரிவித்து வந்துள்ளது என்று பாராளுமன்ற உறுப்பினர் அல்ஹாஜ் ஏ.எச்.எம்.அஸ்வர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து நேற்று முன்தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் கலந்துரையாடியுள்ளார்.

சென்ற வருடம் துருக்கி நாட்டுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொண்ட ஜனாதிபதியுடன் அஸ்வர் எம்.பி.தூதுக் குழுவில் இடம்பெற்றார்.

தற்போதைய ஜெனீவா பிரச்சினை சம்பந்தமாக துருக்கி நாட்டின் ஆதரவை பெற்றுக் கொள்ள துருக்கி நாட்டின் தூதுவராக நியமனம் பெற்ற திருமதி பாரதி மனோ விஜேரத்ன அவர்களோடும் தொடர்பு கொண்டு நேற்று முன்தினம் பேச்சுவார்த்தைகளை நடத்தினார்.

துருக்கி ஒரு நேட்டோ நாடாக இருந்தாலும் துருக்கி நாட்டு ஜனாதிபதி உமர்குல் அவர்களுக்கும் எமது ஜனாதிபதிக்கும் நெருங்கிய நட்பு நிலவி வருவதாகவும் ஜெனீவா மனித உரிமைகள் மாநாட்டில் துருக்கி வாக்குரிமை பெற்ற நாடாக இல்லாவிட்டாலும் உரிமை பெற்ற முஸ்லிம் நாடுகள் மற்றும் ஆபிரிக்க நாடுகள் மீதும் தமது செல்வாக்கை பிரயோகித்து இலங்கைக்கு ஆதரவு திரட்டுவதற்கு துருக்கிய நாட்டின் உதவிகளைப் பெற இலங்கை ஏற்கனவே நடவடிக்கை எடுத்து வருவதாகவும் மேலும் அவர் கூறினார்.

இலங்கையின் முதல் துருக்கி நாட்டு தூதுவராக திருமதி பாரதி மனோவிஜயரத்ன ஏப்ரல் மாதம் நடுப் பகுதியில் துருக்கிக்கு பதவி பெற்று செல்வார் என்றும் அவர் தெரிவித்தார். (2-7)

# யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு மீள்குடியேற்ற அமைச்சர் அடங்கிய குழு விஜயம்

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில் பிரதேச செயலகத்திற்குட்பட்ட யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு மீள் எழுச்சி பெறவுள்ள பகுதிகளை மீள்குடியேற்ற அமைச்சர் அடங்கிய குழுவினர் அண்மையில் சென்று பார்வையிட்டனர்.

திருக்கோவில் பிரதேச செயலகத்துக்குட்பட்ட தங்கவேலாயுதபுரம், கஞ்சிகுடிச்சாறு, சாகாமம் ஆகிய பகுதிகளுக்கு விஜயம் செய்த அமைச்சர் குழுவினர் அங்கு மீள்குடியேற்றம் செய்யப்படவுள்ள பகுதிகளை பார்வையிட்டனர்.

மீள்குடியேற்ற அமைச்சர் குணரட்ன வீரக்கோன் மற்றும் மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தலைமையிலான குழுவினரே இந்த விஜயத்தை மேற்கொண்டனர்.

இதன்போது அப்பகுதிகளில் சுய விருப்பின் பேரில் குடியேறியுள்ள மக்களை சந்தித்து அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அவர்களின் தொழில்துறை மற்றும் கல்வி நடவடிக்கைகள் குறித்து கேட்டறிந்ததுடன் விரைவில் குறித்த பகுதிகளில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்திப் பணிகள் குறித்தும் அப்பகுதி மக்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

இதேவேளை, திருக்கோவில் பகுதியில் தற்போது தற்காலிகமாக தங்கியுள்ள மேற்படி மக்களின் பிரதேசங்களையும் சென்று பார்வையிட்டனர்.

மீள்குடியேறிய மக்களின் பிரச்சினைகள் குறித்து கேட்டறிந்த அமைச்சர்கள் அவற்றினை ஏனைய அமைச்சர்களின் கவனத்துக்கு கொண்டு செல்வதாக தெரிவித்ததுடன் சில பிரச்சினைகளுக்கான உடனடி தீர்வுகளும் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

இதன்போது பிரதேச செயலாளர் கோபாலரட்ணம் திணைக்களத் தலைவர்கள், அமைச்சின் செயலாளர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (2-7)

# கல்முனை பிரதேச அபிவிருத்தியில் தமிழ்ப்பகுதிகள் புறக்கணிப்பு

பிரதேச அபிவிருத்தி நடவடிக்கையின் போது கல்முனை மாநகர மேயர் சிராஸ் மீரா சாஹிப் கல்முனை தமிழ்ப் பிரதேங்களை புறக்கணித்து வருவதாக மாநகர சபையின் எதிர்க்ட்சி தலைவர் ஏ.அமிர்தலிங்கம் குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கல்முனை மாநகர சபையில் கடந்த காலங்களில் பதவி வகித்த மேயர்கள் தமிழ்ப் பிரதேசத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளில் நியாயமாக நடந்து கொண்டனர்.

குறிப்பாக முன்னாள் மேயர்கள் மிகவும் பெருந்தன்மையோடு செயற்பட்டனர். ஆனால், தற்போதைய மேயர் சிராஸ் மீரா சாஹிப் கல்முனை தமிழ் பிரதேசங்களை அபிவிருத்தி செயற்பாடுகளின் போது புறக்கணித்து வருகின்றார்.


உதாரணமாக கல்முனை பிரதேசத்தில் 6 இலட்சம் ரூபாய் பெறுமதியான தெருமின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

எனினும் கல்முனை பிரதேசத்தில் மூன்றிலொரு பங்கினராக வசிக்கும் தமிழ் பிரதேசங்களுக்கு 2 இலட்சம் ரூபா பெறுமதியான தெருமின்விளக்குகள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான மின் விளக்குகள் கூட தமிழ் பிரதேசங்களுக்கு வழங்கப்படவில்லை.

முஸ்லிம் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திகளை போன்று தமிழ் பிரதேசங்களுக்குரிய அபிவிருத்தி பங்கினை வழங்க வேண்டும் என்றே கூறுகின்றேன்.

இவ்வாறு தொடர்ந்து தமிழ்ப் பிரதேசங்களை புறக்கணித்து வருவாரேயானால் மாநகர சபையில் அவருக்கு நாம் எவ்விதமான ஒத்துழைப்புகளையும் வழங்க மாட்டோம் என அமிர்தலிங்கம் தெரிவித்தார். (2-7)

# அமெரிக்காவுக்கு எதிராக பேசாத அமைச்சர் யாப்பா-விமல் வீரவன்ச



(கொழும்பு)

அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன என்பவர் மிலிந்த மொரகொடவின் நண்பர். அவர் அமெரிக்காவுக்கு எதிராக ஒரு வார்த்தையை கூட தெரிவிப்பதில்லை என அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். இப்படியான ஒருவர் அமெரிக்காவுக்கு எதிராக கருத்துக்களை வெளியிடுவார் என நம்புவது கடினம்.

யுத்தம் செய்யும் போது யுத்தத்தை செய்ய முடியாது என கூறிவந்தனர். எனினும் யுத்தத்தை நல்லபடியாக செய்து கொண்டு செல்லும் போது அவர்கள் அரசாங்கத்திற்கு தாவினர். அவர் கூறியது போல் நான் தெரிவித்த கருத்து அரசாங்கத்தின் கருத்து அல்ல. அரசாங்கத்தில் இருப்பது போல் எங்களுக்கும் தனியான கொள்கைகள் உள்ளன. அந்த கொள்கையை நாட்டுக்கு தெரிவிக்க எமக்கு உரிமை உள்ளது. நாடு அச்சுறுத்தலுக்கு உள்ளாகி இருக்கும் சந்தர்ப்பத்தில் அதற்கு எதிராக மக்களை அணிதிரட்டி அதனை தோற்கடிக்க முயற்சிகளையும் அர்ப்பணிப்புக்களையும் செய்ய வேண்டியது அவசியமாகும் எனவும் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். (2-7)

# அவுஸ்திரேலிய செனட் தேர்தலில் போட்டியிடும் விக்கிலீக்ஸ் ஜூலியன்

(கொழும்பு)

அவுஸ்திரேலிய பிரஜையான விக்கிலீக்ஸ் இணையத்தள ஸ்தாபகரான ஜூலியன் அசேஞ்ச் அவுஸ்திரேலிய செனட் சபை தேர்தலில் போட்டியிட இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

40 வயதுடைய அவர் பாலியல் குற்றச்சாட்டுக்களுக்காக சுவீடனுக்கு நாடு கடத்தப்படுவது தொடர்பாக பிரிட்டிஷ் நீதிமன்ற முடிவை எதிர்பார்த்திருக்கிறார்.

இக்குற்றச்சாட்டுக்களை மறுக்கும் அவர் இவை அரசியல் நோக்கம் கொண்டவை எனவும் ஆயிரக்கணக்கான இணையத்தள இரகசிய தகவல்களை வெளியிட்ட விக்கிலீக்ஸ் இணையத்தளத்திற்கு கலங்கம் விளைவிப்பவை எனவும் அசேஞ்ச் குற்றம் சாட்டியுள்ளார்.

அவுஸ்திரேலிய நாடாளுமன்ற உயர் சபையான செனட் சபைக்கு அசேஞ்ச் போட்டியிட தகுதியுடைய அந்தஸ்து உடையவராக கருதப்படுகிறார் என அவுஸ்திரேலிய செய்திகள் தெரிவிக்கின்றன. (2-7)

# வவு. பூந்தோட்ட நலன்புரி நிலைய பாடசாலை கட்டடம் தீக்கிரை

(வவுனியா)

வவுனியாவிலுள்ள பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் முன்னர் பாடசாலையாக இயங்கி வந்த கட்டடம் இனந்தெரியாதோரால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு 7 மணியளவில் அப்பகுதியிலுள்ள கிணற்றில் நீராடச் சென்றவர்கள் கட்டடம் தீப்பிடித்து எரிவதை கண்டு அயலவர்களை அழைத்து தீயை அணைக்க முற்பட்டனர். இருப்பினும் தீயை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முடியாது போன நிலையில் பொலிஸாரின் உதவியுடன் தீ கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். இக்கட்டடம் முழுமையாக தீப்பிடித்து எரிந்துள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

இக்கட்டடமானது 1995 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இடம்பெயர்ந்து வந்த மாணவர்களின் பாடசாலையாக இயங்கி வந்திருந்தது.. இக் கட்டடத்தில் இயங்கி வந்த பாடசாலையை இந்த வருடத்துடன் மூடி அருகிலுள்ள பாடசாலைகளில் மாணவர்கள் இணைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தற்போது பூந்தோட்ட நலன்புரி நிலையத்தில் 155 குடும்பங்களே தங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-7)




முள்ளியவளை கிழக்கு 108 கிராம அலுவலர் பிரிவின் கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் அப்பகுதி சங்க உறுப்பினர்களுக்கு சுய தொழில் சுழற்சி முறை கடன் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் மாலை அணிவித்து வரவேற்கப்படுவதையும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் சுரேஸ் பயனாளி ஒருவருக்கு உதவித் தொகையினை வழங்குவதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.




# அம்புலி மாமா கதைகள்

## மரியாதையைக் கெடுக்கும் தொழில்




வைசாலி நகரத்தில் சோமகுப்தன் என்ற வணிகன் வசித்து வந்தான். குறுகிய காலத்தில் அதிக முதலீடு எதுவுமின்றி ஏராளமான பொருள் சம்பாதித்து கோடீஸ்வரனாக ஆசை கொண்டான். ஆனால் எத்தகைய தொழிலில் எவ்வாறு முதலீடே இல்லாமல் நிறையப் பணம் சம்பாதிக்கலாம் என்று அவன் யோசித்து வந்தான். ஒரு நாள் நகரத்தில் ஒரு பெரிய செல்வரின் வீட்டில் இலட்சக்கணக்கான பணத்தைத் திருடர்கள் வீடு புகுந்து திருடிச் சென்றனர்.

திருட்டுத் தொழிலில் முதலீடு எதுவுமின்றி ஏராளமாகப் பணம் சம்பாதிக்க முடியும் என்ற உண்மை அவனுக்கு அப்போது தான் விளங்கியது. உடனே அவன் தன்னுடைய வியாபாரத்தை விட்டுவிட்டு திருட்டுத் தொழிலில் எவ்வாறு ஈடுபடுவது என்று யோசிக்கத் தொடங்கினான். சில நாட்களுக்குப் பின்பு நகர எல்லையில் உள்ள ஒரு பாழடைந்த கோயிலில் சில திருடர்கள் வசிக்கின்றனர் என்று தெரிந்து கொண்டு அவர்களுடன் பரீட்சயம் செய்து கொள்ள இரவு நேரங்களில் அங்கு சென்று உறங்க ஆரம்பித்தான்.

திடீரென அந்நியன் ஒருவன் இரவு நேரங்களில் தங்கள் மறைவிடத்தில் தூங்குவது கண்ட திருடர்கள் சோமகுப்தனை ஒரு அநாதை என்றும் தமது திருட்டுத் தொழிலுக்கு அவனையும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் எண்ணினர். ஒருநாள் இரவில் திருடர்கள் இருவர் சாமான்கள் சுமக்கும் காவடிகள் கொண்டு வந்தனர். அவர்களில் குட்டையாக இருந்தவன் தூங்கிக் கொண்டிருந்த சோமனை எழுப்பி "தம்பி எங்களுடைய சகா ஒருவன் இன்று வரவில்லை. அவனுக்குப் பதிலாக நீ எங்களுடன் திருட வருவாயா" என்று கேட்டான்.

திருட்டுத் தொழிலில் அனுபவம் பெறுவதற்கான வாய்ப்பை எதிர்பார்த்துக் காத்திருந்த சோமன் உடனே மகிழ்ச்சியுடன் ஒப்புக் கொண்டான். உடனே இரு திருடர்களும் சோமனை ஒரு விவசாயி போல் வேடம் தரிக்கச் செய்தனர். பின்பு அவர் தலையில் வெல்லம் அடங்கிய ஒரு மூட்டையை ஏற்றி கையில் ஒரு கழியையும் கொடுத்தனர்.

திருட்டுத் தொழிலுக்கு இத்தனை ஒப்பனை தேவையா என்று சோமன் ஆச்சரியப்பட்டான். பின்பு அவர்கள் இருவரும் சோமனைத் தன்னுடன் அழைத்துச் சென்றனர். அவர்கள் நகரத்தின் பிரதான தெருக்களில் சென்றனர். செல்லும்



வழியில் இருட்டில் படுத்திருந்த ஒரு நாயின் வாலைத் தெரியாமல் சோமன் மிதித்துவிட நாய் பயங்கரமாகக் குரைத்தது. குரைப்புச் சத்தத்தைக் கேட்டதுமே சோமன் மிகவும் பயந்துபோனான். அவன் தலையிலிருந்த மூட்டையிலிருந்து சிறிது வெல்லம் தரையில் விழுந்து சிதற அதை நாய் பாய்ந்து சென்று சாப்பிடத் தொடங்கி தான் குரைப்பதை நிறுத்தியது.

"தம்பி! நீ திருடப்போகிறாய் என்பதை நினைவுபடுத்திக் கொண்டு எச்சரிக்கையாக நடந்து செல்ல வேண்டும். இப்போது இந்த சத்தத்தைக்கேட்டு யாராவது காவலன் வந்தால் ஏதாவது உளறிவிடாதே! வாயை மூடிக்கொண்டிரு!" என்று உயரமான திருடன் எச்சரித்தான். அவன் சொல்லி முடிப்பதற்குள் அங்கு குதிரை மீது சவாரி செய்தவாறு ஒரு காவலன் தோன்றினான். அவர்களைக் கண்டதும் "யாரடா நீங்கள்? இந்த இரவு நேரத்தில் எதற்கு தெருக்களில் திரிந்து கொண்டிருக்கிறீர்கள்?" என்று உறுமினான்.

அவனைக் கண்டதுமே சோமனின் சப்தநாடியும் ஒடுங்கிவிட்டது. பயத்தில் கை, கால்கள் நடுங்கின. உடனே குட்டையான திருடன் "ஐயா! நாங்கள் பக்கத்துக்கிராமத்து வியாபாரிகள். வெல்லம் விற்பதற்காக நகரத்திற்கு வந்தோம். வியாபாரம் முடிந்து இரவு தங்குவதற்காக விடுதியை நோக்கிச் செல்கையில் வழி தவறிவிட்டோம். சத்திரத்திற்குச் செல்லும் வழியை தயவுசெய்து காட்டுவீர்களா?" என்று அப்பாவிபோல் நடித்தான்.

"ஓகோ! நீங்கள் கிராமத்து ஆசாமிகளா? பாவம் நாள் முழுவதும் மூட்டையைத் தலையில் ஏற்றித் தெருத்தெருவாக அலைந்து களைத்திருப்பீர்கள். அதிருக்கட்டும்! இப்படி நாள் முழுவதும் உழைத்து இவன் எப்படித் தொந்தியும் தொப்பையுமாக இருக்கிறான்?" என்று சோமனைக் காட்டிக் கேட்டான். சோமனுக்குப் பயத்தில் உயிரே போய்விடும் போலிருந்தது. தான் இன்று சிக்கிக் கொள்வோம் என்று நடுங்கினான்.


அதற்குள் உயரமான திருடன் சாமர்த்தியமாக "ஐயா! நாங்கள் சகோதரர்கள். இவன் என் தம்பி பீமன்! சரியான சோம்பேறி! உழைக்காமல் உண்டு பெருச்சாளி போல இருக்கிறான். இன்றுதான் முதன் முதலாக மூட்டைதூக்கி வியாபாரம் செய்ய வந்திருக்கிறான்" என்றான். அதைக்கேட்டு பலமாகச் சிரித்த காவலன் அவர்களுக்கு சத்திரம் செல்லும் வழியைக் காட்டிவிட்டு "சரி! நீங்கள் நேராக அங்கு சென்றுவிடுங்கள்! ஒரு மணிநேரம் சென்றபின் நான் அங்கு வந்து நீங்கள் இருக்கிறீர்களா என்று சோதனை செய்வேன்!" என்று எச்சரித்துவிட்டுப் புறப்பட்டான்.

சோமனுக்குச் சென்ற உயிர் மீண்டது. ஆயினும் திருட்டுத் தொழில் மீது அக்கணமே வெறுப்பு ஏற்பட்டுவிட்டது. 'சே! ஒவ்வொரு நொடியும் பயப்பட வேண்டியிருக்கிறது. கண்டவரிடமெல்லாம் பொய் பேச வேண்டியிருக்கிறது. காவலர்கள் கையில் மட்டும் அகப்பட்டால் நம்மைப் பின்னி எடுத்துவிடுவார்கள். இப்படிப் பயந்து பயந்து அடி, உதை வாங்கிக் கொண்டு இந்தத் தொழிலைச் செய்ய வேண்டுமா?' என்று அவனுக்குத் தோன்றியது.

ஏனைய இருவரும் அவனை ஒரு மாளிகைக்கு அழைத்துச் சென்றனர். அது ஒரு வைர வியாபாரியின் வீடு. சோமனை வாயிலில் காவலுக்கு நிறுத்தி விட்டு அவர்கள் இருவரும் உள்ளே புகுந்தனர். உடனே தப்பித்தோம் பிழைத்தோம் என்று சோமன் தன் வீட்டை நோக்கிப் புறப்பட்டான். சிறிதுதூரம் சென்றதும் தான் விட்டு வந்த மாளிகை அருகே ஒரே கலவரமும் ஆரவாரமும் கேட்டு திடுக்கிட்டுத் திரும்பினான்.

தன்னுடன் வந்த திருடர்களில் ஒருவன் மாட்டிக்கொண்டதையும் தப்பியோடும் மற்றவனைக் காவலர்கள் துரத்துவதையும் கண்டு இருட்டான ஒரு சந்தில் ஓடி ஒளிந்து கொண்டான். சற்று நேரத்தில் காவலர்கள் இரண்டு பேரையும் கைகளைக் கயிற்றினால் கட்டி தெருவில் இழுத்துச் சென்றனர். 'கடவுளே! இந்நேரம் நான் சிக்கியிருந்தால் என்னையும் அல்லவா சவுக்கால் அடித்து இழுத்துச் சென்றிருப்பார்கள்! என்ன தவறு செய்ய இருந்தேன். இனி திருடுவதைப்பற்றிக் கனவில் கூட நினைக்கக்கூடாது' என்று எண்ணியவாறு வீட்டை அடைந்தான்.

மறுநாள் அவன் மனைவி "நேற்றிரவு இரண்டு திருடர்களைக் காவலர்கள் துரத்திப்பிடித்து இழுத்துச் சென்றார்கள். தப்பித்து ஓட முயற்சித்த இருவரையும் காவலர்கள் கொன்றுவிட்டார்கள்" என்றாள். சோமன் மனதிற்குள் கடவு



ளுக்கு நன்றி கூறிவிட்டு "கடவுளே இனி நான் அந்த மோசமான தொழிலைப் பற்றி நினைத்துக் கூடப் பார்க்க மாட்டேன். கிடைத்தது போதும் என்று இப்போது செய்யும் வியாபாரத்தையே தொடர்ந்து செய்வேன்!" என்று பிரார்த்தனை செய்து கொண்டான்.




இயேசு ஜீவிக்கிறார் ஊழியத்தின் 34 ஆவது வருட சுவிஷேச மாநாடு யாழ். மாநகர சபையின் மைதானத்தில் கடந்த மூன்று நாட்களாக நடைபெற்றபோது....

# கொமன்வெல்த் வரவேற்பு நிகழ்விற்கு புறக்கணிக்கப்பட்ட சவேந்திர சில்வா

## இலங்கை வெளிவிவகார அமைச்சு தகவல்

கொமன்வெல்த் நாளை முன்னிட்டு நியூயோர்க்கில் உள்ள பிரித்தானிய வதிவிடப் பிரதிநிதியின் பணியகத்தில் கடந்த வாரம் வரவேற்பு நிகழ்வு ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இந்த வரவேற்று நிகழ்விற்கு நியூயோர்க்கில் உள்ள ஐ.நாவுக்காக இலங்கையின் பிரதி நிரந்தரவதிவிடப் பிரதிநிதியான மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை.

சவேந்திர சில்வாவுக்கு அழைப்பு விடுக்கப்படாதமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஐ.நாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப்பிரதிநிதி பாலித கோஹன்ன இந்த நிகழ்வில் கலந்து கொள்ளாமல் புறக்கணித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு அவுஸ்திரேலியாவுடன் இணைந்து கொமன்வெல்த் கூட்டத்திற்கு இலங்கையே இணைத்தலைமை வகிக்கின்றது. இந்நிலையில் சவேந்திரசில்வா புறக்கணிக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் பாலித கோஹன கொழும்பு உயர் மட்டங்களுடன் ஆலோசித்த பின்பே நிகழ்வை புறக்கணிக்கும் முடிவை எடுத்துள்ளார்.

இதேவேளை, அவுஸ்திரேலியாவுடன் கலந்தாலோசிக்காமலேயே போர்க்குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ள மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு அழைப்பு விடுப்பதில்லை என்ற முடிவை பிரித்தானிய நிரந்தர வதிவிடப் பிரதிநிதி சேர்மார்க் லயல் கிரான் எடுத்துள்ளார்.

இந்த நிலையில் வெள்ளைக்காரர்கள் சவேந்திர சில்வாவைக் குறிவைத்து செயற்படுவதாக உணரமுடிகின்றது என்று இலங்கையின் வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளது. ஏற்கனவே ஐ.நா. பொதுச் செயலருக்கு அமைதி காப்பு நடவடிக்கைகள் தொடர்பாக ஆலோசனை வழங்கும் குழுவின் உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட சவேந்திர சில்வாவை அந்த குழுவில் இருந்து வெளியேற்ற அதன் தலைவரான கனடாவை சேர்ந்த லூயிஸ் பிரசெற் முயன்றதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஜெனீவாவில் தீவிரம் பெற்றுள்ள இலங்கை மீதான போர்க்குற்றச்சாட்டுக்கள் கடந்த வாரம் நியூயோர்க்கிலும் எதிரொலித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-7)

# இலங்கை 13 ஆவது திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்த இந்தியா அழுத்தம்?

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கெதிரான தீர்மானத்தை வைத்து 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறு இலங்கை அரசுக்கு இந்தியா அழுத்தங்களை கொடுத்து வருவதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

ஜெனீவாவில் இலங்கைக்கெதிராக அமெரிக்கா கொண்டு வரப்பட்டுள்ள தீர்மானத்தை எதிர்த்து வாக்களிப்பதனால் இலங்கை 13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற வகையிலேயே இந்தியா அழுத்தங்களை கொடுத்து வருவதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எனினும் 13 ஆவது திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளவாறு தமிழர்களுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை பகிர்ந்து வழங்குமாறு அழுத்தம் கொடுக்கப்படுகிறதா என்பது தெளிவாக தெரியவில்லை என்றும் கொழும்பு ஊடகங்களும் தகவல் வெளியிட்டுள்ளது.

இதேவேளை, ஜெனீவாவில் கொண்டு வரப்பட்டுள்ள தீர்மானத்தை ஆதரிப்பதா, இல்லையா என்று இதுவரையில் இந்தியா அறிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (2-7)

# மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒருதொகுதி ஆயுதங்கள் மீட்பு

முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளின் போது தமிழீழ விடு தலைப் புலிகள் அமைப்பினரால் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டுகளும் இராணுவ உபகரணங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

வவுனியா பிராந்திய குற்றப்புலனாய்வு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளின் போதே இந்த உபகரணங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இதில் ஆர்.பீ.ஜீ. குண்டுகள், விமான எதிர்ப்பு ஏவுகணைகள் மற்றும் துப்பாக்கிகளும் அடங்கியுள்ளன.

அடையாளம் காணப்படாத ஆயுதங்களின் பாகங்களும் இதன்போது கைப்பற்றப்பட்டுள்ளன. பதவியா மற்றும் பாலம்பிட்டி ஆகிய பிரதேசங்களின் வரைபடங்களும் இந்த தேடுதலின் போது கண்டெடுக்கப்பட்டுள்ளன. (2-7)

# ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தும் தவக்காலம்

## மனமாறி வாழ இறைவனின் அழைப்பு



இறைவன் உலகை உண்டாக்கினார். அந்த ஆழமான உலகை பல அணிகலன்களைக் கொண்டு அலங்கரித்தார். அவரால் படைக்கப்பட்ட உலகை கண்நோக்கினார். அனைத்தையும் நல்லதென உணர்ந்தார். படைப்புக்களில் அதிசிறந்த படைப்பாக மனிதனை பார்த்தார். ஆனால் நாளடைவில் மனிதன் தன்னியல்பை இறைவனுக்கு வெளிப்படுத்தினான்.

இருந்தாலும் மனிதன் புனிதனாக வாழவேண்டுமென்பதே மனிதனை உண்டாக்கிய இறைவனின் தணியாத விருப்பமாக இருந்தது. அதனால் மண்ணுக்கு வந்த இறைமகன் மனிதனை மனமாறி உண்மை வாழ்வைத் தொடர அழைப்பு விடுத்தார்.

இயேசுவினுடைய அழைப்பு வேரோட்டமான மனமாற்றத்திற்கான அழைப்பாக காட்சி தருகின்றது. வாழ்வின் பார்வைகள், தேடல்கள், புரிதல்கள் என்பனவே வாழ்வின் எல்லா அசைவுகளுக்கும் பொருள் தர வேண்டும் என்பதை இயேசு வலியுறுத்துகின்றார்.

இவ்வாழ்வுக்கான மனநிலையை ஏற்றுக்கொள்வது தான் மன மாற்றத்துக்குரிய அழைப்புக்கான பதில் என்பதையும் இயேசு முன்னிறுத்துகின்றார். இன்று நாம் ஒவ்வொருவரும் எவ்வாறு வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்? பாவயிருள் சூழ்ந்த உலகிற்கு வலுச்சேர்த்து அழிவை நோக்கியே நாம் பயணிக்கின்றோம் என்றால் மிகையாகாது. இதனால் எமது வாழ்வில் துன்பங்களையும் வேதனைகளையும் இழப்புக்களையும் பிரிவுகளையுமே நாம் நாளும் சந்திக்கின்றோம். இதனால் எமது வாழ்வில் அமைதியில்லை. உள்ளத்தில் மகிழ்ச்சியில்லை. இதில் இருந்து நாங்கள் விடுபட வேண்டுமெனில் வாழ்வைக் காண வேண்டுமெனில் இயேசுவின் மனமாற றத்துக்கான அழைப்புக்கு நாம் செவிமடுக்க வேண்டும்.

ஏனெனில் எமது வாழ்வில் ஓர் உண்மை மாற்றம் ஏற்பட வேண்டும். வன்முறை எண்ணங்களோடும் வதைக்கும் கனவுகளோடும் வாழும் எம் சமுதாயத்திற்கு உண்மை மனமாற்றம் வேண்டும். பிறர் வாழ்வில் தீமை நினைக்கும் எமது சுயநலப்போக்கில் இருந்து நாம் விடுபட வேண்டும். எமது அகவாழ்வுக்கும் புற வாழ்வுக்கும் இடையேயான முரண்பாடுகள் களையப்பட வேண்டும். அதனால் இயேசுவின் சீடனாக நான் மாற வேண்டும்.

அருட் சகோதரர்
றமேஸ் அ.ம.தி

# ரயிலில் தவறிவிழுந்த இளைஞன் மரணம்

வெயாங்கொடையில் புகையிரதத்தில் இருந்து தவறி கீழே விழுந்து ஒருவர் உயிரிழந்துள்ளார். கொழும்பிலிருந்து வவுனியா நோக்கி பயணித்துக் கொண்டிருந்த புகையிரதத்தின் மிதிபலகையில் பயணம் செய்த இளைஞர் ஒருவரே நேற்று முன்தினம் பிற்பகல் மூன்று மணியளவில் இந்த அனர்த்தத்தில் உயிரிழந்துள்ளார்.

வெயாங்கொடை எழுவ பிரதேசத்தில் 24 வயதுடைய இளைஞர் ஒருவரே உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (2-7)

# மட்டக்களப்பில் ஊனமுற்றோர் இல்லம்

யுத்தம் காரணமாக அவயவங்களை இழந்து சமூகத்தால் கைவிடப்பட்ட நிலையில் உள்ள வலது குறைந்தோரை பராமரிப்பதற்காக லண்டன் நம்பிக்கை ஒளி அமைப்பின் நிதியுதவியுடன் உலக நண்பர்களின் தேவைகளுக்கான அமைப்பு மட்டக்களப்பு கல்லடியில் பராமரிப்பு இல்லம் ஒன்றை நேற்றைய தினம் திறந்து வைத்துள்ளது.

இந்த ஆரம்ப நிகழ்வுக்கு தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் தமிழ்நேசன், தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு நகர பகுதி இணைப்பாளர் பிரசன்னா இந்திரகுமார் மற்றும் மத தலைவர்களும் நிறுவனத்தின் பணிப்பாளர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (2-7)

# பிரபாவுடன் நேரடியாக பேச முயன்ற ஐ.நாவுக்கு ஆப்பு வைத்த மஹிந்த!

(கொழும்பு)

இலங்கைப் போரின் இறுதிமாதங்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடன் ஐக்கிய நாடுகள் சபை நேரடியாக பேச்சில் ஈடுபட முயன்று இருக்கின்றது.

ஆனால், பயங்கரவாத அமைப்பு ஒன்றுடன் பேச்சுக்களில் ஈடுபடுவது குறித்து ஐக்கிய நாடுகள் சபையால் எப்படி சிந்திக்க முடிகின்றது? என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கேள்வி எழுப்பியுள்ளார்.

மனிதாபிமானத்தின் பேரில் யுத்தத்தை இடை நிறுத்துதல், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினரை சரணடைய வைத்தல் ஆகிய காரணங்களை முன்னிறுத்தியே ஐ.நா. சபை பேச்சில் ஈடுபட விரும்பி இருக்கின்றது.

இவ்விருப்பத்தை ஜனாதிபதி மஹிந்தவிடம் வெளிப்படுத்தி இருக்கின்றார் ஐ.நா. உயரதிகாரிகளில் ஒருவரான விஜய் நம்பியார்.

ஆனால், அப்படி செய்ய முடியாது என்று ஜனாதிபதி முற்றாக நிராகரித்து விட்டார்.

பாதுகாப்பு வலயத்தில் இருந்து சிவிலியன்களை புலிகள் விடுவிப்பார்கள் என்பதற்கு உத்தரவாதம் கிடையாது என்றும் இவ்விடயத்தில் புலிகள் ஒத்துழைப்பார்கள் என்பதற்கு எந்தவிதமான அறிகுறியும் தெரியவில்லை என்றும் ஜனாதிபதி சொல்லி இருக்கின்றார்.

கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் இருந்து அமெரிக்க வெளியுறவு அமைச்சுக்கு கடந்த 2009 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17 ஆம் திகதி அனுப்பப்பட்ட இராஜதந்திர ஆவணம் ஒன்றில் இருந்து விக்கிலீக்ஸ் மூலம் இத்தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. (2-7)

# உலக மக்கள் அமைதி வேண்டி பிரான்சில் மாபெரும் ஊர்வலம்

## தமிழ் மக்களும் பங்கேற்பு




உலகம் மக்கள் மயப்படுத்தப்பட வேண்டிய சூழ்நிலையில் இன்று பிரான்சில் பல்லின மக்கள் அமைப்புகள், பல மனிதவுரிமை அமைப்புகள், பல அரசியல் கட்சிகளின் ஆதரவுடன் ஏற்பாடு செய்யப்பட்ட மாபெரும் ஊர்வலத்தில் தமிழ் மக்களும் பங்கு கொண்டனர்.

உலகத்தில் அமைதி வேண்டும் என்று உருவான ஐக்கிய நாடுகள் சபை கூட இன்று அரசுகளின் பாதுகாவலர்களாக இருந்து கொண்டு மக்கள் அரசியல் வாதிகளின் சர்வாதிகாரத்திற்குள் படுகொலை செய்வதை பார்த்து கொண்டிருக்கிறார்கள்.

இந்த சூழ்நிலையில் தான் ஐக்கிய நாடுகள் சபையின் அமைதி படையின் பார்வையில் இருந்த செர்பெனிசவில் போஸ்னியா மக்கள் படுகொலை செய்யப்படும் போது நேரில் பார்த்து கொண்டு இருந்த இந்த படை ருவாண்டாவில் டுட்சி இன மக்கள் படுகொலை செய்யப்படும் போது நேரடியாக பார்த்து கொண்டு இருந்த பிரா ன்சிய இராணுவமும் கட ந்த 2009 இல் தமிழர்கள்படுகொலைசெய்யப்பட்டபோதும் பார்த்துக் கொண் டிருந்தார்கள்.

உலகத்தில்வாழும்அனை த்து இன மக்களின் சுய நிர்ணயவுரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையுடன் இந்த ஊர்வலம் நடைபெற்றது. தமி ழர்கள் இலங்கையில் நடைபெற்ற தமிழினப் படுகொலையை வெளிப் படுத்தி பதாதைகளும் துண்டு பிரசுரங்களும் விநியோகித்து கலந்து ரையாடி தமது விடு தலை போராட் டத்தை பல்லின மக்களின் விடு தலை போராட்டத்துடன் இணைந்து இன்று உலகத்தில் போராடும் அத்தன்ன மக்களும் தமது உரிமைகளை வென்றிட ஒன்றிணைய வேண்டிய முக்கியத்துவத்தை எடுத்து காட்டினர்.

இதேவேளை, அங்கு வருகை தந்திருந்த பிரான்சு நாட்டு ஜனாதிபதி தேர்தலில் பச்சை கட்சி சார்பாக வேட்பாளராக நிற்கும் திருமதி எவ ஜோலியை சந்தித்து தமிழர் சார்பாக எமது கோரிக்கையை கையளித்தனர். அதுமட்டுமல்லாமல் ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினராக இருக்கும் அவரிடம் ஐரோப்பிய பாராளுமன்றம் தமிழ் மக்களின் உரிமையை பாதுகாக்கும் விடயத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

இந்த மாபெரும் ஊர்வலம் பிரான்சில் அரசாட்சிக்கு எதிராக மக்கள் புரட்சி நடைபெற்ற பஸ்தியில் முடிவு பெற்றது. (2-7)

# அரசியல்வாதிகளுக்கென தனியான வீதி போக்குவரத்து சட்டங்கள் இல்லை

## அஜித் ரோஹன தெரிவிப்பு

(கொழும்பு)

அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு என தனியான வீதிப் போக்குவரத்து சட்டங்கள் கிடையாது என பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது.

நாட்டில் அனைவருக்கும் ஒரே விதமான சட்டங்களையே பின்பற்ற வேண்டுமென பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

வீதிப் போக்குவரத்துச் சட்டங்களை மீறியோ அல்லது அதிக வேகமாகவோ அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வீதியில் பயணம் செய்ய முடியாது. வீதிப் போக்குவரத்து சட்டங்களை மீறிச் செயற்படும் அரசியல்வாதிகளுக்கு எதிராக பொலிஸ் உத்தியோகத்தர்கள் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரத்தில் அமைச்சர்களின் மூன்று வாகனங்கள் விபத்துக்குள்ளாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-7)

# அருங்காட்சியகத்திற்கு பாதுகாப்பு வழங்க போதுமான வளங்கள் இல்லை

## கலாநிதி ஜகத் பாலசூரிய தெரிவிப்பு

(கொழும்பு)

தேசிய அருங்காட்சியகத்தில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கென குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் உதவி பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபரின் ஆலோசனைக்கு அமைய இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகள் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, திருடப்பட்ட விலைமதிப்பற்ற தொல் பொருட்கள் நாட்டிலிருந்து வெளியேற்றப்படுவதை தடுக்கும் வகையில் சுங்கத் திணைக்களத்திற்கு அதுபற்றி தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதனிடையே தேசிய அருங்காட்சியகத்திற்கு போதுமானளவு பாதுகாப்பு வழங்கப்பட வேண்டுமென தேசிய மரபுரிமைகள் அமைச்சர் கலாநிதி ஜகத் பாலசூரிய தெரிவிக்கின்றார்.

அருங்காட்சியகத்திற்கு பாதுகாப்பு வழங்குவதற்கு தேவையான வளங்கள் தற்போது காணப்படவில்லை எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய அருங்காட்சியகத்தில் திருட்டுச் சம்பவம் இடம்பெற்ற போது அங்கு மூன்று தனியார் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மாத்திரமே இருந்துள்ளமை தெரியவந்துள்ள தென தேசிய மரபுரிமைகள் அமைச்சர் மேலும் கூறியுள்ளார். (2-7)

# தாச்சிச் சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

விநாயகர் சனசமூக நிலையத்தின் கீழ் இயங்கி வரும் கைதடி தென்கிழக்கு விநாயகர் விளையாட்டுக் கழகம் நடத்தும் மாபெரும் தாச்சிச்சுற்றுப் போட்டி நடைபெற்று வருகின்றது. இச்சுற்றின் அரையிறுதிப் போட்டிகள் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகின்றன.

இன்றைய தினம் குழு 2 ஐச் சேர்ந்த மின்னொளி ஏ அணியை எதிர்த்து வளர்மதி டி அணி மோதவுள்ளது. (2-7)




★1279- யாமென் என்ற இடத்தில் இடம் பெற்ற சமரில் மங்கோலியாவின் வெற்றியுடன் சீனாவில் சோங் அரச பரம்பரை முடிவுக்கு வந்தது.

★1861- நியூசிலாந்தில் முதலாவது தரனாக்கி போர் முடிவுக்கு வந்தது.

★1915- புளூட்டோவின் ஒளிப்படம் முதற் தடவையாக எடுக்கப்பட்டது. ஆனாலும் அது கோளாக கருதப் படவில்லை.

★1918-நேர வலயங்களை ஐக்கிய அமெரிக்க காங்கிரஸ் நிறுவி பகலொளி சேமிப்பு நேரத்தை அங்கீகரித்தது.

★1932- சிட்னி துறைமுகப் பாலம் திறந்து வைக்கப்பட்டது.

★1944- இரண்டாம் உலகப் போர்: நாசி படைகள் ஹங்கேரியைக் கைப்பற்றினர்.

★1945-இரண்டாம் உலகப் போர்: ஜப்பானில் யூ எஸ் எஸ் பிராங்கிளின் என்ற அமெரிக்க விமானம் தாங்கிக் கப்பல் தாக்கி மூழ்கடிக் கப்பட்டதில் 800 பேர் உயிரிழந்தனர்.

★1972-இந்தியாவும் வங்காளதேசமும் நட்புறவு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன.

★1982- போக்லாந்து போர்: ஆர்ஜெண்டீனியர்கள் தெற்கு ஜோர்ஜியா தீவில் தரையிறங்கினர்.

★1988-இந்திய அரசிடம் நீதி கோரி உண்ணா நோன்பு போராட்டத்தை அன்னை பூபதி தொடங்கினார்.நீதி வழங்காத நிலையில் ஏப்ரல் 19 இல் சாவை தழுவினார்.

★2002- ஐக்கிய அமெரிக்காவின் ஆப்கானிஸ்தான் மீதான படையெடுப்பு முடிவுக்கு வந்தது.

★2004-தாய்வான் பிரதமர் சென் ஷூயி பியான் சுட்டுக் காயப்படுத்தப்பட்டார்.

பிறப்புக்கள்

★1883- வால்டர் ஹவேர்த், நோபல் பரிசு பெற்ற பிரித்தானியர் (இ.1950)

★1900- பிரெடெரிக் ஜோலியோட் ,நோபல் பரிசு பெற்றவர் (இ.1958)


★1943- மரீயோ மொலீனா,நோபல் பரிசு பெற்ற வேதியியலாளர்

இறப்புக்கள்

★1950-எட்கார் பரோஸ், அமெரிக்க எழுத்தாளர் (பி.1875)

★1950-வால்டர் ஹவேர்த்,நோபல் பரிசு பெற்ற பிரித்தானியர் (பி.1883)

★2008-ரகுவரன்,தென்னிந்திய திரைப்பட நடிகர் (பி.1948)



★2008-அறிவியல் புதின எழுத்தாளர் ஆதர் சி கிளார்க் நினைவு தினம் (பி.1917)

# அதிசய உலகம்...

## பியானோ வாசிக்கும் நாய்கள்




பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பெண்ணொருவர் தமது வளர்ப்பு நாய்களுக்கு பியானோ வாசிப் பதற்கு கற்றுக்கொடுக்கிறார். நாய்களும் பியானோ கற்றுக் கொடுக்கும் காட்சியை அவர் வீடியோவில் ஒளிப்பதிவு செய்து இணையத் தளத்திலும் வெளி யிட்டுள்ளார்.

அப் பெண்மணி வளர்ப்பு நாய் கள் இரண்டும் பியானோ வாசிக் கும் விதத்தை அழகாக யூரியூப்பில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த பெண்மணி புல்லாங்குழலை ஒத்த இசைக்கருவியான ஒகரினாவை வாயால் இசைக்க அதற்கேற்ப குறித்த நாய்கள் இரண்டும் தமது பாதங்கள் மூலம் பியானோவை வாசிப்பது படத்தில்.

## குளோனிங் மூலம் வெள்ளாட்டை உருவாக்கி விஞ்ஞானிகள் சாதனை



காஷ்மீர் மாநிலம் சுகாமா என்ற இடத்தில் உள்ள ஷெர் காஷ்மீர் வேளாண்மை விஞ்ஞா னம் மற்றும் தொழில்நுட்ப பல் கலைக்கழகத்தின் பேராசிரியர் டாக்டர் ரியாஸ் அகமது ஷா தலைமையிலான குழுவினர் குளோனிங் மூலம் பஷ்மினா வகை வெள்ளாட்டு குட்டியை உருவாக்கி உள்ளனர். நூரி என்ற பெயருடனும் 1.3 கிலோ எடையு டனும் காணப்படுகிறது.

மேலும் குளோனிங் மூலம் இந்த வகை வெள்ளாடு உருவாக்கப் படுவது இதுவே முதல் தடவை.

## உலகில் அதிக அல்பினிஸ்தவர்களை கொண்ட குடும்பம் கின்னஸ் சாதனை



வெளிறிய நிறத்தை (அல்பினிஸம்) கொண்ட அங்கத்தவர்களை அதிகமாக கொண்டு நீண்ட குடும்பம் என்ற கின்னஸ் சாதனையை இந்தி யாவைச் சேர்ந்த புலான் ரோஸ் துறை என்ப வரது குடும்பம் நிலைநாட்டியுள்ளது.

இந்தியாவின் டில்லியில் வசித்து வரும் மேற்படி குடும்பத்தில் மொத்தமாக 10 உறுப் பினர்கள் வெளிறிய நிறத்தை உடையவர்க ளாக உள்ளனர். ரோஸ்துரை என்ற 50 வயது நபரின் தலைமைத்துவமாக கொண்ட அவரது குடும்பத்தில் இவரது மனைவி மணி(வயது-45), பிள் ளைகளான மகன் சங்கர்(24 வயது), விஜய்(வயது25), ராமகிருஷ்ணண் (வயது 19) மற்றும் பெண் பிள்ளைகளான ரேனு (வயது 23), தீபா (வயது 21 ) மற்றும் பூஜா(வயது18) ஆகியோரும் இவ்வாறு வெளிறிய நிறத்தை கொண்டவர்களாக காணப்படுகின்றனர்.

இக் குடும்பத்தைச் சேர்ந்த ரேனு என்ற பெண் திருமணம் செய்து கொண்ட ரோஷேஸ் என்ற 27 வயதுடைய நபரும் இவ்வாறு வெளிறிய நிறத்தையுடையவராக காணப்படு கின்றார்.

இவர்கள் இருவருக்கும் பிறந்த தர்மராஜ் என்ற 2 வயது குழந்தையும் வெளிறிய தோற்றத்தை கொண்டு காணப்படுகின்றது.

இவர்களை பார்க்கும் கிராமத்தவர்கள் இவர் கள் இந்தியர்களா என சந்தேகிக்கின்றனர்.

எங்களை மக்கள் எங்கிரஸ் என்று அழைப் பதை நான் கேட்டுள்ளேன். இதற்கு ஆங்கிலே யர்கள் என்றும் அர்த்தம். எங்களால் சிறப்பாக பார்க்க முடியாது. சூரிய வெப்பத்தில் நீண்ட நேரம் அமர்ந்திருக்க முடியாது. எனினும் முடிந்தவரை சிறப்பாக வாழ்ந்து வருகிறோமென ரோஸ்துரை புளான் தெரிவித்துள்ளார்.

உலகில் 17000 பேருக்கு இந்த அல்பினிஸ் பாதிப்பு காணப்படுவதுடன் இதற்கு மெலனின் உற்பத்தி போதுமானதாக இல்லாமையே காரண மென அறிவிக்கப்பட்டுள்ளது.

## சுத்தம் செய்யும் விநோத வாகனம்



பொதுவாக சாலைகள்,தெருக்கள் இவற்றினை சுத்தம் செய் வதில் பெரும்பாலான நாடுகளில் மனிதர்களே ஈடுபடு கின்றனர்.

இவ்வாறு மனிதர்கள் ஈடுபடும் செயலில் தற்போது வக்யூம் கிளீனரை கொண்ட ஐதரசன் சக்தியில் இயங்கும் வாகனம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இதில் 0.3 தொடக்கம் 0.6 கிலோகிராம் வரையான ஐதரசன் எரிபொருளை நிரப்புவதன் மூலம் ஒரு மணித்தியாலம் தொடர்ச் சியாக இயங்கவைக்க முடியும்.

## மனித எலும்புக்கூட்டை ஒத்த உயிரினம் சீனாவில்



சீனாவில் யுனான் மாகாணத் தில் உள்ள குவாங்கி ஷுயான் என்ற இடத்தில் உள்ள ஒரு குகை யில் கடந்த 1979-ஆம் ஆண்டு மனித எலும்பு கூடு கண்டெடுக் கப்பட்டது. அதேபோன்று கடந்த 1989 ஆம் ஆண்டு மெங்காஷி என்ற இடத்தில் மற்றொருகுகையில் 2 எலும்பு கூடுகள் கண்டெ டுக்கப்பட்டன.

இவற்றை விஞ்ஞானிகள் ஆய்வு செய்ததில் மனித இனத்தைச் சேர்ந்த எலும்புக்கூடுகள் இல்லை என்று உறுதி செய்தனர்.

மேலும் இந்த உயிரினம் 11,500 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்திருக்க வேண்டும் என்று கணக்கிடப்பட்டுள்ளனர். ஆனால் இந்த எலும்புக் கூடுகள் எந்த இனத்தை சேர்ந்தவை என தெரியவில்லை என விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

## பனிச்சறுக்கலில் அசத்தும் விநோத உயிரினம்



மனிதர்கள் தம்மைப்போலவே தாம் வளர்க்கும் செல்லப் பிராணிகளுக்கும் பல்வேறு விளையாட்டுக்களில் ஆர்வங்களை ஏற்படுத்தி மகிழ்கின்றனர்.

அதன் அடிப்படையில் Ratataouille எனப்படும் விநோத உயிரினத்திற்கு பனிச்சறுக்கல் விளையாட்டை பயிற்றுவித்து அதில் ஆர்வத்தை ஏற்படுத்தியுள்ளனர்.

அந்த எலி இனத்தைச் சேர்ந்த Ratataouille உயிரினமும் எந்தவிதமான பயமும் இன்றி கலக்கலாக பனியில் சறுக்கி மகிழ்கின்றார்.

இந்த விநோத விளையாட்டு ஜேர்மனியின் லீப்சிக் மிருகக் காட்சிச் சாலையில் இடம் பெற்றுள்ளது.

# இந்தியா? கொதித்தெழும் தமிழகம்!

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவையில் இலங்கையின் போர்க் குற்றங்களுக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்துள்ள தீர்மானத்தால் கதிகலங்கியிருக்கிறது சிங்கள அரசு. என்ன செய்தால் தீர்மானத்தை தோற்கடித்து இதிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியும் என எல்லா சதிகளிலும் இறங்கியுள்ளனர் ராஜபக்ஷ சகோதரர்கள். இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை மனித உரிமை பேரவையில் தாக்கல் செய்த கையோடு பேரவையில் அங்கம் வகிக்கும் 47 நாடுகளுக்கும் தீர்மானத்தின் நகல் கொடுக்கப் பட்டுள்ளது. அத்துடன் அந்த நாடுகளை அழைத்து ஒரு மாநாட்டை நடத்தி அந்த நாடுகளின் கருத்துக்களை கேட்டறிந்தது அமெரிக்கா. இந்த மாநாட்டில் ஐ.நா.சபை அதிகாரிகள், மனிதஉரிமை செயற்பாட்டாளர்கள், மனித உரிமை அமைப்புக்கள், அரசு சாராத நிறுவனங்கள், தமிழர் அமைப்புக்கள், நாடு கடந்த தமிழீழ அரசாங்க பிரதிநிதிகள் என பலரும் கலந்துகொண்டனர்.

கலந்து கொண்ட பிரதிநிதிகள் சிலரிடம் தொடர்புகொண்டு பேசிய போது தீர்மானத்தின் மீதான விவாதமும் வாக்கெடுப்பும் நடப்பதற்கு முன்பாக தீர்மானம் குறித்து ஒவ்வொரு நாடுகளின் மனநிலையை அறிந்து கொள்ளும் முயற்சியாக இந்த மாநாட்டை நடத்தியது அமெரிக்கா. இதில் 32 நாடுகள் கலந்துகொண்டன. மீதியுள்ள நாடுகள் இதில் கலந்து கொள்ள முடியவில்லை. கலந்து கொண்ட நாடுகளில் அவுஸ்திரேலியா, சுவிட்சர்லாந்து, ஆஸ்திரியா, கனடா, இங்கிலாந்து, பிரான்ஸ், நோர்வே, டென்மார்க், சுவீடன், ஹங்கேரி, போலந்து, இஸ்ரேல், அயர்லாந்து, போர்த்துக்கல் உள்ளிட்ட 22 நாடுகள் தீர்மானத்தை ஆதரித்தன.

இலங்கை,ரஷ்யா,சீனா,பாகிஸ்தான், தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், கியூபா, அல்ஜீரியா, எகிப்து உள்ளிட்ட 10 நாடுகள் தீர்மானத்தை எதிர்த்தன. ஆனால், இதில் எந்த நிலையையும் எடுக்காமல் அமைதி காத்தது இந்தியா.

தீர்மானம் நிறைவேற 24 நாடுகளின் ஆதரவு இருந்தால் போதும். அந்த வகையில் 22 நாடுகளின் ஆதரவு தீர்மானத்திற்கு கிடைத்துள்ள நிலையில் மேலும் இரு நாடுகளின் ஆதரவை பெறும் முயற்சியில் அமெரிக்காவும் தீர்மானத்தை ஆதரிக்கும் நாடுகளும் இறங்கியுள்ளன. தீர்மானத்தை பெரும்பான்மையான நாடுகள் ஆதரிக்க முன்வந்திருப்பதால் இலங்கையை தண்டித்துவிட முடியும் என்கிற நம்பிக்கை எங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது என்கின்றனர்.

இலங்கைக்கு ஆதரவான நிலைப்பாட்டிலே இருப்பதால்தான் எந்த ஒரு முடிவையும் பகிரங்கமாக வெளிப்படுத்தாமல் மௌனம் கடைப்பிடித்து வருகிறது இந்தியா என்கிற கருத்து உலகத் தமிழர்களிடம் எதிரொலிக்கும் நிலையில் தமிழகத்தின் பிரதான அரசியல் கட்சிகளிலிருந்து சிறிய கட்சிகள் வரை அமெரிக்கா கொண்டுவரும் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டுமென்று ஒரே குரலில் உரத்துப் பேசுகின்றன. தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டுமென பிரதமர் மன்மோகன் சிங்கை வலியுறுத்தி 3 கடிதங்களை எழுதியிருக்கிறார் தி.மு.க. தலைவர் கலைஞர். அவர் கடைசியாக எழுதிய கடிதத்தில் தீர்மானம் குறித்த முடிபை எடுப்பதற்கு முன் போர்க் குற்றங்கள் குறித்து சனல் 4 வெளியிட்டுள்ள காட்சிகளை இந்திய அரசு ஒருமுறை பார்க்க வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறார்.

அதேபோல தமிழக முதல்வர் ஜெயலலிதாவும் இலங்கையின் போர்க்குற்றங்கள் குறித்து சட்ட மன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை சுட்டிக் காட்டிவிட்டு மனித உரிமை பேரவையில் கொண்டு வரப்பட்டுள்ள தீர்மானத்தை இந்தியா ஆதரித்தே தீரவேண்டும் என தமிழக அரசின் நிலைப்பாட்டை வலிமையாக தெரிவித்திருக்கிறார்.

மேலும் தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த், ம.தி.மு.க. பொதுச்செயலாளர். வைகோ, பா.ம.க. தலைவர் மருத்துவர் ராமதாஸ், சி.பி.எம்.மாநில செயலாளர் ஜி.ராமகிருஷ்ணன், சி.பி.ஐ. மாநில செயலாளர் தா.பாண்டின், விடுதலை சிறுத்தைகள் தலைவர் திருமாவளவன், தமிழக பா.ஜ.க. தலைவர் பொன்.ராதாகிருஷ்ணன், நாம் தமிழர் இயக்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், தமிழக வாழ்வுரிமை கட்சியின் நிறுவன தலைவர் வேல்முருகன் என தமிழகத்தின் ஒட்டுமொத்த அரசியல் கட்சிகளின் தலைவர்களும் தீர்மானத்துக்கு ஆதரவாக இந்திய அரசு செயற்பட வேண்டும் என்பதை அழுத்தமாக பதிவு செய்துகொண்டு வருகிறார்கள்.

எல்லாவற்றிற்கும் மேலாக தமிழக காங்கிரஸ் குழுவும் தீர்மானத்தை ஆதரிக்கத் தொடங்கியிருக்கிறது. ஆனாலும் இந்தியா தொடர்ந்து ஊமையாகவே இருந்து வருகிறது. இதுபற்றி ம.தி.மு.க. கொள்கைப்பரப்பு செயலாளர் நாஞ்சில் சம்பத்திடம் பேசியபோது, எந்த ஒரு தேசிய இனத்தினுடைய சுயநிர்ணய உரிமையையும் ஒத்துக்கொள்ளாத அமெரிக்கா இன்று இலங்கையின் போர்க்குற்றங்களுக்கு எதிராக ஒரு தீர்மானத்தை கொண்டு வந்திருப்பது வரலாற்றில் ஒரு மைல் கல். இதை இந்தியா ஆதரிக்கத் தவறுமானால் இந்தியாவையும் சேர்த்து போர்க்குற்றவாளிக் கூண்டில் ஏற்றவேண்டிவரும். நான்காவது தமிழீழப் போரில் ஈழத்தழிழர்களையும் தம்பிகளையும் படுகொலை செய்வதற்கு ஆயுத உதவிகளையும் பண உதவிகளையும் செய்த இந்தியா, அதற்கு பிராயச்சித்தமாக இந்த தீர்மானத்தை ஆதரிக்க வேண்டும். ஆதரிக்க தவறினால் இனி வரும் காலத்தில் தமிழர்கள் இந்தியர்களாக இருக்கமாட்டார்கள் என்கிறார்.



சுட்டுக்கொள்வதற்கு முன்பு புதைகுழிக்குள் சிறை

இதேகருத்தை வலியுறுத்தும் சீமான், இலங்கை அரசு செய்திருப்பது போர்க்குற்றங்களையும் தாண்டி அப்பட்டமான ஒரு இனப்படுகொலை. இது பற்றி அழுத்தமாக, முழுமையாக தீர்மானத்தில் சொல்லப்படவில்லை என்றாலும் இலங்கைக்கு எதிராக ஒரு சிறிய அளவிலாவது தீர்மானத்தை அமெரிக்கா கொண்டு வந்திருக்கிறதே என்பது ஆறுதலானது. இந்த சிறியளவிலான தீர்மானத்தைக் கூட இந்தியா ஆதாரிக்க முன்வராது போனால் ஒட்டுமொத்த தமிழர்களும் இந்திய அரசை கண்டித்து போராட வேண்டி வரும்.

சோனியாகாந்தி, பிரியங்காகாந்தி, ராகுல்காந்தி மூவரின் விருப்பத்தையும் ராஜபக்ஷ நிறைவேற்றியதால்தான் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்படும் தீர்மானத்தை ஆதரிக்காமல் மௌனம் காக்கிறது இந்திய அரசு.

போர் என்றால் பொதுமக்கள் சாவது இயல்புதான் என்ற ஜெயலலிதாவும் மழை விட்டும் தூவாணம் விடவில்லை என்ற கலைஞரும் மன்மோகனுக்கு எழுதுகிற கடிதமெல்லாம் எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தாது என்கிறார்.

சிறுத்தைகளின் தலைவர் திருமாவளவனிடம் பேசிய போது, ஒட்டுமொத்த தமிழகமும் குரல் கொடுத்தும் இந்திய அரசு தனது முடிவை தெரிவிக்காமல் பிடிவாதமாக மௌனம் கடைப்பிடிப்பது தமிழர்களின் உணர்வுகளை மதிக்கவில்லை என்றுதான் தோன்றுகிறது. தீர்மானத்தை ஆதரிக்க வேண்டும் என காங்கிரஸ் கூட்டணியில் உள்ள கலைஞர் பலமுறை இந்திய அரசை வலியுறுத்தியுள்ள நிலையிலும் அதற்கு காங்கிரஸ் தலைமை செவிசாய்த்ததாகவே தெரியவில்லை. இதற்கு மாறாக இரு நாடுகளின் உறவுகள் பாதிக்காத வகையில் முடிபுகள் எடுக்கப்படும் என்கிறார் இந்திய அரசின் வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். எம்.கிருஷ்ணா. ஆக திட்டமிட்டே இனப் படுகொலையை ஈழத்தில் நடத்திய சிங்கள அரசோடு உறவு பாதிக்காமல் இருக்க வேண்டும் என இந்திய அரசு நினைப்பது தமிழ் இனத்திற்கு செய்யும் பெரிய துரோகம்.

இந்த சூழலில் தி.மு.க. தலைவர் கலைஞர் எடுக்கப்போகிற முடிபு தி.மு.க. மீதான பழியைத் துடைக்க உதவும் என்பதே தமிழகத்தின் எதிர்பார்ப்பு. கலைஞரின் வலியுறுத்தலையும் மீறி சிங்களவர்களுக்கு ஆதரவாக இந்திய அரசு முடிபு எடுத்தால் அது கலைஞரையும் தமிழர்களின் உணர்வுகளையும் அவமதிப்பதாகும்.

அத்தகைய சூழலில் தொடர்ந்து காங்கிரசுடன் உறவை தி.மு.க. நீடிக்க போகிறதா? இல்லை வெளியேறப் போகிறதா? என்ற கேள்வி எழுந்துள்ளது. அதனால் காங்கிரசுக்கு பாடம் புகட்டுவதாக இருக்க வேண்டும் கலைஞரின் முடிவு என்கிறார்.

தமிழக வாழ்வுரிமை கட்சியின் தலைவர் வேல்முருகன், ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் இரத்தவெறியாட்டம் போட்டது சிங்கள இராணுவம். போர் நெறிகளுக்கு எதிரான அத்தனை வழிமுறைகளையும் சிங்கள இராணுவம் பயன்படுத்தி தமிழ் இனத்தை அழித்தொழித்தது. ராஜபக்ஷ போட்ட இரத்தவெறியாட்டத்தை உலகமே வேடிக்கை பார்த்ததே ஒழிய தடுக்க முயற்சிக்கவில்லை. இதனால் இலட்சக் கணக்கான தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டார்கள். அந்த உடல்களோடு போரில் படுகாயமடைந்து உயிருக்கு போராடிக்கொண்டிருந்த மக்களையும் போராளிகளையும் புதைகுழியில் தள்ளி மண்ணோடு மண்ணாக புதைத்தனர்.

வெள்ளைக்கொடியேந்தி சரணடைய வந்தவர்களையும் சுட்டுக்கொன்றது இராணுவம். சிறுவர்களையும் வயது முதிர்ந்தவர்களையும் படுகொலை செய்யக்கூடாது என்பது போர்நெறி. ஆனால், ஈழத்திலுள்ள இளைஞர்களையும் சிறுவர்களையும் விரட்டி விரட்டி பிடித்து சித்திரவதை செய்து படுகொலை செய்தனர். பெண்களையும் பெண் புலிகளையும் பாலியல் வன்கொடுமைகளுக்கு உள்ளாக்கி உயிர் பறித்தனர். தலைவர் பிரபாகரனின் புதல்வர் சிறுவன் பாலச்சந்திரனையும் சுட்டுக்கொன்றிருக்கிறார்கள். இப்படி திட்டமிட்டே தமிழினத்தின் மீதான இனப்படுகொலையை நடத்தி முடித்து அதன் சுவடுகள் எதுவும் வெளியே வரக்கூடாது என்கிற அளவில் ஆதாரங்களை அழித்து முடித்தது ராஜபக்ஷ அரசு. ஆனால், ஈழ மண்ணில் நடந்த இனப்படுகொலைகளை அம்பலமாக்கும் வகையில் எண்ணற்ற ஆதாரங்கள் வெளியாகி மனச்சாட்சியுள்ள மனிதர்களை உலுக்கி எடுத்துக் கொண்டிருக்கிறது.

இந்த நிலையில்தான் அமெரிக்க அரசின் தீர்மானம் அதனை இந்திய அரசு ஆதரிக்க வேண்டும். இல்லையேல் இந்திய அரசுக்கு எதிரான தமிழக இளைஞர்களின் போராட்டம் வெடிக்கும் தீர்மானத்தை ஆதரிக்கச் சொல்கிறார் கலைஞர். இந்தியா ஆதரிக்க மறுத்தால் காங்கிரஸ் அரசுக்கு கொடுத்து வரும் ஆதவை அவர் விலக்கிக்கொள்ள வேண்டும் என்கிறார் வேல்முருகன்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைப்பொதுச் செயலாளர் சி.மகேந்திரன், ஈழத்தில் போர் உக்கிரமாக நடந்தது. இனப்படுகொலைகள் அரங்கேறிக்கொண்டிருந்த நிலையில் அனைத்துக்கட்சிக் கூட்டத்தைக் கூட்டி யுத்தத்தை நிறுத்த இந்தியா முயற்சிக்க வேண்டும். இல்லையேல் 40 எம்.பிக்களும் இராஜினாமா செய்வோம் என்றார் கலைஞர்.

தற்போது இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும் என்கிறார் காங்கிரஸ் கூட்டணியில் இருந்துகொண்டே. ஆனால், இந்திய அரசோ இதனை மதித்ததாகத் தெரியவில்லை. கலைஞரின் வலியுறுத்தலுக்கு எதிராக இந்திய அரசின் நிலைப்பாடு இருக்குமானால் காங்கிரசின் கூட்டணி உறவை உதறித் தள்ளிவிட்டு மத்திய அரசிலிருந்து தி.மு.க. வெளியேற வேண்டும் என்கிறார்.

இதே கருத்தை வலியுறுத்தும் தமிழக பா.ஜ.க. தலைவர் பொன்.ராதாகிருஷ்ணன், மூன்று முறை கடிதம் எழுதியும் கலைஞரின் சொல்லுக்கு மத்திய அரசிடம் மரியாதை இருப்பதாகத் தெரியவில்லை. அதனால் ஓரிரு நாளில் இந்தியா தனது நிலைப்பாட்டைத் தெரிவிக்க வேண்டும் என காங்கிரசை எச்சரிக்கை செய்ய வேண்டும் கலைஞர். கலைஞரின் எச்சரிக்கை உதாசீனப்படுத்தப்படுமேயானால் மத்திய அரசுக்கு ஆதரவு கொடுப்பதிலிருந்தும் அமைச்சரவையிலிருந்தும் கூட்டணி உறவிலிருந்தும் இப்போதாவது வெளியேற வேண்டும் என்கிறார்.

இந்நிலையில் இந்தியாவிடம் ஆதரவு கேட்கும் ராஜபக்ஷவிடம் இலங்கையின் மன்னார் எண்ணெய் வளம் தொடர்பாக பேரம் நடத்திக் கொண்டிருக்கிறதாம் இந்தியத்தரப்பு.

ஆர்.இளையசெல்வன்

நக்கீரன்

# மனித உரிமை அமைப்புகளின் தீவிர அழுத்தங்களால் தடுமாறும் இலங்கை

"இலங்கையின் முக்கிய மூத்த அதிகாரிகளுக்கு எதிராக பல வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இவ்வழக்குகள் குறிப்பிட்ட மூத்த அதிகாரிகளின் எஞ்சிய வாழ்வு முழுமைக்கும் பெரும் தலையிடியாக இருக்கும் என நான் எதிர்பார்க்கிறேன்" என அனைத்துலக மன்னிப்புச் சபையின் ஆசிய-பசுபிக் பிராந்திய இயக்குனர் சரீபி தெரிவித்துள்ளதாக *தி அட்லாண்டிக் ஜேர்னல்- கொன்ஸ்ரிரியூசன்* ஊடகம் தெரிவிப்பு. அதில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது.

விடுதலைப்புலிகளுடன் இலங்கை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட யுத்தத்தின்போது மேற்கொள்ளப்பட்ட மீறல்கள் தொடர்பில் அனைத்துலக சமூகமானது தனது அழுத்தத்தை மேலும் அதிகரிக்கவேண்டும்


சரீபி

என மனித உரிமை அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

அத்துடன் இவ்வாறான மீறல்களில் ஈடுபட்ட இலங்கை பாதுகாப்புப் படையினர் மீது நடவடிக்கை எடுக்காதிருப்பதால், அவர்கள் யுத்தம் முடிவுற்று மூன்று ஆண்டுகளான நிலையில்கூட தீவிரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகள் என்ற பெயரில் தொடர்ந்தும் பல சித்திரவதைகளில் ஈடுபட்டு வருவதாக மனித உரிமை அமைப்புகள் சுட்டிக் காட்டியுள்ளன.

2009 ஆம் ஆண்டிலிருந்து அதாவது இலங்கையில் யுத்தம் நிறைவுக்கு வந்ததிலிருந்து அங்கே தொடர்ச்சியாக நாட்டின் பாதுகாப்புப் படையினர் கடத்தல், மற்றும் சித்திரவதைகளில் ஈடுபடுவதாகவும், வெளியுலகுத் தொடர்புகள் இன்றி பல நூற்றுக்கணக்கானோர் சட்டரீதியற்ற வகையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் கடந்த செவ்வாயன்று ஜெனீவாவில் வெளியிடப்பட்ட அறிக்கையில் அனைத்துலக மன்னிப்புச் சபையானது தெரிவித்துள்ளது.

இவ்வாறு விடுதலைப்புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் சட்டவாளர்கள், ஊடகவியலாளர்கள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் போன்றோரும் உள்ளடங்குகின்றனர் என அனைத்துலக மன்னிப்புச் சபையின் ஆசிய- பசுபிக் பிராந்திய இயக்குனர் சாம்சரீபி தெரிவித்துள்ளார்.

"இலங்கை அரசாங்கமானது, தான் மேற்கொண்ட மிகமோசமான மனித உரிமை மீறல்கள், யுத்தமீறல்கள் மற்றும் மனிதாபிமானத்துக்கு எதிரான மீறல்கள் போன்றவற்றுக்கு உண்மையான முறையில் பொறுப்புக் கூறாது அனைத்துலக மட்டத்தில் தப்பித்துக்கொள்ள முடியும்" எனவும் சரீபி தெரிவித்துள்ளார்.

"இவ்வாறான மீறல்களுக்கு உரிய தண்டனை வழங்கப்படாதவிடத்து, இலங்கைப் பாதுகாப்புப் படையினர் தாம் தொடர்ந்தும் இவ்வாறான மீறல் சம்பவங்களை மேற்கொள்ள முடியும் எனக் கருதிக் கொள்வதுடன், இலங்கை முழுமையிலும் உள்ள பாதுகாப்புப் படையினர் இலகுவில் இவ்வாறான குற்றவியல் சம்பவங்களில் ஈடுபடுவதுடன் எந்தவொரு தண்டனைகளிலிருந்தும் தப்பித்துக்கொள்ள முடியும் என்பதையே இந்தச் செய்தி தெளிவாகக் காட்டி நிற்கின்றது" எனவும் சரீபி மேலும் தெரிவித்துள்ளார்.


இலங்கை அரசபடைகள் விடுதலைப்புலிகளை அப்புறப்படுத்தியதன்மூலம் நாட்டில் 26 ஆண்டுகளாகத் தொடரப்பட்ட உள்நாட்டு யுத்தமானது நிறைவுக்குவந்தது.

இந்த யுத்தத்தில் குறிப்பாக, யுத்தத்தின் இறுதி மாதங்களில் இதில் பங்குபற்றிய இலங்கை பாதுகாப்புப் படை மற்றும் விடுதலைப்புலிகள் ஆகிய இருதரப்பினரும் மிக மோசமான யுத்த மீறல்களை மேற்கொண்டுள்ளனர் என்பதை ஐ.நா. வல்லுநர் குழுவால், தயாரிக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையானது நாட்டில் இடம்பெற்ற மீறல்கள் தொடர்பில் பொறுப்புக் கூறவேண்டும் என்பதை கோரும் முகமாக தற்போது இடம்பெற்றுக் கொண்டிருக்கும் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்காவின் ஆதரவுடன் முன்மொழிவு ஒன்று முன்வைக்கவுள்ள நிலையிலேயே அனைத்துலக மன்னிப்புச் சபையானது தனது அறிக்கையை வெளியிட்டுள்ளது.

அத்துடன் பிரித்தானிய தொலைக்காட்சி சேவையான சனல் 04 இலங்கையில் இடம்பெற்ற 'கொலைக்களங்கள் தொடர்பான புதிய சாட்சியங்களை உள்ளடக்கிய ஆவணப்படம் ஒன்றை வெளியிடுவதற்கு முதல் அனைத்துலக மன்னிப்புச் சபையானது தனது அறிக்கையை வெளியிட்டுள்ளது.

சனல் 04 தொலைக்காட்சி சேவையால் முன்னர் வெளியிடப்பட்ட ஆவணப்படத்தில், இலங்கையின் இறுதி யுத்த களத்தில் மேற்கொள்ளப்பட்ட மிகமோசமான படுகொலைச் சம்பவங்கள் மற்றும் இலங்கை அரசாங்கப்படைகளால் மேற்கொள்ளப்பட்ட மிகமோசமான சித்திரவதைச் சம்பவங்களைக் காண்பிக்கும் காட்சிகள் உள்ளடக்கப்பட்டிருந்தன.


பெண்கள், சிறுவர்களுக்கெதிரான உரிமைமீறல்களில் ஒன்று

தற்போது வெளியிடப்படும் புதிய ஆவணப்படத்தில் நான்கு முக்கிய விடயங்கள் மையப்படுத்தப்பட்டுள்ளன. அதில் பொதுமக்களுக்காக ஐ.நா.வினால்அமைக்கப்பட்ட உணவு வழங்கல் நிலையம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல், யுத்தத்தின் பிடிக்குள் அகப்பட்டு அதிலிருந்து தப்பியோடிய பொதுமக்களுக்கு சேர வேண்டிய மனிதாபிமான உதவி அமைப்புக்களின் செயற்பாடுகளை தடுத்து நிறுத்தியமை, யுத்தவலயமற்ற பகுதிகள்மீது எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டமை, விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் 12 வயதேயான மகனைப்படுகொலை செய்தமை போன்ற காட்சிகள் இப்புதிய ஆவணப் படத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அனைத்துலக மன்னிப்புச் சபையால், வெளியிடப்பட்ட அறிக்கையை இலங்கை அரசாங்கப் பேச்சாளர் ஒருவர் நிராகரித்துள்ளதுடன், விடுதலைப்புலிகளிலின் ஆதரவாளர்களின் செல்வாக்கைக்கொண்டே சனல் 04 தொலைக்காட்சி சேவையானது ஆவணங்களைத் தயாரித்து வழங்குவதாகவும், ஐ.நா.வால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவானது இலங்கையின் உள்விவகாரங்களில் இடையூறை மேற்கொள்வதாகவும் அப்பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

"இலங்கை தொடர்பில் உண்மையான நலனைக் காண்பிக்க விரும்பும் ஒருவர், உண்மையான கள நிலவரத்தைப் புரிந்துகொண்டு, மீளிணக்கப்பாட்டு முயற்சிக்கு போதியளவு கால அவகாசத்தை வழங்கவேண்டும் என்பதை புரிந்துகொள்வது மிகப் பிரதானமாகும்" என இலங்கை அரசாங்கத்தின் பேச்சாளாரான பந்துல ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

"எமது தலைவர்களைவிட இலங்கை எதிர்நோக்கும் இடர்பாடுகளை வேறு எவரும் விளங்கிக் கொள்ளமாட்டார்கள்" எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஆனால், இலங்கையில் தேசிய அளவில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் இதுவரையில் அனைத்துலக விதிமுறைகளுக்கு ஏற்ப மேற்கொள்ளப்படவில்லையென மனிதஉரிமை ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.


சிறுவர்களுக்கெதிரான போர்க்குற்றங்களில் ஒன்று

இலங்கையில் யுத்தம் முடிவடைந்த கையோடு இதில் பங்கு கொண்ட இரு தரப்புக்களாலும் மேற்கொள்ளப்பட்ட மீறல்கள் தொடர்பாக ஆராய்வதற்காக, 2009ல் அவசர அவசரமாகக கூட்டப்பட்ட ஐ.நா.மனித பேரவையின் கூட்டத் தொடரின்போது, ஜெனீவாவைத் தளமாகக் கொண்டியங்கும் மனித உரிமைகள் பேரவையானது இலங்கையை விமர்சிக்கத் தவறியதால், தற்போது முன்வைக்கப்படவுள்ள முன்மொழிவானது இலங்கைக்கு எதிரான நடவடிக்கை எடுப்பதற்கான சிறந்த வாய்ப்பை வழங்கியுள்ளதாகவும் அனைத்துலக மன்னிப்புச் சபை மேலும் தெரிவித்துள்ளது.

"இலங்கை அரசாங்கமானது இறுதி யுத்தகாலத்தில் இடம்பெற்ற மீறல்கள் தொடர்பான சாட்சியங்களை கடந்தசில ஆண்டுகளாகத் தட்டிக்கழித்து வருவதுடன், அவை போலியானவை எனவும் கூறிவருகிறது." என மனித உரிமைகள் கண் காணிப்பகத்தின் பேச்சாளர் *யுலேற்றோ டீ றிவேரோ* தெரிவித்துள்ளார்.

இலங்கையானது தனது நாட் டில் மேற்கொள்ளப்பட்ட மீறல்கள் தொடர்பில் விசாரணை செய்து, குற்றமிழைத்தவர்களுக்கு தகுந்த தண்டனை வழங்காவிடில், அனைத்துலகத்துக்கும் பொதுவாக அதிகாரத்தைப் பயன்படுத்தி இலங்கைமீது ஏனைய உலக நாடுகள் நடவடிக்கை எடுக்க முடியும் என அனைத்துலக மன்னிப்புச் சபையின் ஆசிய-பசுபிக் பிராந்திய இயக்குனர் *சரீபி* தெரிவித்துள்ளார்.

"இலங்கையின் முக்கிய, மூத்த அதிகாரிகளுக்கு எதிராக பல வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இவ்வழக்குகள் குறிப்பிட்ட மூத்த அதிகாரிகளின் எஞ்சிய வாழ்வு முழுமைக்கும் பெரும் தலையிடியாக இருக்கும் என நான் எதிர்பார்க்கிறேன்" எனவும் சரீபி தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு சக்திகளால் வழக்குத் தாக்கல் மேற்கொள்ளப்பட்டபோது இலங்கையானது தனது அதிகாரிகள் சிலரை மீளவும் நாட்டுக்கு அழைத்த சம்பவங்களும் உண்டு. அதாவது, இலங்கை இராணுவத்தின் முன்னாள் மேஜர் ஜெனரலான ஜகத் டஜஸ் என்பவர் ஜேர்மன் சுவிற்சர்லாந்து, வத்திக்கான் ஆகிய நாடுகளுக்கான தூதராகக் கடமையாற்றியபோது அவருக்கு எதிராக சுவிற்சர்லாந்து பிரதம வழக்கறிஞரிடம் அந்நாட்டைச் சேர்ந்த இரு சட்ட அமைப்புக்கள் முறைப்பாடு ஒன்றை மேற்கொண்டிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

நன்றி : இணையம்

# நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை நடைமுறைப்படுத்த எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து வலியுறுத்தல் போராட்டம்

## எதிர்க்கட்சித் தலைவர் ரணில் யாழில் தெரிவிப்பு




(யாழ்ப்பாணம்)

வெள்ளை வானில் ஆட்களை கடத்தும் கலாசாரத்தை இந்த நாட்டிலிருந்து முற்றாக ஒழிக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவருமான ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க, கட்சியின் செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்க, தேசிய அமைப்பாளர் தயா கமகே, நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜயலத் ஜயவர்த்தன, டி.எம். சுவாமிநாதன் ஆகியோருடன் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் ஆகியோர் யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் நடந்த நிகழ்வுகளில் பங்கு கொண்டனர்.

இந்தக் குழுவினர் சாவகச்சேரி நகர்ப்பகுதிக்கு சென்றபோது அங்கு யானை, மலர்மாலை அணிவித்து வரவேற்றது. இங்கு மக்கள் மத்தியில் உரையாற்றிய ரணில் விக்ரமசிங்க வடக்கு, கிழக்கு மக்களுக்கு அரசியல் ரீதியான தீர்வு பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும்.

யுத்தம் அதிகளவில் இடம்பெற்ற பிரதேசங்களை கொண்டது இப் பகுதியே. யுத்தத்தால் இந்தப் பகுதி மக்கள் பட்டதுன்பம் மறக்கக் கூடியதல்ல. இதுதவிர வெள்ளை வான் கலாசாரத்தால் இந்தப் பகுதி மக்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தப் பிரச்சினை தென்பகுதியிலும் உண்டு.

யாரைக் கடத்துவது எனத்தெரியாது தங்களைச் சாா்ந்தவர்களையே கடத்துகின்றனர். இந்த வெள்ளை வானில் ஆட்களைக் கடத்தும் கலாசாரத்தை இந்த நாட்டிலிருந்து முற்றாக ஒழிக்க வேண்டும். அப்போது தான் இந்த நாட்டில் சுதந்திரம் உள்ளது என்பதை மக்கள் ஏற்றுக் கொள்வார்கள்.

போரினால் சாவகச்சேரி நகர் முற்றாக பாதிக்கப்பட்டது. இன்னும் மக்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை. மக்களுக்கு நல்ல தீர்வு பெற்றுக் கொடுக்க அரசாங்கம் முன்வர வேண்டும். மேலும் வாழ்க்கைச் செலவு அதிகரித்துவிட்டதனால் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

எனவே, சிங்களம், தமிழ், முஸ்லிம் ஆகிய அனைத்து மக்களும் ஒற்றுமையாக வாழ வேண்டும். இவர்கள் அனைவரும் இலங்கை மக்கள் என்ற ரீதியில் ஒன்றுபட்டு வாழ வேண்டும். கடந்த காலங்களில் இந்தப் பகுதி மக்களை அதிக தடவை வந்து நான் சந்திக்கவில்லை. ஆனால், எதிர்வரும் காலத்தில் அடிக்கடி வந்து உங்களைச் சந்தித்து உங்கள் தேவைகளைக் கேட்டறிந்து பாராளுமன்றத்தில் குரலெழுப்புவேன் என்றார்.

பின்பு கச்சாய் கலைமகள் முன்பள்ளியில் மக்களைச் சந்தித்த போது ஜனாதிபதி ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் தமிழ் மக்களுக்குரிய தீர்வை ஒருபோதும் முன்வைக்காது. நாம் போராடித்தான் தீர்வைக் காண வேண்டும் என்றார்.

இதேவேளை, இப்பகுதிமக்கள்கூறுகையில், தமக்குத் தொழில் இல்லை. வருமானம் மிகவும் குறைவு, மண்ணெண்ணெய் விலை ஏற்றத்தால் கடற்றொழில் செய்பவர்கள் தொழிலுக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது போன்ற குறைபாடுகளையும் அவ்வேளையில் எடுத்துரைத்தனர்.

இதேவேளை, தனது கணவன் கடந்த 2007 ஆம் ஆண்டு காணாமல் போனார். இதுவரையிலும் அவரைப்பற்றி எந்தத் தகவலும் கிட்டவில்லை. அவரை மீட்டுத் தாருங்கள் என குடும்பப் பெண்ணொருவர் முறையிட்டார்.

இதற்கு பாராளுமன்றத்தில் பேசி உங்களது பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என்றார் ரணில். பின்பு பொலிகண்டி கந்தசாமி கோவிலுக்கு சென்று விசேட பூஜையில் கலந்து கொண்டதோடு ஆலய புனரமைப்புக்காக ஒரு இலட்சம் ரூபா காசோலையும் வழங்கி வைத்துள்ளார்.

நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, சுன்னாகம், மாதகல் போன்ற பகுதிகளுக்கும் விஜயம் மேற்கொண்ட இந்தக் குழுவினர் வீதிகளில் நின்ற மக்களுடன் கலந்துரையாடினர்.

பருத்தித்துறை நகரில் மக்களைச் சந்தித்து உரையாடியபோது இந்தியா, பங்களாதேஷ் கிரிக்கெட் போட்டி பார்த்தீர்களா? சச்சின் டெண்டுல்கர் சதம் அடித்தார் எனக் கூறினார். அத்தோடு இலங்கை அணியில் யாழ்.மாவட்டத்தைச் சேர் ந்த வீரர்களையும் எதிர்காலத்தில் இணைப்பதற்கான நடவடிக் கையை தாம் மேற்கொள்வதாக உறுதியளித்தார்.

இதேவேளை, நெல்லியடியில் மக்களைச் சந்தித்தபோது இந்திய இழுவைப்படகினால் தமது,தொழில் பாதிக்கப்படுவதாகவும் அதற்கு உடனடியாக தீர்வு பெற்றுத்தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்தனர். இங்கு உரையாற்றும் போது சிங்களம், தமிழ், முஸ்லிம் மக்கள் எல்லோரும் ஒன்றிணைந்து அரசாங்கத்திற்கு எதிராக போராட்டத்தை நடத்த வேண்டும் எனவும் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் உள்ள பரிந்துரைகளை உடனடியாக நடைமுறைப்படுத்தி தீர்வினைப் பெற்றுத்தர வேண்டும் எனவும் ரணில் தெரிவித்தார்.

அத்தோடு வெள்ளைவான் எங்கு வாங்கலாம் எனவும் கேட்டு சிரித்தார் ரணில். இதனையடுத்து நீர்வேலி மாதர் சங்கம் ஏற்பாடு செய்த கூட்டத்தில் பங்கு கொண்டு உரையாற்றிய ரணில், இலங்கையில் அதிகமாக கஷ்டப்பட்டவர்களைக் கொண்ட பிரதேசம் வட பகுதியே.


அதிலும் இங்குள்ள மகளிர் குறிப்பாக கணவனை இழந்த குடும்பத் தலைவிகள் மிகவும் வறுமைக் கோட்டின் கீழ் உள்ளனர். இதனை இன்றைய விஜயத்தின் போது கண்கூடாகப் பார்க்கின்றேன். இங்குள்ள பெண்களின் நிலை பற்றி அக்கறை செலுத்தாத அரசாங்கத்தை நினைத்து நான் மிகவும் கவலையடைகின்றேன்.

அநீதி தலை விரித்து ஆடுகின்றது வடபகுதியில். வீடுகள் உடைந்து பாதுகாப்பு அற்ற நிலையில் மக்கள் உள்ளனர். பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை. சிறுமிகள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகின்றனர். அண்மையில் கூட 13 வயதுச் சிறுமி கொடூரமாகக் கற்பழிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

இவற்றை அரசாங்கம் பெரிதாக எடுப்பதில்லை. யாருடைய தலையீட்டால் குற்றவாளிகள் தண்டிக்கப்படாமல் விடப்படுகின்றார்களோ தெரியவில்லை. யாழ்ப்பாணத்தில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை என வலியுறுத்தி மக்கள் எழுச்சிப்போராட்டத்தை நாங்கள் நடத்த வேண்டும்.

இதுதவிர எல்லா எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைந்து கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை நடைமுறைபடுத்தவும் அரசியல் தீர்வினை பெற்றுக் கொடுக்கவும் எதிர்ப்புப் போராட்டத்தை நடத்தவுள்ளோம் என்றார் ரணில்.

இவ்வாறு நேற்று முன்தினம் ரணில் விக்ரமசிங்க தலைமையிலான குழுவினர் மே தினத்தை யாழ். மாவட்டத்தில் நடத்துவதற்கான ஆதரவினைப் பெறும் பொருட்டு சூறாவளி பயணம் மேற்கொண்டு மக்க ளைச் சந்தித்து கலந்துரையாடினர். (2-6)









## ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி பொருளாதாரத்தை பாதிக்கும்

### மத்திய வங்கி அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் எதிர்பார்த்தளவு பொருளாதார வளர்ச்சியை ஈட்ட முடியாது என்றும் ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியானது நாட்டின் பொருளாதாரத்தை பெருமளவில் பாதிக்கும் எனவும் இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இந்த ஆண்டில் சுமார் 8 வீத பொருளாதார வர்ச்சியை ஈட்ட முடியும் என எதிர்வு கூறப்பட்டது. எனினும் தற்போது 7.2 வீதமானளவு பொருளாதார வளர்ச்சியை மட்டுமே ஈட்டக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

எரிபொருள் விலையேற்றம், கடன்சுமை அதிகரிப்பு ,ஏற்றுமதி வர்த்தக வீழ்ச்சி போன்றவற்றினால் பொருளாதார வளர்ச்சி குறைவடையக்கூடும் என மத்திய வங்கி அறிவித்துள்ளது. இதேவேளை, ரூபாவின் பெறுமதி தொடர்ச்சியாக குறைவடைந்து செல்வதாக தெரிவிக்கப்படுகிறது. ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியானது நாட்டின் பொருளாதாரத்தை பெருமளவில் பாதிக்கும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (2-7)

## சிறுமி மீது பாலியல் வல்லுறவு; சந்தேகத்தின் பேரில் பௌத்த பிக்கு கைது

(கொழும்பு)

சிறுமி ஒருவரை பாலியல் வல்லுறவு புரிந்ததாக கூறப்படும் பௌத்த பிக்கு ஒருவரை குருணாகல் பொலிஸார் நேற்று முன்தினம் காலை கைது செய்துள்ளனர்.


குருணாகல் ரிதிகம என்ற கிராமத்தை சேர்ந்த பெற்றோரின் முறைப்பாட்டையடுத்தே பொலிஸார் குறிப்பிட்ட விகாரை ஒன்றின் பௌத்த பிக்கு ஒருவரை கைது செய்துள்ளனர்.

42 வயதுடைய இப்பௌத்த பிக்கு தமது சிறு வயது மகளை ஏமாற்றி பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளதாக பெற்றோர் முறைப்பாட்டில் தெரிவித்திருந்தனர். பொலிஸார் அச்சிறுமியை வைத்திய பரிசோதனைக்காக வைத்தியசாலையில் அனுமதித்த பின்னர் குறிப்பிட்ட பௌத்த பிக்குவை கைது செய்துள்ளனர்.

பொலிஸ் வசாரணையின் போதுபௌத்த பிக்கு ஏற்கனவே இரு சிறுமிகளை இவ்வாறு பாலியல் துஷ்பிரயோகம் புரிந்துள்ளமை தெரிய வந்துள்ளது. (2-7)

# பங்குனி மாத இராசி பலன்கள்

# 14.03.2012-12.04.2012




சித்திரை 3, 4பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 பாதங்கள்

**தன்னம்பிக்கையை தளரவிட வேண்டாம்!**

விசால மனம் படைத்தவர்களாகவும் வியக்கும் குணம் படைத்தவர்களாகவும் விளங்கும் துலாம் இராசி நேயர்களே!

புதிய புதிய மாறுதல்களை அடிக்கடி செய்துகொண்டிருப்பவர்கள் நீங்கள். நீதிக்கு மதிப்புக் கொடுப்பீர்கள். நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தப் பாடுபடுபவர்களுக்கு மத்தியில் அதிர்ஷ்ட வாய்ப்புக்களை அள்ளிக் குவிப்பவர்கள் நீங்கள். குறுகிய காலத்தில் முன்னேற்றம் காண்பவர்களின் பட்டியலில் இடம்பிடிப்பீர்கள். விலங்குகளிடம் அதிகம் பிரியம்காட்டுபவர்கள் நீங்கள்தான்.

உங்களுக்கு இந்த பங்குனி மாதக் கிரகநிலைகளை ஆராய்ந்துபார்க்கும் பொழுது, ஜென்மச்சனியின் ஆதிக்கம் மாறி விரயச் சனியாக வக்ரகதியில் இயங்குகிறது. எனவே, இனம்புரியாத கவலை மேலோங்கும். பணக்கவலை இல்லாவிட்டாலும்கூட, பல விதங்களிலும் தொல்லைகள் முற்றுகையிடும். தன்னம்பிக்கையை மட்டும் தளரவிட்டால் என்ன ஆகும் என்பதை யோசித்துப்பாருங்கள். வாழ்க்கை வாழ்வதற்கே என்ற சித்தாந்தத்தைக் கடைப்பிடித்து சம்பாதிப்பது, அதைச் செலவழிப்பது என்ற சிந்தனையிலேயே இருப்பது நல்லது. சேமிப்பில் ஆர்வம் காட்டினால் திடீர்ச் செலவுகள் கையைக் கடிக்கும்.

இந்தமாதம் செவ்வாயும் வக்ரம் பெறுகிறார். குடும்பாதிபதி செவ்வாய் என்பதால் குடும்பத்தில் குழப்பங்கள் ஏற்படும். எதையும் துணிந்து செய்யஇயலாது. பலரும் பலவித அபிப்பிராயங்கள் சொல்வதைக்கேட்டு முடிவெடுக்க முடியாமல் தவிப்பீர்கள். இருந்தாலும் செவ்வாயின் வக்ர நிவர்த்தி ஆகும் வரை மட்டும் அல்லாது, சனியும் வக்ர நிவர்த்தியாகும்வரை சற்று பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. எந்த முடிவையும் அதன் பிறகு எடுத்துக்கொள்ளலாம். புது முயற்சிகளைத் தவிர்ப்பது மட்டுமல்லாமல், பொன்னான உடலையும் பேணிப்பாதுகாப்பது நல்லது.

மார்ச் 26 ஆம்திகதி ஜென்மச்சனி விரயச்சனியாக பின்னோக்கிச் செல்கிறார். எனவே, வரவைவிட செலவு கூடும். இடமாற்றங்கள், இலாகா மாற்றங்கள் உத்தியோகஸ்தர்களுக்கு வந்துசேரலாம். இருப்பினும், அதை உபயோகப்படுத்திக் கொள்ளாமல் இருப்பதே நல்லது. ஆலய வழிபாட்டில் ஆர்வம்கூடும். சொத்து பிரச்சினைகள் மீண்டும் தலை தூக்கலாம்.

அஷ்டமத்தில் சுக்கிரன் பலம் பெறுவதால், பணத்தேவைகள் பூர்த்தியானாலும், அடுத்த வினாடியே செலவாகலாம். விலையுயர்ந்த பொருட்களை விருப்பம்போல் வாங்குவது நல்லது. வாகனப்பழுதுச் செலவுகள் தவிர்க்கமுடியாததாக அமையும். வாழ்க்கைத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும். குடியிருக்கும் வீட்டால் பிரச்சினைகள் உருவாகலாமல் பார்த்துக் கொள்வது நல்லது.

ஏப்ரல் 9 ஆம் திகதி புதன் மீன இராசியில் உச்சம் பெறப்போகிறார். 9-12 க்கு அதிபதியான புதன் உச்சம் பெறுவதில் தந்தை வழியில் விரயங்களும் பூர்வீக சொத்துக்களால் பிரச்சினையும் உருவாகலாம். மாமன், மைத்துனர் வழியில் சுபவிரயங்கள் ஏற்படலாம். அந்நியதேசத்திலிருந்து வரும் அழைப்புகளை ஏற்றுக் கொள்வதா? என்று யோசிப்பீர்கள். அரசுவழி பொறுப்புகளில் உள்ளவர்களுக்கு திடீர்மாற்றம் உருவாகும்.

இம்மாதம்வரும் வாய்ப்புக்களை உபயோகப்படுத்திக் கொள்ள முடியுமா? என்பது சந்தேகம்தான். உடன் பிறப்புக்கள் பகைமையாகாமல் பார்த்துக்கொள்வது உங்கள் புத்திசாலித் தனமாகும். சனியின் வக்ர நிவர்த்திவரை சற்று பொறுமையைக் கடைப்பிடிப்பதே நல்லது. கணவன் - மனைவிக்குள் விட்டுக் கொடுத்து செல்வதே அமைதிக்கு வழிவகுக்கும். இனம் புரியாத கவலை மேலோங்கும். இம் மாதத்தில் சனீஸ்வர வழிபாடு உங்களுக்கு சந்தோசத்தை வழங்கும்.

## சிவல்புரி சிங்காரம்




விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை

**வெற்றிக் கனியை எட்டிப் பிடிக்கலாம்!**

பெரிய மனிதர்களின் பிரியத்திற்கு பாத்திரமாக விளங்கும் விருச்சிக இராசி நேயர்களே!

யோசனை சொல்வதில் அசகாய சூரர்கள் நீங்கள். பேச்சாற்றலும், எழுத்தாற்றலும் ஒருங்கே இணைய பெற்றவர்களாக இருப்பீர்கள். உங்கள் மனதில் தவறு என்று தோன்றினாலும்கூட, அது சரியானதுதான் என்று வாதிட்டு வெற்றி காண்பீர்கள். சட்டையை மாற்றுவதுபோல், நண்பர் களையும் அடிக்கடி மாற்றும் குணம் உங்களுக்கு உண்டு. காலத்தைக் கணிப்பதில் வல்லவர்களாக விளங்கும் உங்களுக்கு மூளை பலமே மூலபலம்.

உங்களுக்கு இந்த பங்குனி மாதக்கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்போது, மாதத்தொடக்கம் உங்கள் இராசிலேயே பிறக்கிறது. சகல யோகத்தோடு பிறக்கும் இம் மாதத்தில் சகல யோகமும் உங்களுக்கு வந்து சேரப்போகிறது. சனியின் வக்ர இயக்கத்தால் இலாபம் பெருகும். சென்ற மாதத்தைக் காட்டிலும் இந்த மாதம் சிறப்பான மாதமாகவே இருக்கும்.

இராசி நாதன் வக்ரம் பெற்றாலும், குருவின் பார்வை அதன் மீது பதிவதால் குரு மங்கள யோகம் உருவாகிறது. எனவே, குடும்பத்தில் சுபகாரிய பேச்சுகள் நல்ல முடிவிற்கு வரும். வீடு கட்டும் முயற்சியிலும் வெற்றி காண்பீர்கள். இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகும் சனியால் வருமானம் இருமடங்காகும். *கருதிற காகம் ஏறிக் காசினி தன்னைக் காக்கும்* என்ற சனி கவசத்தை ஈஸ்வரன் பட்டம் பெற்ற சனியின் முன்னிலையில் பாடுங்கள். வாசமலர் சூடுங்கள். நேச மனப்பான்மை மிக்கவர்களின் எண்ணிக்கையும் கூடும். நெஞ்சம் மகிழும் வாழ்க்கையும் கிட்டும்.

செவ்வாயைப் புனிதமடைய வைக்கும் குருவழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள். ஏழரைச்சனி இரண்டாவது சுற்று நடப்பவர்கள் இனிய பலன்களைக் காண்பீர்கள். முதல் சுற்றோ, மூன்றாவது சுற்றோ நடப்பவர்கள் முறையான பரிகாரத்தை மேற்கொள்வது நல்லது.

மார்ச் 26 ஆம் திகதி இலாப ஸ்தானத்தில் சனி சஞ்சரிக்கப் போகிறார். வக்ர இயக்கத்தில் இருந்தாலும், வளர்ச்சியைக் கூட்டுவர். தொழில், வியாபாரத்தில் புதிய உத்தியைக் கையாள்வீர்கள். அந்நிய தேசப்பயணம் எண்ணியபடியே கையாள்வீர்கள். ஆதாயம் கருதாத தொழிலில் கூடிய அளவுக்கு ஆதாயம் கிடைக்கும்.

சுக்கிரன் இடப இராசியில் மார்ச் 27 ஆம் திகதி சொந்த வீட்டில் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக கணவன், மனைவிக்குள் ஒற்றுமை கூடும். ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். மின் சாதன பொருட்களையும் விலையுயர்ந்த பொருட்களையும் வாங்கி மகிழ்வீர்கள். கடிதம் கனிந்த தகவலைத்தரும்.

ஏப்ரல் 9 ஆம் திகதி மீன இராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். 8,11-க்கு அதிபதி 5-இல் சஞ்சரிக்கும்போது, பிள்ளை களின் வழியில் பெருமைக்குரிய தகவல்கள் வந்துசேரும். பூர்வீகசொத்துக்களால் இலாபம் கிட்டும். பதவி உயர்வு, ஊதியஉயர்வு ஆகியவற்றிற்கான அறிகுறிகள் தோன்றும். பிரபலஸ்தர்கள் உங்களுக்கு பின்னணியாக இருந்து உதவிக்கரம் நீட்டுவர்.

இம்மாதம் ஆனைமுகப்பெருமான் வழிபாடும் ஆறுமுகபெருமான் வழிபாடும் ஆனந்தத்தைத் தரும்.

இம்மாதம் குரு- மங்கள யோகம் இருப்பதால், குழந்தைகள் நலன் கருதி எடுத்தமுயற்சிகள் வெற்றி கிடைக்கும். குடும்பப் பொறுப்புகள் கூடும். தம்பதி யர்களுக்குள் அந்நியோன்யம் அதிகரிக்கும். வீட்டுத் தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். மாதத்தின் மத்தியில் விருந் தினர்களால் நன்மை கிட்டும். வியாபார ஒப்பந்தங்களை உங்கள் பெயரிலேயே பதிவு செய்து கொள் வீர்கள். அனுமன் வழிபாட்டில் ஆர்வம் காட்டினால் இனிய வாழ்க்கை அமையும்.

(தொடரும்)

* * *

# அமெரிக்க தீர்மானத்தை இந்தியா ஆதரிக்கக்கோரி விடுதலை சிறுத்தைகள் அமைப்பு போராட்டம்



**ஐ.நா.மன்றத்தின் மனித உரிமைகள் பேரவைக்கூட்டத்தில் இலங்கை அரசுக்கு எதிராக அமெரிக்க வல்லரசு முன்மொழிந்துள்ள வரைவுத் தீர்மானத்தை இந்திய அரசு ஆதரிக்க வேண்டுமென தமிழக மக்களும் உலகத் தமிழினமும் ஒட்டுமொத்தமாகக் குரல்எழுப்பி வருகின்றன.**

**ஆனாலும், இந்திய அரசு அத்தீர்மானத்தை ஆதரிக்கும் என்பதற்கான அறிகுறி எதுவும் தென்படவில்லையென விடுதலை சிறுத்தைகள் தலைவர் தொல்.திருமாவளவன் அறிக்கையொன்று வெளியிட்டுள்ளார்.**

அதில் அவர் தெரிவித்திருப்பவை வருமாறு, மக்களவையிலும் மாநிலங்களவையிலும் தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒட்டுமொத்தமாக ஒருங்கிணைந்து வற்புறுத்தியும் கூட இந்திய அரசின் நிலைப்பாடு தெளிவுபடுத்தப்படவில்லை. மாறாக அத்தீர்மானத்தை இந்திய அரசு ஆதரிக்க வாய்ப்பில்லை என்கிற வகையில் வெளியுறவுத்துறை அமைச்சரின் அறிக்கை அமைந்துள்ளது.

இந்நிலையில் இந்திய அரசு அத் தீர்மானத்தை ஆதரிக்க வேண்டுமென்று வலியுறுத்தி விடுதலைச்சிறுத்தைகள் நாளை மறுதினம் புதன்கிழமை அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் ஒருநாள் உண்ணா விரத அறப்போராட்டத்தில் ஈடுபடுவார்கள்.

அத்துடன் தமிழ்த்தேசிய உணர்வாளர்கள் ஒருங்கிணைந்து எதிர்வரும் 23 ஆம் திகதி நடத்தவுள்ள பொதுவேலை நிறுத்தத்தில் விடுதலைச் சிறுத்தைகள் முழுமையாகப் பங்கேற்கும். விடுதலைச் சிறுத்தைகளின் உண்ணா விரத போராட்டத்திலும் பொதுவேலை நிறுத்தத்திலும் உழைக்கும் தமிழக மக்கள் பெருவாரியாகப் பங்கேற்று நமது ஒற்றுமையை வெளிப்படுத்த வேண்டும் என விடுதலைச் சிறுத்தைகள் சார்பில் கேட்டுக் கொள்கிறேன் என்று அவர் தெரிவித்துள்ளார். (2-7)

## தேசிய நூதனசாலை கமராக்கள் இயங்கவில்லை

(கொழும்பு)

கொழும்பிலுள்ள தேசிய நூதனசாலையில் கடந்த வெள்ளிக்கக்ழமை இரவு புராதனப்பொருட்கள் திருடப்பட்டபோது அங்கு பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கமெராக்கள் இயங்காமலிருந்ததாக் தேசிய மரபுரிமைகள் அமைச்சர் ஜகத் பாலசூரிய தெரிவித்துள்ளார்.

திருட்டு சம்பவம் இடம்பெற்ற போது நூதனசாலை கட்டடத்திற்குள் எவரேனும் இருந்தாரா என்பதை அறிவதற்கு விசாரணை நடத்தப்பட வேண்டும் என அவர் கூறியுள்ளார்.

இரவு நேரங்களில் நூதனசாலைக்குள் எவரும் இருப்பதில்லை. அதிகாரிகள் இரவில் கதவுகளை மூடி சாவிகளை பொலிஸாரிடம் ஒப்படைத்துவிடுவர். விசாரணையின் போது இவ்விடயங்களை கருத்திற் கொள்வது அவசியம் என அவர் கூறினார்.(2-7)

# இலங்கையில் அதிகளவு பெண்கள் விதவையாக மாற இந்தியாவே காரணம்

## பத்மாவதி தெரிவிப்பு

(சென்னை)

இலங்கையில் 65 ஆயிரம் இளம் பெண்கள் விதவையாக மாற மத்திய அரசு தான் காரணம் என மாதர் தேசிய சம்மேளனத்தில் மாநில பொதுச்செயலாளர் பத்மாவதி தெரிவித்துள்ளார்.

மாவட்ட மகளிர் குழு சார்பில் மகளிர் தின விழா மற்றும் பொதுக்கூட்டம் கூத்தாநல்லூரில் நடந்தது.

இந்நிகழ்வில் பத்மாவதி உரையாற்றுகையில், உலகில் பெண்களுக்கு எதிரான வன்கொடுமை கட்டவிழ்த்து விடப்பட்டு இருந்த நேரத்தில் தங்களுடைய சமத்துவ உரிமைகளையும் அரசியல் உரிமைகளையும் பெற பெண்கள் கடும் போராட்டம் நடத்தினர்.

இதன் விளைவாக ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதம் 8 ஆம் திகதி சர்வதேச மகளிர் தினவிழா உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது.

இந்த வேளையில் அயல் நாடான இலங்கையில் 1.30 இலட்சம் அப்பாவி தமிழர்களை இந்திய அரசின் உதவியுடன் இலங்கை இராணுவம் படுகொலை செய்தது.

இதில் 65 ஆயிரம் இளம் பெண்கள் விதவைகளாக ஆக்கப்பட்டனர். இது போன்ற பாதகச் செயலுக்கு மத்திய அரசுதான் காரணம் என்று குற்றம் சாட்டி பேசினார். (2-7)

# ஊழல் மோசடியுடன் தொடர்புடைய அமைச்சர், எம்.பிக்கள் விபரம் கோரல்

(கொழும்பு)

ஊழல் மோசடி மற்றும் குற்றங்களில் தொடர்புடைய அமைச்சர்கள்,எம்.பிக்கள் மாகாண, உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களின் பட்டியலொன்றை வழங்குமாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன பொலிஸ்மா அதிபரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பணிப்புரையின் பேரில் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன இந்த விபரங்களை கோரி கடந்த 15 ஆம் திகதி பொலிஸ்மா அதிபருக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இதற்கிடையில் ஊழல் மோசடி மற்றும் ஏனைய குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள மாகாண சபைகளின் உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள், உறுப்பினர்கள் தொகுதி அமைப்பாளர்கள் தொடர்பான பட்டியல் கிடைத்தவுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்குழு கூடி சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (2-7)

# மதுபோதையில் இடையூறு ஏற்படுத்தியோர் கைது

(கொழும்பு)

கண்டி நகரில் மதுபோதையில் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்திய ஆறு நபர்களை கண்டி பொலிஸார் அன்றைய தினம் இரவு கைது செய்துள்ளனர்.

கண்டி பொலிஸார் கண்டி நகர வீதிகளில் திடீர் சோதனை ஒன்றினை மேற்கொண்ட போதே அவர்கள் ஆறு பேரையும் கைது செய்துள்ளனர்.

இதேவேளை, பல திருட்டு சம்பவங்கள் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் இருநபர்களையும் பொலிஸார் கைது செய்து விசாரணைக்குட்படுத்தியுள்ளனர்.

இது இவ்வாறிருக்க கண்டியிலுள்ள பிரபல மாணிக்ககற்கள் விற்பனை காட்சியறை ஒன்றில் வைக்கபட்பட்டிருந்த வெள்ளைத் தங்கத்திலான மாணிக்கக்கற்களில் பதிக்கப்பட்ட சுமார் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுதியான வளையல் ஒன்று திருடப்பட்டுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொலிஸார் சந்தேகத்தின் பேரில் அங்கு கடமையாற்றிய ஊழியர் ஒருவரை தேடி வருகின்றனர். (2-7)

# தமிழக ஊடுருவல்களை தடுக்க கச்சதீவில் கடற்படை முகாம்

(கொழும்பு)

வடக்கு கடற்பரப்பு மீதான தனது கண்காணிப்பை கடற்படை முடுக்கியுள்ள நிலையில் கச்சதீவிலும் நிரந்தர கடற்படைத் தளங்களை அரசு அமைத்துக் கொண்டுள்ளது. ஏற்கனவே கிளிநொச்சி மாவட்டத்திற்கான நிரந்தர பாரிய கடற்படை தளம் கடந்த வாரம் நாச்சிக்குடாவில் திறந்து வைக்கப்பட்டிருந்தது. இதன் மூலம் மன்னார் முதல் காங்கேசன்துறை வரையான கடற்பரப்பு முற்றுமுழுதாக இலங்கை கடற்படையின் பூரண கண்காணிப்பினுள் கொண்டு வரப்பட்டுள்ளது.

கச்சதீவின் மேற்குப் பகுதியிலுள்ள மேட்டு நிலப்பரப்பினை உள்ளடக்கி இந் நிரந்தர கடற்படை தளம் அமைக்கப்பட்டுள்ளது. முறிகண்டிப் பகுதி வழியில் படையினருக்கான குடியிருப்புக்களை அமைக்க சீன அரசு வழங்கிய பொருத்துக்களைக் கொண்டே இத்தளமும் நிறுவப்பட்டுள்ளது.

அத்துடன் இடம்பெயர்ந்த மக்களுக்கென வழங்கப்பட்ட சீன அரசின் டென்ற் கொட்டகைகளும் கடற்படை தள அமைப்பிற்கு பயன்படுத்தப்பட்டிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழகத்திலிருந்து ஊடுருவல்களைத் தடுக்கவே இக்கடற்பரப்பின் கண்காணிப்பை கடற்படை முடுக்கி விட்டுள்ளது. அதிலும் கச்சதீவில் நிரந்தர கடற்படைத் தளமொன்று அமைக்கப்பட்டுள்ளதுடன் கடற்படைக் கப்பல்கள் இரண்டு இக்கடற்பரப்பில் நிறுத்தி வைக் கப்பட்டுள்ளன.

அண்மைக் காலமாக தீவகப் பகுதிகளில் கடலட்டை பிடிப்பதற்கென பெருமளவிலான மீனவர்கள் தெற்கிலிருந்து படையெடுத்த வண்ணமுள்ளனர். கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சு இவர்களுக்கான பாஸ் அனுமதியை வழங்கி வருகின்றது.

ஏற்கனவே புங்குடுதீவில் மீன்பிடியில் ஈடுபட வந்திருந்த தென்னிலங்கை மீனவர்கள் உள்ளூர் மீனவர்களது எதிர்ப்பினால் வெளியேற்றப்பட்டிருந்தனர். இந்நிலையில் அதிகரித்துள்ள கடற்படையினர் பிரசன்னத்தின் மத்தியில் மீண்டும் கடலட்டை பிடிக்கவென தென்னிலங்கை மீனவர்கள் தீவகப் பகுதி நோக்கி படையெடுக்கத் தொடங்கியுள்ளமை மீனவர்களிடையே மீண்டும் குழப்பமான சூழலொன்றைத் தோற்றுவித்துள்ளது. (2-7)

# ஈராக்கிடமிருந்து இலங்கை எரிபொருள் பெற முயற்சி

(கொழும்பு)

ஈரானிடமிருந்து எரிபொருள் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகள் எதிர்வரும் 29 ஆம் திகதியுடன் முடிவடைவதால் ஈராக்கிடமிருந்து எரிபொருள் பெற்றுக் கொள்ள இலங்கை அரசாங்கமும் முயற்சி செய்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.


ஈரான் மீது மேற்குலக நாடுகள் பிரயோகித்து வரும் பொருளாதாரத் தடையின் காரணமாக இலங்கையினால் தொடர்ந்தும் எரிபொருளை இறக்குமதி செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் இலங்கைக்கு எரிபொருளை வழங்க ஈராக் இணங்கியுள்ளது. சவுதி அரேபியா, ஓமான், மற்றும் ஈராக் ஆகிய நாடுகள் இலங்கைக்கு எரிபொருளை வழங்க இணங்கியுள்ளதாக பெற்றோலிய கூட்டுத்தாபன உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

எந்த நாட்டிடமிருந்து எரிபொருளை பெற்றுக் கொள்வது என்பது தொடர்பில் இது வரையில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கையின் மொத்த மசகு எண்ணெய் தேவையில் 90 வீதம் ஈரானிடமிருந்து இறக்குமதி செய்யப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (2-7)

# நாட்டில் மீண்டும் இனக்கலவரம் ஏற்பட்டால் அமைச்சர் சம்பிக்கவும் அரசாங்கமுமே பொறுப்பு



## அரியநேத்திரன் எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

**இலங்கையில் மீண்டுமொரு இனக்கலவரம் ஏற்படுமாகவிருந்தால் அதற்கான முழுப்பொறுப்பையும் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சர் சம்பிக்க ரணவக்கவும் அவர் அங்கம் வகிக்கும் அரசாங்கமுமே பொறுப்பேற்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.**

ஜெனீவாவில் நடைபெறும் 19 ஆவது மனிதவுரிமைக் கூட்டத்தொடரில் இலங்கைக்கெதிராக அமெரிக்காவினால் கொண்டு வரப்படவுள்ள பிரேரணை நாட்டில் இனக்கலவரத்தை ஏற்படுத்தும் என அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ள கருத்துக்கே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கெதிராக கொண்டுவரப்படவுள்ள பிரேரணை நாட்டில் இனக்கலவரத்தை ஏற்படுத்தும் என அமைச்சர் சம்பிக்க ரணவக்க கூறிய கருத்து இலங்கையில் உள்ள தமிழ் மக்கள் மத்தியில் அச்சத்தையும் குழப்பத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

காலம் காலமாக இலங்கையில் உள்ள தமிழர்கள் மீது இனக்கலவரத்தை தூண்டிவிட்டவர்கள் ஆட்சிசெய்த அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள்தான் என்பது அமைச்சர் சம்பிக்க ரணவக்கவின் கருத்தின் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறுதான் கடந்த 1956, 1983 ஆம் ஆண்டுகளில் தமிழர்கள் மீதான இனக்கலவரத்தை தூண்டிவிட்டு வேடிக்கை பார்த்தவர்கள் அப்போதைய அரசாங்கத்தில் அங்கம் வகித்த அமைச்சர்களும் அரசாங்கமும்தான்.

ஒருபோதும் சிங்கள மக்களோ அல்லது வேறு இன மக்களோ தமிழர்கள் மீதான தாக்குதல்களுக்கு காரணமாக இருந்திருக்கவில்லை. எனவே, இன்று மீண்டும் தமிழர்கள் மீது சிங்களவர்களை தூண்டிவிட்டு இனக்கலவரத்தை ஏற்படுத்தும் வகையில் அரசாங்க அமைச்சர் ஒருவர் கருத்து தெரிவித்துள்ளதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் பொறுப்பு வாய்ந்த அமைச்சரின் இந்த கருத்தை தமிழ் மக்களாகிய நாம் ஒருபோதும் சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியாது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெளிவுபடுத்த வேண்டும்.

தற்போது ஜெனீவா விடயத்தை காரணம் காட்டி தமிழர்களை வற்புறுத்தி ஆர்ப்பாட்டங்களுக்கு அழைப்பதும் ஆலயங்களில் பூசை செய்யுமாறு வற்புறுத்துவதும் என தமிழர்கள் மீதான கெடுபிடிகள் அதிகரித்துள்ளன.


இந்நிலையில் அடுத்து என்ன நடக்குமோ? என்ற அச்சத்திலேயே தமிழர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

ஜெனீவாவில் அமெரிக்காவினால் கொண்டுவரப்படவுள்ள தீர்மானத்தை தமிழ் தேசியக் கூட்டமைப்பு வெளிப்படையாக ஆதரித்துள்ள நிலையில் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் எச்சரிக்கை விடுவதாகவுள்ளதோடு தமிழ் மக்கள் மத்தியில் மேலும் அச்ச சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது.

எனவே, எதிர்வரும் நாட்களில் ஜெனீவாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அதை காரணமாகக் கொண்டு இலங்கையில் ஒரு இனக்கலவரத்தை தூண்டிவிட்டு தமிழர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டாலோ அல்லது கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டாலோ அதற்கான முழுப்பொறுப்பையும் அமைச்சர் சம்பிக்க ரணவக்கவும் அவரது அரசாங்கமுமே பொறுப்பேற்க வேண்டும் என நாங்கள் பகிரங்கமாக தெரிவித்து கொள்கின்றோம் என பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(2-7)

# நாட்டை பிளவுபடுத்த புலி ஆதரவாளர்கள் தொடர்ந்து முயற்சிக்கின்றனர்



## மைத்திரிபால தெரிவிப்பு

நாட்டைப்பிளவு படுத்த தமிழீழ விடுதலைப்புலி ஆதரவாளர்கள் தொடர்ந்தும் முயற்சித்து வருவதாக ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச்செயலாளலர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

போர் ரீதியாக தோற்கடிக்கப்பட்ட புலிகள், உலகின் வலுவான நாடுகளின் தலையீட்டின் ஊடாக மீண்டும் தலைதூக்க முயற்சிக்கின்றனர்.

யார் என்னசொன்னாலும், பிரபாகரனால் செய்ய முடியாததனையே ஜெனீவா மனித உரிமைகள் பேரவை ஊடாக புலி ஆதரவாளர்கள் செய்ய முயற்சிக்கின்றனர்.

நாட்டை இரண்டாக பிளவு படுத்துவதே ஜெனீவா பிரேரணையின் பிரதான நோக்கமாகும்.

இந்த நெருக்கடியான தருணத்தில் மக்கள் புத்திசாலித்தனமான தீர்மானங்களை எடுக்க வேண்டியது அவசியமானது என மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஜெனீவா பிரேரணை தோற்கடிப்பதற்கு ஆசிவேண்டி பொலநறுவை கல் விஹாரையில் நடைபெற்ற மதவழிபாட்டு நிகழ்வில் கலந்து கொண்ட போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

(2-7)

# வவு.வடக்கில் சுகாதாரமற்ற உணவகங்கள் சீல் வைப்பு

(வவுனியா)

வவுனியா வடக்கு பிரதேசங்களான கனகராயன்குளம் மற்றும் புளியங்குளம் ஆகிய பிரதேசங்களில் சுகாதாரமற்ற முறையில் இயங்கி வந்த 8 உணவகங்கள் சீல் வைக்கப் பட்டுள்ளது என வவுனியா வடக்கு பொது சுகாதார பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

வவுனியா வடக்கு சுகாதார வைத்திய அதிகாரியின் பணிப்பின் பேரில் பொது சுகாதார பரிசோதகர்கள் மற்றும் சுகாதார பகுதி உத்தியோகத்தர்கள் திடீர் பரிசோதனைகளை மேற் கொண்ட போதே இந்த உணவகங்கள் சுகாதார முறையில் இயங்காமை கண்டுபிடிக்கப்பட்டன.

அத்துடன் குறித்த உணவகங்களின் உரிமையாளர்கள் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டு தலா 50 ஆயிரம் ரூபா சரீர பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

ஆனால், உணவகங்கள் எதிர்வரும் 14 நாட்களுக்கு சீல் வைக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கடந்த 20 ஆம் திகதி நெடுங்கேணி பகுதியிலுள்ள உணவகங்கள் சுகாதார பகுதியினரின் திடீர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது சுமார் 6 கடைகள் சீர் வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(2-7)


**இலவச அழகுக் கலைப் பயிற்சி**

ஒறிபிளேம்(Oriflame)தனது 45 ஆவது வருடத்தை முன்னிட்டு இலவசமாக அழகுக்கலை பயிற்சியை ஆரம்பிக்கவுள்ளது.( Facial,Pedicure, Manicure, Hair style, Bridal Make-up) செய்முறை விளக்கத்துடன் இடம் பெற்று பயிற்சியின் முடிவில் சர்வதேச சான்றிதழ்கள் வழங்கப்படும். அத்துடன் ரூபா 11,370 பெறுமதியான பரிசில்கள் பெற்றுகொள்வதற்கும் சந்தர்ப்பம் உண்டு.

பயிற்சியில் இணைய விரும்புவோர் அறிமுக நிகழ்வில் கலந்து கொண்டு உங்கள் பதிவுகளை மேற் கொள்ளவும்.

காலம் :-20.03.2012 நேரம்:2.00P.M

இடம்:- ஒறிபிளேம் யாழ்கிளை,
187/30 , யூனியன் ஒழுங்கை,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

தொடர்புகளுக்கு: 0777802691, 077 9152693

**எதிர்காலம் உங்கள் கையில்!!!**

(கு-6107)


# வெளிநாட்டு சூழ்ச்சி திட்டங்களை முறியடிக்க ஒத்துழைப்பு வழங்குவேன்

## சஜித் பிரேமதாச தெரிவிப்பு

(கொழும்பு)

வெளிநாட்டு சூழ்ச்சி திட்டங்களை முறியடிக்க நாட்டிற்கு ஒத்து ழைப்பு வழங்குவேன் என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். வெளிநாட்டு சக்தி களிடமிருந்து நாட்டை பாதுகாக்க வேண்டிய சகல சந்தர்ப்பங் களிலும் நான் அரசியலில் பேதங்களை கருதுவதில்லை.

இந்நிலையில் வெளிநாட்டு சக்திகளுக்கு எதிராக போராடு வதனை போன்றே மக்களின் விருப்பு வெறுப்புகளை புரிந்து கொள்ளாது நடக்கும் அரசாங்கத்திற்கு எதிராகவும் போராடுவேன்.

உள்நாட்டில் எவ்வாறான பிரச்சினைகள் ஏற்பட்டாலும் வெளிநாட்டு சக்திகளிடம் நாட்டை காட்டிக் கொடுக்க கூடாது என அவர் தெரிவித்தார்.

(2-7)

# இந்தியா இலங்கைக்கெதிரான தீர்மானத்தை எதிர்க்கலாம்

## இரா.சம்பந்தன் தெரிவிப்பு

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கெதிராக அமெரிக்கா கொண்டு வரும் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க தவறினால் அது இலங்கையிலுள்ள தமிழர்களை காயப்படுத்தும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இந்தியா இந்தத் தீர்மானத்தை எதிர்க்கலாம் என்று தெட்டத்தெளிவாக தெரிகிறது. இதனால் இலங்கையிலுள்ள தமிழ் மக்கள் பாதிக்கப்படுவார்கள் என கூட்டமைப்பின் தலைவர் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் சார்பாக மட்டும் நான் பேசவில்லை. இதேவேளை இந்தியா ஒரு அயல்நாடு. அவர்கள் மிகவும் கவனமாகவே முடிபு எடுப்பார்கள் என்று நினைக்கிறேன். இந்த முடிவின் ஊடாக அவர்கள் ஒரு பங்கை வகிக்க முடியும் என்று நான் நம்புகிறேன் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த மாதத் தீர்மானம் கலந்துரையாடல் நிலையில் இருந்த போது வோஷிங்டனுக்கு நெருக்கமான வட்டாரங்கள் இந்தியாவை அமெரிக்கா எதிர்க்காது என்றும் தமது எந்த நகர்வும் இந்திய, அமெரிக்க உறவுகளைப் பாதிக்கும் வகையில் அமையாது என்றும் கூறியிருந்தன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (2-7)

அரசன் அன்றறுப்பான்
இறைவன் நின்றறுக்கும் —நீதிமொழி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## இலங்கை அரசு அன்றறுக்கும் அமெரிக்கா நின்றறுக்கும்

இராவணனின் கொடுந் துயரம் தாங்க முடியாத தேவர்கள் இறைவனிடம் முறையிடுகின்றனர்.

இறைவன் அரக்கர்களை அழிப்பது தொடர்பில் ஆலோசிக்கின்றார். அழிப்பதென்றாலும் அதற்கும் திட்டம் தீட்டவேண்டும்.

இப்போதெல்லாம் யாழ்ப்பாணத்தில் எவரைக் கால்தட்டுபோட்டு வீழ்த்துவதாக இருந்தால் அவரை பெண்கள் சமாச்சாரத்துடன் ஈடுபடுத்தும் ஒருவகைப் பண்பாடு இருக்கிறது அல்லவா!

அதுபோல தேவலோகத்திலும் இப்படியொரு பண்பாடு.

சுந்தரர் பரவையாரை பார்த்ததும் இந்தப் பண்பாட்டிற்குள் அடங்கும். அந்தப் பண்பாடு அணுகுமுறை இராவணனின் அழிப்புக்கும் பயன்படுத்தப்பட்டது.

இராமரை சூர்ப்பனகை காண்பதன் ஊடாக இராவண சேனைக்கான அழிவு கருக்கட்டுகிறது.

... அருந்துயில் துறந்த ஐயனைக் கண்டனள் தன் கிளைக்கு இறுதி காணுவாள் என்று கம்பன் கூறுகிறான்.

சூர்ப்பனகை இராமரைக் கண்டு மயங்க, லட்சுமணன் சூர்ப்பனகையின் மூக்கை அறுக்க, இராமாயணப் போர் தொடங்கி தேவர்களின் முறைப்பாட்டுக்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இது போன்றதுதான் இலங்கை விவகாரமும். வன்னியில் நடந்த கொடும்போர் இறைவா!... இறைவா... என்று மக்கள் செய்த முறைப்பாடு... அதற்கு இறைவன் இப்போது நடவடிக்கை எடுக்கத் தலைப்பட்டுவிட்டான்.

நடவடிக்கை எடுப்பதாக இருந்தாலும் அதில் ஒரு ஜனநாயகம் இருக்க வேண்டும்.

இலங்கை உட்பட 47 நாடுகள் கூடி மனித உரிமைபற்றி ஜெனிவாவில் ஆராய்கின்றன.

மலையாக நம்பியிருந்த இந்தியா துரோகம் இழைத்த பின்பு, முடிந்தால் இந்த இறைவன் பார்த்துக் கொள்ளட்டும் என்றிருந்த ஈழத்தமிழ் மக்களின் பிரச்சினையை உலகின் அதி உன்னத வல்லரசான அமெரிக்கா தன்கையில் எடுத்துக் கொண்டது. எங்கள் பிரச்சினையை அமெரிக்கா கையில் எடுக்கும் என்று யாரும் நினைத்திலர். எல்லாம் அவன் செயல்.

இப்போது இலங்கை அரசுக்கு எதிரான தீர்மானத்தை ஜெனிவாவில் அமெரிக்கா கொண்டு வருகின்றது.


தீர்மானம் வெற்றி தருமா? தோற்றுப்போகுமா? என்பதெல்லாம் தேவையற்ற விவாதம்.

அமெரிக்கா எடுத்த விவகாரம். அது பிசுபிசுத்து போனால் அமெரிக்காவுக்கு மானபங்கம் மட்டுமல்ல,

உலகில் இனத்தால், மதத்தால், மொழியால் மக்கள் சமூகத்தை கசக்கிப்பிழியும் வன்மம் கொண்ட அரசுகளை கட்டுப்படுத்தவும் முடியாமல் போகும்.

ஜெனிவாத் தீர்மானம் தோற்றாலும் வென்றாலும் இலங்கை அரசு அன்றறுத்ததற்கு அமெரிக்கா நின்றறுக்கும். இதுதான் நிஜம்.

# ஈழவள நாட்டின் பெருமைமிக்க பன்றித்தலைச்சி அம்மன் பங்குனித்திங்கள்



ஈழவள நாட்டின் பழம்பதிகளுள் புதுமை மிக்கது மட்டுவில் பன்றித் தலைச்சி அன்னை ஆலயம். எங்கள் குருநாதன் யோகர் சுவாமிகள், செல்லப்பதேசிகருடன் பங்குனி முதல் திங்கள் பன்றித்தலைச்சிக்கு சென்று பொங்கலிடுவது சுவாமிகள் வாழ்ந்த காலத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்வு. மேலும் செல்லப்பர் மட்டுவிலுக்கு சென்று ஒரு கத்தரிக்காயை வாங்கி அதை நுனிக் காம்பில் பிடித்தவாறு நல்லூர் வந்து யோகருடன் தேரடியில் சமைத்து உண்டு மகிழ்ந்ததாக அறிய முடிகின்றது.

இவ்வாலயம் அனைத்து இனத்தவராலும் வணங்கப்பெறும் பெருமை மிக்கது. இன்றும் ஒரு குடிலில் எழுந்தருளி அருள் பாலிக்கும் பன்றித் தலைச்சி அம்மனை அறியாத இலங்கையர் இல்லை. இது நல்லூர், கதிர்காமம், சந்நிதி, மாவிட்டபுரம் போன்று புகழ் பூத்த ஆலயம்.

மட்டுவிலைச் சேர்ந்த பறைக் குலப் பக்தனொருவன் பன்றி வேட்டையின் போது விட்ட அம்பு தவறுதலாக மாடொன்றில் பாய்ந்து மாடு இறந்துவிட்டது. மாட்டுச் சொந்தக்காரன் பெரிய சண்டியன், நாட்டாண்மைக்காரன், அவன் தன்னை படாதபாடு படுத்தப்போகிறான் என்று பயந்த பக்தன் இரவு முழுவதும் நித்திரையின்றி அழுது அம்மாள் ஆச்சி என்னைக் காப்பாற்று. இன்றோடு இந்தக் கொலைத்தொழிலை விட்டுவிடுகிறேன் என மட்டுவில் அம்பிகையை சரண் புகுந்தான். அம்பாள் ஏழைகளின் தெய்வம். பக்தன் வேறு வழியின்றி கோயிலுக்கு கிழக்கேயுள்ள வடலிக் கூடலில் மாட்டைப் புதைத்துவிட்டு கோயிலில் உறங்கிவிட்டான்.

தனது மாடு கொலை செய்யப்பட்டதை அறிந்த நாட்டாமை கோயிலில் வந்து பறைக்குலப் பக்தனை அடிக்க முற்பட அவன் **ஆச்சி அபயம்** எனக் கத்தினான். நாட்டாமையின் அடியாட்கள் மாடு புதைக்கப்பட்ட இடத்தை தோண்டியபோது அங்கு பன்றித்தலையே இருந்தது.

இந்த நிகழ்வுகளை கொல்கத்தா உயர் நீதிமன்ற நீதியரசராக பணியாற்றிய சேர்.ஜோன் உட்ராப் என்ற வெள்ளையர் தமது தந்திரராச தந்திர என்ற நூலில் துர்க்கை அம்மனது பெருமை பற்றி தெளிவாக தெரிவித்துள்ளார்.

நெற்றியில் குங்குமப் பொட்டுடன் காணப்படும் இந்த வெள்ளைக்கார நீதிபதி வடமொழி யிலிருந்து பல துர்க்கை அம்மனது பெருமைக்குரிய நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

பங்குனித் திங்களில் அம்மனைத் தரிசித்தால் அதிக வரம் பெறலாம் என்பதை மட்டுவில் கல்வயலில் உள்ள சிறுவர்கள் கூட உணர்ந்து விரதம் இருப்பர். அதிகாலை பிரம்ம முகூர்த்தத்தில் நான்குபுறமும் இருந்து மக்கள் சாரி சாரியாக குவிந்த வண்ணம் இருப்பர். வருபவர்கள் பொங்கலுக்கு வேண்டிய அடுக்குகளுடன் வருவர். அம்மனின் புனித தீர்த்தத்தில் பிறந்த குழந்தை முதல் முதியோர் வரை ஒரு சொட்டு நீரை தலையில் ஊற்றி அம்மனை வேண்டுவர்.

அதிகாலை வேளை மேலெழும் பொங்கல் புகை பத்து மைலுக்கு அப்பாலும் தெரியும். பொங்குபவர் அம்மனுக்கு படைத்து அங்கு வந்தவர்களுடன் பகிர்ந்து உண்ணும் பரவசக் காட்சியை இங்குதான் காணலாம். அன்னையின் பெயரைச் சொன்னால் கொடிய தொற்று நோய்களும் கலகங்களும் அகன்று விடும்.

பாலா என்ற பெயருடைய ஜேர்மன் சாமியார் மற்றும் சரசாலை அன்பர்கள், யோகர் சுவாமிகள் முன்னிலையில் பன்றித் தலைச்சியில் பொங்கலிட்ட போது ஜேர்மன் சுவாமிகள் யோகர் சுவாமிகளை பார்த்து அங்கு நடைபெறும் நிகழ்ச்சிகளைப் பற்றி அது என்ன? இது என்ன? எனக் கேட்டுக் கொண்டிருந்தார். அப்போது யோகர் சுவாமிகள் கௌரிபாலா சும்மா இரு எனக் கூறினார். இதன் பின்னர் ஜேர்மன் சுவாமிகள் சும்மா இரு என்ற உண்மையை அறியவேண்டி கையிலும் சும்மா இரு என்ற வாக்கியத்தை பதித்து சும்மா இருக்க ஒரு சூத்திரம் என்னும் நூலைப் பதிப்பித்து மார்க்கண்டு சுவாமிகளுக்கு சமர்ப்பித்து ஆசீர்வாதம் பெற்றார்.

பங்குனித்திங்களும் கார்த்திகை சோமவாரமும் விரதம் பிடியாத குழந்தைகள் கூட மட்டுவில் சரசாலைப் பகுதிகளில் காண முடியாது. நீர்வேலி மக்கள் வசந்தன்கவிபாடி வசந்தன் அடிப்பாக்கள், பறைக்குலப்பக்தர்கள், வெளிவீதியில் பறை அடித்து அன்னையை வழிபடுவார்கள். அதை வழிபட வருவோர் பார்த்து அதிசயிப்பர்.

சிறுவனாக இருந்த காலத்தில் அயலவர்களுடன் மாட்டு வண்டியில் அதிகாலை சென்ற ஞாபகம் இன்றும் என் மனக்கண் நிற்கின்றது. நாம் எங்கிருந்தாலும் அன்னை எங்களை கைவிடாள். அழுதால் உன்னைப் பெறலாமே என்ற மாணிக்க வாசகத்திற்கேற்ப நாமும் எமது நிலைமையை அன்னையிடம் கூறி மன்றாடுவோமாக.

*ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை*
*அண்டமெல்லாம் பூத்தாளை முக்கண்ணியை*
*தொழுவார்க்கொரு தீங்கில்லையே*

**மயில்வாகனம் சிவயோகசுந்தரம்**
**[நல்லூரான் சிவா]**
**பொஸ்ரன் அமெரிக்கா.**

## ஐ.நா.வில் இலங்கைக்கு கூடுதல் ஆதரவு-திவயின

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அமர்வுகளில் இலங்கைக்கு கூடுதலான ஆதரவு காணப்படுவதாக திவயின பத்திரகை செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளினால் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்படும் பிரேரணைக்கு ஆதரவாக 22 நாடுகள் மட்டுமே ஆதரவளிக்கும் என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இலங்கைக்கு ஆதரவாக 25 நாடுகள் வாக்களிக்க உள்ளன. இந்நிலையில் கூடுதலான ஆதரவை திரட்டும் நோக்கில் அமெரிக்கா இராஜதந்திரிகளையும் அரச சார்பற்ற நிறுவன பணியாளர்களையும் ஜெனீவா அனுப்பி வைத்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

50 இராஜதந்திரிகளும் 32 அரச சார்பற்ற நிறுவனப் பிரதானிகளும் இவ்வாறு ஜெனீவா பயணம் செய்துள்ளனர் என திவயின செய்தி வெளியிட்டுள்ளது. (2-7)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### புன்னகையுடன் திகழுங்கள்



உனக்குள் இருக்கும் தெய்வத்தன்மையை வெளியே காட்ட வேண்டும். அவ்வாறு செய்தால் உன்னைச் சுற்றியுள்ள எல்லாம் இசைவாக ஒழுங்கு படுத்தப்படும்.

நம்பிக்கையும் நேர்மையும் பக்தியும் உன்னிடம் இருக்கும் வரை அனைத்தும் முன்னேற்றமடையும்.

மனித வடிவம் கொண்ட ஒவ்வொரு உயிரினையும் வழிபடுங்கள்.

ஆசைக்கும் கோபத்திற்கும் அடிமையாய் இருந்தால் உண்மையான சுகந்திரத்தின் இன்பத்தை ஒருவனால் உய்த்துணர முடியாது.

எப்போதும் இனிமையோடும் புன்னகையோடும் இருப்பது ஒருவனை கடவுள் அருகில் கொண்டு செல்லும்.

சுயநலமே, ஒழுக்கக்கேடு, சுயநலமின்மையே நல்லொழுக்கம். இது தான் ஒழுக்கத்திற்கு நாம் கொடுக்கக்கூடிய ஒரே இலக்கணம்.

உங்களுடைய நரம்புகளுக்கு முறுக்கேற்றுங்கள். நமக்குத்தேவை, இரும்பைப் போன்ற தசைகளும் எஃகைப் போன்ற நரம்புகளும். தாம் காலமெல்லாம் அழுது கொண்டிருந்த போதும் இனி அழுகை என்ற பேச்சே இருக்கக்கூடாது. சுயவலிமை பெற்ற மனிதர்களாக எழுந்து நில்லுங்கள்.

# சிரியாவில் பயங்கரவாத தாக்குதல்;
# தொடர்குண்டுவெடிப்பில் 27 பேர் பலி



(டமாஸ்கஸ்)

சிரியாவின் தலைநகரான டமாஸ்கசில் தொடர்ச்சியாக அடுத்தடுத்து இரண்டு குண்டு வெடித்ததில் 27 பேர் பலியாகினர்.

இது குறித்து சிரியாவின் சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

இந்த தாக்குதல்களில் மொத்தம் 27 பேர் பலியாகினர். இதில் அப்பாவி பொதுமக்களும் பொலிஸ் அதிகாரிகளும் அடங்குவர்.

இந்தத் தாக்குதல் சம்பவம் புலனாய்வு மற்றும் பொலிஸ் கட்டடங்களை இலக்க்ாக வைத்து நடத்தப்பட்டுள்ளதாகவும் இந்த தாக்குதல்கள் பயங்கரவாதத் தாக்குதல்கள் என்றும் சிரிய ஊடகத்துறை தகவல்கள் தெரிவிக்கின்றன.


இந்தத் தாக்குதல் சம்பவம் வெடிமருந்துகள் நிரப்பப்பட்ட வாகனங்கள் மூலமே நடத்தப்பட்டுள்ளதாகவும் ஆரம்பக்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் சிரியாவில் ஊடகவியலாளர்களின் பணிகள் முடக்கப்பட்டுள்ளதால் இந்தச் சம்பவங்களைப் பற்றிய உண்மைகளை உறுதிப்படுத்த முடியவில்ல.

கடந்த சில மாதங்களில் தலைநகர் டமாஸ்கசிலும் சிரியாவின் இரண்டாவது பெரிய நகரான அலப்போவிலும் நடந்த தாக்குதல் களிலும் பொது மக்கள் பலர் கொல்லப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஆனால், இந்தத் தாக்குதல் சம்பவங்களை சிரிய அரசுதான் நடத்துவதாக எதிரணியினர் குற்றஞ்சாட்டியுள்ளனர். (2)

# அரபு புரட்சியைப்போல பாக்.கிலும் மக்கள் புரட்சியில் ஈடுபட வேண்டும்
## அல்கொய்தா தலைவர்



(வோஷிங்டன்)

அரபு புரட்சியை போல் பாகிஸ்தானிலும் அந்நாட்டு அரசு மற்றும் இராணுவத்தை எதிர்த்து மக்கள் புரட்சியில் ஈடுபட வேண்டும் என அழைப்பு விடுத்துள்ள அல்கொய்தா தலைவர் அய்மன் அல் ஜவாகிரி, பாகிஸ்தான் இராணுவத்தை அமெரிக்காவின் அடிமைகள் என முத்திரை குத்தியுள்ளார்.

அல்கொய்தா தலைவர் ஜவாகிரி தற்போது எங்கிருக்கின்றார் எனத் தெரியவில்லை. இந்நிலையில் பாகிஸ்தான் மக்களை புரட்சியில் ஈடுபடும்படி அவர் அழைப்பு விடுக்கும் 10 நிமிடம் ஓடக்கூடிய வீடியோ நேற்று முன்தினம் வெளியானது.

அதில் அவர் கூறியிருப்பதாவது,

பாகிஸ்தான் இராணுவம் தனது நம்பிக்கை துரோகத்தை கைவிட வேண்டும் என்றால் அதற்கு எதிராக கோடிக்கணக்கான மக்கள் திரள வேண்டும். பாகிஸ்தான் மக்களுக்கு அரபு புரட்சி வழிகாட்டியுள்ளது.

அரசு மற்றும் இராணுவத்துக்கு எதிராக நீங்கள் புரட்சியில் ஈடுபட் வேண்டும். பாகிஸ்தான் இரணுவம் அமெரிக்காவின் அடிமைகளாகச் செயற்படுகின்றது. நீங்கள் புரட்சியில் ஈடுபடாத வரை அது அமெரிக்காவிற்கு எதிராகச் செயற்படாது என அவர் தெரிவித்துள்ளார். (2)

# ஜனாதிபதி தேர்தலுக்கு நிதி திரட்டும் ஒபாமா
## ஒரே நாளில் 25 கோடி குவிந்தது



(அட்லாண்டன்)

அமெரிக்காவில் எதிர்வரும் நவம்பர் மாதம் ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளது.

இதில் ஜனநாயக கட்சி சார்பில் ஒபாமா மீண்டும் போட்டியிருகிறார்.

அதைத் தொடர்ந்து அவர் தேர்தல் நிதி திரட்டும் பணியில் தீவிரமாக ஈடுபடுகின்றார்.

விமானப்படை விமானம் மூலம் சிகாகோ, ஒடிசி ஆகிய இரண்டு நகரங்களுக்கு ஆயிரத்து 700 கிலோ மீற்றர் தூரம் பயணம் செய்தார்.

அங்கு நடைபெற்ற 5 நிகழ்ச்சிகளில் பங்கேற்று தனது தேர்தல் செலவுக்கு நிதி திரட்டினார்.ஒரே நாளில் அவருக்கு ரூபா 25 கோடி நிதி திரண்டது.

அவரது ஆதரவாளர்கள் சுமார் 2 ஆயிரம் பேர் அவருக்கு இந்த நிதியை வழங்கினார்கள். இது அமெரிக்க வரலாற்றில் மிகப்பெரிய சாதனையாக கருதப்படுகின்றது.

கடந்த 2008 ஆம் ஆண்டு நடந்த தேர்தலின் பொது நிதி திரட்டியதை விட தற்போது தனக்கு அதிக ஆதரவு இருப்பதாக ஒபாமா தெரிவித்தார்.(2)

# பிலிப்பைன்சில் கடும் நிலநடுக்கம்; 5.9 ரிக்டர் கட்டடங்கள் இடிந்து வீழ்ந்ததில் 45பேர் காயம்



பிலிப்பைன்ஸ் நாட்டில் நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் கடும் நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனால் தெற்கு பகுதியில் உள்ள சூரியாகோ, மிடானோவா ஆகிய நகரங்களில் வீடுகள் மற்றும் கட்டடங்கள் குலுங்கின.

இதனால் பீதி அடைந்த மக்கள் வீடுகளை விட்டு வெளியேறினார்கள். வீதிகளில் தஞ்சம் புகுந்தனர். மேலும் கடைகள், வர்த்தக நிறுவனங்களுக்கு சென்றிருந்த மக்களும் ஊழியர்களும் அங்கிருந்து வெளியேறி தெருக்களில் ஓட்டம் பிடித்தனர்.

இந்த நிலநடுக்கம் காரணமாக சூரியாகோ நகரில் பல வீடுகள் மற்றும் கட்டடங்கள் இடிந்தன. அங்குள்ள ஒரு பெரிய வணிகவளாகம் இடிந்து நொறுங்கியது. அப்போது அங்கு ஏராளமான மக்கள் இருந்தனர். அவர்களில் பலர் காயம் அடைந்தனர். வணிகவளாக ஊழியர்களுக்கும் காயம் ஏற்பட்டது.

இதனால் அங்கு கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. அதில் சிக்கியும் கட்டட இடிபாடுகளில் சிக்கியும் 45 பேர் காயம் அடைந்தனர். அவர்கள் அனைவரும் சூரியாகோ மிடானோவில் உள்ள பல்வேறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கிடையே இந்த நிலநடுக்கம் 5.9 ரிக்டர் அளவில் பதிவானதாக அறிவிக்கப்பட்டது. டினாகட் தீவுகளின் தெற்கு பகுதியில் பூமிக்கு அடியில் 16 கிலோ மீற்றர் ஆழத்தில் நில நடுக்கம் ஏற்பட்டுள்ளது.

மேலும் சுனாமி எச்சரிக்கை விடப்படவில்லை. இந்த நிலநடுக்கம் பிலிப்பைன்சின் அண்டை நாடுகளான பியர்மோரியோ, மொமின்கள் குடியரசு நாடுகளிலும் லேசாக உணரப்பட்டது. அங்கு 3 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் பதிவாகியுள்ளது. (2)

# வலுவான லோக்பால் சட்டத்தை இயற்றவலியுறுத்தி போராட்டம் நடத்துவேன்-அன்னா ஹசாரே



(புதுடில்லி)

வலுவான லோக்பால் சட்டத்தை இயற்ற வலியுறுத்தி மீண்டும் மாபெரும் போராட்டம் நடத்துவேன் என்று சமூக ஆர்வலரும் காந்திய வாதியுமான அன்னா ஹசாரே எச்சரிக்கை விடுத்துள்ளார்.

டில்லியில் இந்தியா டுடே இதழ் நிகழ்ச்சியில் நேற்று முன்தினம் பங்கேற்றுப் பேசுகையில் அவர் இவ்விதம் எச்சரித்தார்.

மேலும் அவர் பேசியது,

நாட்டில் எல்லாத் துறைகளிலும் ஊழல் மலிந்துள்ளது. இதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமானால் வலுவான லோக்பால் சட்டத்தை இயற்றுவது அவசியம். நாட்டின் நலன் கருதியே அந்த சட்டத்தை கொண்டு வரத்தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். ஆனால், வலுவான லோக்பால் சட்டத்தை கொண்டுவர மத்திய அரசு ஆர்வம் காட்டவில்லை.

வலுவான லோக்பால் சட்டத்தை இயற்ற வலியுறுத்தி அடுத்த மக்களைவைத் தேர்தல் வரை (2014) தொடர்ந்து பிரசாரம் செய்வோம். மக்களவைதேர்தல் திகதி அறிவிக்கப்படுவதற்கு முன்னதாக வலுவான லோக்பால் சட்டத்தை இயற்ற அரசுக்கு வாய்ப்பளிக்கின்றோம். இலையென்றால் ராம்லீலா மைதானத்தில் அமர்ந்து போராட்டத்தை தொடங்குவோன்.

இருப்பினும் ஊழல் வாதிகளை சிறைக்கு அனுப்பும் அதிகாரம் அந்தச் சட்டத்துக்கு இல்லை. இதனால் தான் ஊழல்வாதிகளை சிறைக்கு அனுப்பும் வகையில் வலுவான லோக்பால் சட்டத்தை கொண்டு வர வலியுறுத்துவோம் என்றார் ஹசாரே. (2)

# உடல்பருமனாக இருந்தால் சம்பளத்தில் 8 வீதம் குறைக்கப்படும்
## பிரித்தானிய அரசு அதிரடி

பிரித்தானியாவில் பொலிஸ் அதிகாரிகள் உடல்நலக்குறைவுடன் மிககுண்டாக இருந்தால் அவர்களின் சம்பளத்தில் பிடித்தம் செய்யப்படும் என அரசு அறிவித்துள்ளது.பொலிஸ் அதிகாரிகளை தெரிவு செய்யும் போது ஆரோக்கியம் , கட்டுமஸ்தான உடல் போன்வற்றை சரிபார்த்து தான் தெரிவு செய்கின்றார்கள்.ஆனால், பணியில் சேர்ந்த உடன் பெரும்பாலான நபர்கள் தங்களை, உடலை கவனிப்பதில்லை. ஆரோக்கியத்தில் அக்கறை எடுத்துக் கொள்வதில்லை.

இதனால் தங்கள் பணிகளை செய்வதில் மிகுந்த சிரமம் அடைகின்றனர். இதனைக் கட்டுப்படுத்த பிரித்தானிய அரசு புதிய நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டுள்ளது. மேலும் இவர்களுக்கு சில கட்டுப்பாடுகளை விதிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன்படி பொலிஸ் அதிகாரிகளுக்கு உடல் பரிசோதனைகள் நடத்தப்படும்.

இதில் 3 சோதனைகளுக்குள் உடல் எடையை இவர்கள் குறைக்க தவறினால் அவர்களது சம்பளத்தில் 8 சதவீதம் குறைக்கப்படும் என் அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான அறிவிப்பை உள்துறை செயலர் வெளியிட்டுள்ளார். (2)

ஆசிய கிண்ண கிரிக்கெட்

# பாக்.தாக்க இந்தியா போட்டுத் தாக்கியது

## ஹோலியின் அதிரடியால் 6 விக்கெட்டுகளால் வெற்றி

micromax asia cup 2012



ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடரில் நேற்று நடைபெற்ற போட்டியில் பாகிஸ்தான் அணியை 6 விக்கெட்டுக்களால் இந்திய அணி தோற்கடித்தது.

நேற்றைய ஆட்டத்தில் இந்திய - பாகிஸ்தான் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாட முடிபு செய்தது.

இதன்படி களமிறங்கிய பாகிஸ்தான் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான ஹபீஸ் - நசீர் ஜம்ஷத் தொடக்கம் முதலே இந்தியாவின் பந்துவீச்சை நேர்த்தியாக கையாண்டு விளையாடினர்.

சிறப்பாக விளையாடிய ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் இருவரும் சதம் அடித்தனர். இறுதியில் பாகிஸ்தான் அணி 35.5 ஓவர்களில் 224 ஓட்டங்களை எடுத்திருந்த போது தொடக்க விக்கெட்டை அஸ்வின் பிரித்தார்.

112 ஓட்டங்கள் எடுத்திருந்த ஜம்ஷத் ஆட்டமிழந்தார். அடுத்து 2-வது விக்கெட்டுக்காக உமர் அக்மல் களமிறங்கினார்.

இந்நிலையில் பாகிஸ்தான் அணி மேலதிகமாக ஒரு ஓட்டத்தை சேர்த்தபோது 2-வது விக்கெட்டை இழந்தது.

ஹபீஸ் 105 ஓட்டங்கள் எடுத்த நிலையில் டிண்டா பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ ஆகி வெளியேறினார்.

அடுத்து உமர் அக்மலுடன் யுனுஸ்கான் ஜோடி சேர்ந்தார். உமர் அக்மல் 28 ஓட்டங்களை எடுத்த நிலையில் பிரவீண்குமார் வீசிய பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். அதன்போது பாகிஸ்தான் அணி 42.5 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 273 ஓட்டங்களை எடுத்திருந்தது.

அடுத்து யூனுஸ்கானுடன் அப்ரிடி ஜோடி சேர்ந்தார். அப்ரிடி அதிக நேரம் நீடிக்கவில்லை. 9 ஓட்டங்கள் மட்டுமே எடுத்த நிலையில் இர்பான் பதானின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

அடுத்து 5-வது விக்கெட்டுக்காக யூனுஸ்கானுடன் அஸாம் ஜோடி சேர்ந்தார். பாகிஸ்தான் அணி 323 ஓட்டங்களை எடுத்திருந்தபோது யூனுஸ்கான் 52 ஓட்டங்கள் எடுத்தநிலையில் ரன் அவுட் ஆனார்.

அடுத்து அணித் தலைவர் மிஸ்பா உல் ஹக், அஸாமுடன் ஜோடி சேர்ந்தார். அஸாம் 4 ஓட்டங்களில் டிண்டா பந்தில் ஆட்டமிழந்தார்.

நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் பாகிஸ்தான் 6 விக்கெட்டை இழந்து 329 ஓட்டங்களைக் குவித்தது.

330 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்குடன் இந்தியா களமிறங்கியது.

இந்தியாவுக்கு முதல் ஓவரிலேயே அதிர்ச்சி காத்திருந்தது.

ஹபீஸ் வீசிய 2-வது பந்தில் காம்பீர் ஓட்டமேதும் எடுக்காமல் எல்பிடபிள்யூ ஆகி வெளியேறினார்.

அடுத்து டெண்டுல்கருடன் விராட் ஹோலி ஜோடி சேர்ந்தார்.

இருவரும் சிறப்பாக விளையாடி அரைச் சதம் அடித்தனர்.

நேற்றைய போட்டியிலும் டெண்டுல்கர் சதம் அடிப்பார் என்று ரசிகர்கள் எதிர்பார்த்த நிலையில் 52 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

அடுத்து விராட் ஹோலியுடன் ரோகித் சர்மா ஜோடி சேர்ந்தார்.

ஹோலி சிறப்பாக விளையாடி சதம் அடித்தார்.

இது அவரது 11-வது சதமாகும்.

இதன்பின் விராட் ஹோலி விஸ்வரூபம் எடுத்தார்.

அவருக்கு ஜோடி சேர்ந்த ரோகித் சர்மாவும் தன் பங்கிற்கு அரைச்சதத்தை கடந்து 68 ஓட்டங்களை எடுத்த நிலையில் ஆட்டமிழக்க, அடுத்து சுரேஸ் ரெய்னா ஹோலியுடன் ஜோடி சேர்ந்தார்.

183 ஓட்டங்கள் எடுத்த நிலையில் திறமையாக விளையாடிய ஹோலி உமர் குல் பந்துவீச்சில் ஹபீஸிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அவரது அதிரடியில் 22 பவுண்டரிகளும் ஒரு சிக்ஸரும் அடங்கும் அதன் பின் அணித் தலைவர் தோனி ரெய்னாவுடன் இணைந்தார்.

இருவரும் சேர்ந்து அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றனர். இறுதியில் 2 ஓவர்கள் மீதமுள்ள நிலையில் இந்தியா வெற்றிக் கனியை சுவைத்தது.

6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தானை பந்தாடியாது இந்தியா. சுரேஷ் ரெய்னா - 12 ஓட்டங்களுடனும் தோனி 4 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தனர்.

வெற்றிக்கு வித்திட்ட விராட் ஹோலி ஆட்டநாயகனாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இவ்வெற்றின் மூலம் இத்தொடரின் இறுதிப்போட்டிக்கு தகுதி பெறுவதற்கான வாய்ப்பை இந்தியஅணி தக்கவைத்துக் கொண்டுள்ளது.

பாகிஸ்தான் அணி ஏற்கெனவே இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதனால் இலங்கை-பங்களாதேஷ் அணிகளுக்கு இன்னுமொரு போட்டி எஞ்சி உள்ள போதிலும் இலங்கை அணி இறுதிப் போட்டிக்கு தெரிவாகுவதற்கான வாய்ப்பை இழந்துள்ளது.

எனினும் இலங்கை அணியுடனான போட்டியில் பங்களாதேஷ் அணி வென்றால் பங்களாதேஷ் அணி இறுதிப் போட்டிக்கான வாய்ப்பைப் பெறும்.

இத்தொடரில் நாளை இலங்கை - பங்களாதேஷ் அணிகள் மோதவுள்ளன. இறுதிப் போட்டி எதிர்வரும் 23ஆம் திகதி நடைபெறவுள்ளது.

---

### வடக்கு-...

நடைபெற்றுவரும் சூழ்நிலையில், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி மாநாட்டில் எடுக்கப்பட்ட மற்றுமொரு தீர்மானத்தின்படி, இப்பேச்சுவார்த்தையில் தமது கட்சி உட்பட சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் உள்வாங்கப்பட வேண்டும் என அரசாங்கத்திடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

அக் கோரிக்கையில் 13-வது அரசியல் யாப்பு திருத்தத்தின்படி அதிகாரப் பகிர்வு முழுமையாக வழங்கப்பட வேண்டியதன் அவசியமும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் ஆட்புல ஒருமைப்பாட்டிற்கு சவால் விடுகின்ற அனைத்து விதமான முயற்சிகளையும் எதிர்பார்ப்பதாகவும் இம்மாநாட்டில் மேலுமோர் தீர்மானம் நிறை வேற்றப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் சகோதரரும் மத்திய பொருளாதார அபிவிருத்தி அமைச்சருமான பசில் ராஜபக்ஷ இந்த மாநாட்டில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டிருந்தார். (எ-8)

---

### அமெரிக்காவும்-...

முழுமையான ஆதரவளிப்பதாக உறுதியளித்துள்ளன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் அங்கம் வகிக்கும் 13 ஆபிரிக்க நாடுகளில் சில நாடுகள் தீர்மானத்திற்கு ஆதரவான நிலைப்பாட்டையும், சில எதிரான நிலைப் பாட்டையும் கொண்டுள்ளன.

முஸ்லிம் நாடுகளின் ஆதரவினை திரட்டும் நோக்கில் அமைச்சர் ரவூப் ஹக்கீம், எம்.எல்.ஏ.எம்.அதவுல்லா, பிரதி அமைச்சர் பைசர் முஸ்தபா ஆகியோர் மத்திய கிழக்கு நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். எதிர்வரும் 22-ம் திகதி பெரும்பாலும் வாக்கெடுப்பு நடத்தப்படக் கூடுமென எதிர்பார்க்கப்படுகின்றது. (எ-8)

---

### இந்தியா ஆதரி-...

நினைக்கின்றேன் எனவும் கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த சம்பந்தன் குறிப்பிட்டார்.

தென்னிந்தியாவிலிருந்து கடுமையான அழுத்தங்கள் பிரயோகிக்கப்படும் நிலையிலும் மனித உரிமைகள் கூட்டத் தொடரில் எவ்வாறான நிலைப்பாட்டை எடுப்பதென்பதையிட்டு இதுவரையில் இந்தியா கருத்து எதனையும் வெளி யிடவில்லை. இருந்த போதிலும் அண்டை நாடு ஒன்றைப் பாதிக்கும் வகையிலான தீர்மானம் எதனையும் தாம் ஆதரிக்கப் போதில்லை என இந்திய வெளிவிவகார அமைச்சர் இந்திய நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தமை கவனிக்கத்தக்கது. (எ-8)

---

### பொதுமக்கள்-...

இது குறித்து அவர் மேலும் தெரிவித்த தாவது; அடிதாங்க முடியாமல் பொதுமக்கள் தமது மாடுகளை மீண்டும் பட்டிக்குள் அடைத்த பின்னரும் படையினர் பட்டிக்குள் வந்து அவர்களை கட்டிப்போட்டு மீண்டும் தாக்கியுள் ளனர். இது குறித்து அந்தப் பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் எனக்குத் தகவல் தெரிவித்துள்ளனர் என சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார். (எ-8)

---

### ஜெனிவாவில்...

கருத்துக்களை ஊடகவியலாளர் சுனந்த தேசப்பிரிய மற்றும் கொழும்பைச் சேர்ந்த அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளான பாக்கியசோதி சரவணமுத்து, நிமல்கா பெர்ணான்டோ, சுனிலா அபயசேகர போன்றோரும் வன்மையாக மறுத்ததால் பல சந்தர்ப்பங்களில் கடுமையான வாக்குவாதங்கள் இடம்பெற்றன. (எ-8)

---

### கூட்டமைப்பின் ...

தளங்கள் செயற்படுகின்றன. அவை தமக்குத் தெரிந்த வகையில் செய்திகளை வெளியிடுகின்றன. அவற்றினை நம்பி உள்ளூர் ஊடகங்களும் செய்திகளையும் கட்டுரைகளையும் எழுதி வருகின்றன. உண்மையில் ஒரு கட்சியின் தலைவருக்கு முடிபெடுக்கும் அதிகாரம் இருக்கிறது. அந்த வகையிலேயே கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் ஜெனிவா தொடர்பிலான முடிபினை எடுத்தார். ஏனையவர்கள் தெரிவிப்பது போன்று சுமந்திரன் இந்த முடிபினை எடுக்கவில்லை. கூட்டமைப்பின் தலைவர் எடுத்த முடிபினையே சுமந்திரன் வெளியே அறிவித்தார்.

உண்மையில் சுமந்திரன் மிகத் திறமை வாய்ந்த சட்டத்தரணி. அவர் அரசியலுக்கு புதிது என்று சிலர் சொல்லலாம். ஆனால் அவர் திறமை வாய்ந்தவர். அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் இருப்பது கூட்டமைப்பிற்கு பெரும் வரப்பிரசாதம் ஆகும். ஜெனிவாவிற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செல்வதனால் ஒன்றையும் சாதித்து விடப் போவதில்லை.

இராஜதந்திர அடிப்படையிலேயே கூட்டமைப்பின் தலைவர் ஜெனிவா தொடர்பான தீர்மானத்தை எடுத்தார். ஒரு கட்சியின் தலைவருக்கு முடிபெடுக்கின்ற அதிகாரம் இருக்கும். அதனையே அவர் செய்தார். கிரிக்கெட் அணி ஒன்றை எடுத்துக் கொண்டால் அதன் தலைவரே போட்டி தொடர்பிலான முடிபுகளை எடுப்பார். அதே போன்று தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் முடிபினை எடுத்தார்.

ஊடகங்கள் ஜெனிவா விவகாரத்தினை கையிலெடுத்துக் கொண்டு கூட்டமைப்பின் தலைமைக்கு எதிராக எழுதுகின்றன. தலைமையை இல்லாமல் செய்வதன் மூலம் எதனையும் சாதித்துவிட முடியாது. இதன் பின்னணியில் யார் இருக்கிறார்கள் என்று தமக்குத் தெரியும் என்று மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

மன்னார் நகர மற்றும் பிரதேச சபைகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் 25இற்கும் மேற்பட்டோர் உள்ள போதிலும் 15 பேர் மட்டுமே இக் கலந்துரையாடலில் கலந்து கொண்டிருந்ததாக தெரிய வருகின்றது.

மாவை சேனாதிராஜா உரையாற்றத் தொடங்கியதில் இருந்து நிகழ்வு முடியும் வரையில் உரையாற்றியதாகவும் எவரும் கேள்வி கேட்பதற்கு சந்தர்ப்பம் வழங்கவில்லை என்றும் உறுப்பினர்கள் சிலர் விசனம் தெரிவித்துள்ளனர். (எ-5)

---

## புலிகளின் ஆதரவாளர்கள்தான்...

தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது;

சுமார் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் முக்கியஸ்தர்களைக் கொலை செய்த விடுதலைப் புலிகள் இயக்க ஆதரவாளர்கள்தான் இன்று ஜெனிவாவில் மனித உரிமை பற்றி பேசுகின்றனர்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் வெற்றி பெற்று முதலமைச்சராக பதவிப் பிரமாணம் செய்வதற்காக ஜனாதிபதி மாளிகைக்கு வந்த சிவனேசதுரை சந்திரகாந்தனை தற்கொலைத் தாக்குதல் மூலம் கொலை செய்ய முயற்சித்தவர்கள்தான் இன்று ஜெனிவாவில் மனித உரிமைகள் பற்றிப் பேசுகின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் சுமார் 250 புத்திஜீவிகளையும், 2 ஆயிரத்திற்கு மேற்பட்ட கல்விமான்கள் மற்றும் முக்கியஸ்தர்களை இழந்த பின்னர் தான் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி உருவாக்கப்பட்டுள்ளது.

அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்காக ஜனநாயக நீரோட்டத்திற்கு வந்த தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அரசியல் கட்சியாகப் பதிவு செய்யப்பட்டு உள்ளூராட்சி மற்றும் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டு அமோக வெற்றி பெற்றுள்ளது.

இவ்வாறு ஜனநாயக நீரோட்டத்திற்கு வந்த தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி விகிதாசாரத் தேர்தல் முறையில் அமோக வெற்றியீட்டிய கட்சி என்பதை நான் கூறிவைக்க விரும்புகிறேன்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் கிழக்கு மாகாண முதலமைச்சர் நியமிக்கப்பட்டதையடுத்து ஆயுதக் குழுவைச் சேர்ந்தவர் கிழக்கு மாகாண முதலமைச்சர் எனக் கூறி, ஐரோப்பிய நாடுகள் உதவி வழங்க மறுத்தது.

இதன்போது ஜனாதிபதி கிழக்கின் உதயம் எனும் வேலைத்திட்டத்தின் கீழ் உதவிகளை வழங்கி கிழக்கு மாகாணத்தைப் பலப்படுத்தினார்.

இன்று கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தனின் தலைமையில் சகல இன அமைச்சர்களும் ஒன்றிணைந்து கிழக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்துள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் பொத்துவில் தொடக்கம் புல்மோட்டை வரை 17 புதிய பாலங்கள் , கிழக்கு மாகாண முதலமைச்சர் சந்திரகாந்தன் தலைமையிலான கிழக்கு மாகாண சபையினால் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனினால், கடந்த 30 ஆண்டு காலத்தில் ஒரு சிறிய பாலத்தினையாவது கட்ட முடிந்ததா? என அவர் தனது உரையில் மேலும் தெரிவித்துள்ளார். (எ-8)

# தமிழக கொந்தளிப்பால்...

தாழ்த்தினால், அது தமிழ்நாட்டில் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும் என இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிடமும், காங்கிரஸ் கட்சியின் தலைவர்களிடமும் மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் விளங்கப்படுத்தி வருவதாகத் தெரிகிறது.

இந்த விவகாரத்தில் நாடாளுமன்றத்தில் வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணா அளித்த விளக்கம் சரியல்ல என்ற நிலையை தமிழக மக்களின் உணர்வாக உள்துறை அமைச்சர் சிதம்பரம் பிரதிபலித்து வருவதாகவும் தெரிய வந்துள்ளது.

இதையடுத்து, இலங்கைக்கு எதிரான தீர்மான விவகாரத்தில் மத்திய அரசு எடுக்க வேண்டிய நிலை, அந்தத் தீர்மானத்தில் சில திருத்தங்களைச் செய்து ஆதரவளிப்பது போன்ற முயற்சிகளைத் தற்போது மத்திய உள்துறை அமைச்சர் சிதம்பரம் தீவிரமாக மேற்கொண்டு வருவதாக இந்திய வெளிவிவகார அமைச்சக வட்டாரம் உறுதி செய்துள்ளது.

இந்தியாவிடம் இருந்து கட்டமைப்பு பொருளாதார உதவிகளைப் பெற்றுக் கொள்ளும் அதேவேளை, இந்தியாவுக்கு எதிரான காரியங்களில் ஈடுபடும் பாகிஸ்தானுடனும் சீனாவுடனும் கைகோர்த்துக் கொண்டு வலம்வரும் இலங்கையின் போக்கு இந்தியாவுக்கு அதிருப்தியை அளித்துள்ளதாக தெரிகிறது.

அத்துடன், இந்தியாவின் உதவிகளுக்கு உரிய மரியாதையும், மதிப்பையும் இலங்கை அரசாங்கம் கொடுப்பதில்லை என்ற தகவலும் மத்திய அரசுக்கு கிடைத்துள்ளது. இந்நிலையில் இலங்கைக்கு எதிரான திருத்தப்படும் தீர்மானத்தை ஆதரிப்பதன் மூலம் அந்நாட்டுக்கு ஒரு எச்சரிக்கை சமிக்ஞை அனுப்பவும் மத்திய அரசு முடிபு செய்துள்ளது.

இந்தத் தருணத்தில், இலங்கைக்கு எதிரான கடுமையான நிலையை இந்தியா எடுக்க வேண்டும். அது இராஜீய ரீதியாக இந்தியாவின் செல்வாக்கைச் சர்வதேசத்தில் நிலை நிறுத்திக் கொள்ள உதவுவதுடன், உள்நாட்டில் சரிந்து வரும் தனது செல்வாக்கையும் சரி செய்து கொள்ள உதவும் என்ற சிதம்பரத்தின் வாதத்தை பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் பிரணாப் முகர்ஜி, ஏ.கே.அந்தோனி ஆகிய மூத்த அமைச்சர்கள் ஏற்றுக்கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

ஒருபுறம் புகையிரத பயணக்கட்டணத்தை உயர்த்திய விவகாரத்தில் மத்திய புகையிரத அமைச்சர் தினேஷ் திரிவேதியை நீக்க வேண்டும் என்று திரிணாமூல் காங்கிரஸ் தலைவர் மம்தா பானர்ஜி நெருக்கடி கொடுத்து வருகின்றார். மறுபுறம், இலங்கை விவகாரத்தில் அந்நாட்டுக்கு அனுசரணையான நிலையை இந்தியா கடைப்பிடித்தால், அது உள்நாட்டு அரசியலில் மேலும் நெருக்கடியைத் தரும் என்றும் சிதம்பரம் விளக்கியதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த முன்னேற்றங்களின் பலனாக ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக் குழுவின் கூட்டத்தில் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்படும் தீர்மானத்தில் சில திருத்தங்களுடன் இந்தியா ஆதரவளிக்க தயாராகி வருவதாக மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (எ-8)


## உணவக பாவனைக்கான பொருட்கள் விற்பனைக்கு

பிரிஜ், கொத்து ரொட்டி மேசை மற்றும் அடுப்பு உட்பட்ட உணவகப் பாவனைக்குரிய பல பொருட்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு :-

T.P: 0213209066, 0775473124

(C-6112)


## மரண அறிவித்தல்

### முத்துலிங்கம் தவம்

காட்டுப்புலம் தொண்டமனாற்றை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்துலிங்கம் தவம் அவர்கள் 18.03.2012 நேற்று ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.


அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி முத்துலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், சிங்காரம்- மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மகளும், சின்னத்தம்பி-தங்கம் தம்பதியரின் மூத்த மருமகளும், விஜயானந்தன் (திருகோணமலை) அமரர் பிரேமானந்தன், ஜெயானந்தன், நளினி (சமுர்த்தி உத்தியோகத்தர்), ரஜனி, சுதானந்தன், உதயானந்தன் (காவல் துறைப் பரிசோதகர்- பொலிஸ் பயிற்சிக் கல்லூரி, களுத்துறை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ரஞ்சினிதேவி, சிறிரஞ்சினி, பார்த்தீபன், (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் அஜஸ், அக்னேஷ், முகேஷ், தேஷா, தினேஷா, மேதா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (19.03.2012) திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காட்டுப்புலம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

காட்டுப்புலம், தொண்டமனாறு. (C-6113) தகவல்: குடும்பத்தினர்

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



### அமரர் செல்லையா கைலாயநாதன்

தோற்றம்: 23.09.1950 மறைவு: 18.02.2012

*கடந்த 18.02.2012 அன்று இறைபதம் எய்திய எமது குடும்ப விளக்கின் வீட்டுக் கிருத்திய நிகழ்வு இன்று 19.03.2012 திங்கட்கிழமை எமது இல்லத்தில் இடம் பெறவுள்ளது. அவரது ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் அதனை தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

அன்னாரது மரணச் செய்தி அறிந்து வருகை தந்து ஆறுதல் மொழி கூறியோருக்கும், மலர் வளையம் வைத்தும், கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டோருக்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியோருக்கும், நோயுற்ற வேளையில் உதவி புரிந்த போதனா வைத்தியசாலை சமூகத்தினருக்கும், மேலும் பல வழிகளில் உதவி புரிந்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

குறிப்பு: இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

23, அம்மன் வீதி, கந்தர்மடம். (7747) - குடும்பத்தினர்

## நன்றி நவிலலும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்

தோற்றம் 22 . 12 . 1926



மறைவு 20 . 02 . 2012

### அமரர் ஆறுமுகம் காசிப்பிள்ளை

கடந்த 20.02.2012 சிவராத்திரி தினத்தன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் இறுதிக் கிரியைகளில் பங்கேற்று பல்வேறு வகைகளில் உதவி புரிந்த அனைவரிற்கும் மற்றும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் மேலும் எமது துயரில் பங்கு கொண்டு உதவிய உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரிற்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், நாளை 20.03.2012 செவ்வாய்க்கிழமை காலை 6.00 மணியளவில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் மறுநாள் 21.03.2012 புதன்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும், தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு தாழ்மையுடன் வேண்டிக் கொள்கின்றோம்.


அத்துடன் இதனை தனிப்பட்ட அழைப்பாகக் கருதுமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

மணியம்தெணி, வியாபாரிமூலை, பருத்தித்துறை. - குடும்பத்தினர்

Tel: 0777940219, 0752430220

(C-6086)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



அன்னை மடியில் 19.06.1933

அம்பிகை அடியில் 18.02.2012

சமூக சேவகி
அமரர்

### முத்தையா ஞானேஸ்வரி

*ஐயப்பன் திருக்கோயில் அழகொளிரச் செய்தவளே*
*அம்மாவுன் கைபட்டால் அத்தனையும் கைகூடும்*
*செய்யாத பணியில்லைச் சேவையினிப் போதுமென்றா*
*சொல்லாமல் சென்றுவிட்டாய் சுந்தரியே சாந்தி கொள்வாய்*
*கையாரத் தொழுதருவி கண்ணீராய்ச் சொரிகின்றோம்*
*காரியங்கள் பல செய்தாய் கண்மூடிக் கிடக்கின்றாய்*
*செய்யாயோ இனிச் சேவை சிறப்புறவே நயினைக்கு*
*வந்தாயே ஞானம்மா! வானுலகு சென்றாள்வாய்!*

கடந்த 18.02.2012 சனிக்கிழமை சிவபதப் பேறடைந்த எமது குடும்பத் தலைவி அமரர் முத்தையா ஞானேஸ்வரி அவர்களின் மரணச் செய்தி அறிந்து நேரடியாக வருகை தந்து ஆறுதல் கூறி துயரில் பங்குகொண்டவர்களுக்கும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலிருந்தும் தொடர்பு சாதனங்கள் மூலம் அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலிகள் மூலமும் மலர்வளையம் சாத்தியும் தங்கள் கண்ணீர்க் காணிக்கைகளை செலுத்தியவர்களுக்கும் கூட இருந்து சகல வழிகளிலும் எமக்கு தேவையான உதவிகளைப் பகிர்ந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு அனைவரையும் இன்று (19.03.2012) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

8ஆம் வட்டாரம் நயினாதீவு. (C-6108) - குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.03.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.